விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், வீடுகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 19 ஞாயிற்றுக்கிழமை (04.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

# விசேட திட்டங்கள் மூலம் வடக்கை முன்னேற்றுங்கள்

## பிரதமரிடம் பிஸ்வால் வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கை மக்களின் நன்மை மற்றும் முன்னேற்றம் கருதி ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக குறிப்பிட்ட அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் வடக்கு மக்களுக்கான விசேட திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.**



2016 இற்கான இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து கலந்துரையாடியபோதே நிஷா பிஸ்வால் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் தேசிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நல்லாட்சி வேலைத்திட்டம் தொடர்பில் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் பாராட்டுத் தெரிவித்ததாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஆசிய வலய நாடுகள் எதிர்நோக்கும அரசியல் சவால்கள் குறித்தும் இரு தரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

கண்டி - கொழும்பு - அம்பாந்தோட்டை பொருளாதார அபிவிருத்தித் திட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்தும் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளருக்கு தெளிவுபடுத்தப்பட்டதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம், நல்லிணக்க செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் யுத்தத்தினால் பாரிய பாதிப்புகளுக்கு இலக்கான வட மாகாணத்தில் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்காக விசேடமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையான திட்டங்கள் தொடர்பாகவும பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறறும் நிஷா பிஸ்வால் இடையே கலந்துரையாடப்பட்டுள்ளது. (செ-11)

## ‘தக்க தருணத்தில் வருவோம்’

## கேரள கஞ்சாவுடன்

## அத்துமீறி குடியமரவுள்ளோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

2016 இற்கான இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து கலந்துரையாடியபோதே நிஷா பிஸ்வால் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் தேசிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நல்லாட்சி வேலைத்திட்டம் தொடர்பில் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் பாராட்டுத் தெரிவித்ததாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஆசிய வலய நாடுகள் எதிர்நோக்கும அரசியல் சவால்கள் குறித்தும் இருதரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

கண்டி - கொழும்பு - அம்பாந்தோட்டை பொருளாதார அபிவிருத்தித் திட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்தும் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளருக்கு தெளிவுபடுத்தப்பட்டதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம், நல்லிணக்க செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் யுத்தத்தினால் பாரிய பாதிப்புகளுக்கு இலக்கான வட மாகாணத்தில் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்காக விசேடமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையான திட்டங்கள் தொடர்பாகவும பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிஷா பிஸ்வால் இடையே கலந்துரையாடப்பட்டுள்ளது. (செ-11)

# 'தக்க தருணத்தில் வருவோம்'

## சு.கட்சி மாநாடு குறித்து சமல் கருத்து

(கொழும்பு)

நாளை (இன்று) இடம்பெறவுள்ள சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாடு மிகத் தூரத்தில் நடைபெறுகின்றது. அதனால் அங்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றைய தினம் மாத்தறையில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.

65ஆவது வருட பூர்த்தி மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி இன்னும் தான் முழுமையாக சிந்திக்கவில்லை எனவும், சிலவேளை கலந்து கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தாங்கள் ஏன் இது தொடர்பில் வெளிப்படையாக எதனையும கூறவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது,

சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரே நான், அதனால் கட்சி எனக்கு அவசியம். மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி தற்போது கூற முடியாது. மேலும் கலந்து கொள்ள வேண்டிய சரியான சந்தர்ப்பத்தில் இவ்வாறான வைபவங்களில் நான கலந்து கொள்வேன் எனவும் சமல் ராஜபக்ஷ தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கேரள கஞ்சாவுடன் குடும்பஸ்தர் கைது!



(மன்னார்)

தலைமன்னார் பட்பிடி பகுதியில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாப்பொதிகளை தன்வசம் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரை நேற்று சனிக்கிழமை காலை கைது செய்துள்ளதாக மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ்பரிசோதகர் உ.கௌ

16ஆம் பக்கம் பார்க்க....

# அத்துமீறி குடியமரவுள்ளோம்!

## வலி.வடக்கு மக்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 3 மாத காலப்பகுதிக்குள் வலி. வடக்கிற்குள் அத்துமீறி நுழைந்து கொட்டகைகள் அமைத்து வசிப்பதற்கும் அங்கு உணவு சமைத்து உண்பதற்கும் தீர்மானித்துள்ளதாக வலி.வடக்கு மக்கள் எச்சரித்துள்ளனர்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும், வலி. வடக்கு மீள்குடியேற்ற மக்கள் ஒன்றியமும் இணைந்து நேற்று நடத்திய கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் நலன்புரி முகாமிற்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 6 மாத காலத்திற்குள் வலி. வடக்கு மக்களை மீள்குடியேற்றம் செய்வேன் என வாக்குறுதி அளித்தார்.

ஆனால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், தற்போது 5 இடங்களை கையளிக்க முடியாது என கூறுவதுடன் மீள்குடியேற்றப்படவுள்ள மக்களுக்கு 2 பரப்பு காணியும், கவர்ச்சியான நட்டஈடுகளும், சலுகைகளும் தருவதாக கூறுகின்றார்கள்.

பான் கீ மூன் தற்போதுவருகை தந்த போது, மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது, பான் கீ

02ஆம் பக்கம் பார்க்க....

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

65 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் அவரது கணவன் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ் திருநெல்வேலி கேணியடி லேன் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீகன

02ஆம் பக்கம் பார்க்க....

# தண்டவாளத்திலிருந்து விலகியது ரயில்




(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி நேற்றைய தினம் அதிகாலை 5.30 மணிக்கு புறப்படத்தயாராகவிருந்த உத்திரதேவி புகையிரதத்தின் கட்டுப்பாட்டுக் கருவியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இதனால் புகையிரத பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகி 150 மீற்றர் தூரம் வரை தரையில இழுத்துச் சென்றதால் புகையிரதத்தில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. குறித்த விபத்தில் உயிர்ச்சே தம் எவையும் ஏற்படவில்லை.

02ஆம் பக்கம் பார்க்க....

# 452 அகதிகள் தாயகம் திரும்பல்

இந்தியாவில் தங்கியிருந்த இலங்கை அகதிகளில் 452 பேர் தாயகம் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய அரசாங்கங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் ஆகியவற்றின் ஆதரவுடன் இவர்கள் 2015-2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் தாயகம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்கோவை திருவருள்மிகு
கற்பகப்பிள்ளையார்
தேவஸ்தானம்
இருபாலை, கோப்பாய்

விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி

கற்பகன் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் ஆவணி மாதம் 20-ம் நாள் (05.09.2016) திங்கட்கிழமை ஆவணி சதுர்த்தி நன்னாளில் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 06.00 மணி முதல் மாலை 04.00 மணி வரையும் பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) செய்வதற்கு கற்பகப்பிள்ளையார் திருவருள் கைகூடியுள்ளது. அன்று மாலை 04.00 மணி முதல் கற்பகப்பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும், விஷேட பூஜை வழிபாடுகளும் மாலை 06.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று எம் பெருமான் வீதியுலா வருகின்ற கண்கொள்ளாக் காட்சியும் நடைபெறும்.

இருபாலை, கோப்பாய். — இங்ஙனம் தேவஸ்தானம்


# குடும்பப் பெண்...

நாதன் செல்லம்மா (வயது 65) என்ற வயோதிப பெண்ணே இதில் உயிரிழந்த வராவார்.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ் நீதவான் சடலத்தினை பார்வையிட்டதுடன், யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (செ-4.30)

# தண்டவாளத்தில்...

என்பதுடன் 2 தண்டவாளங்கள் முறிவடைந்துள்ளன.

அதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் காங்கேசன்துறைக்கான புகையிரத சேவைகள் வழமைபோல் இடம்பெறும் என யாழ். புகையிரத நிலைய அதிபர் ரி. பிரதீபன் தெரிவித்துள்ளார். (செ-4.9, 60.8 5)

# அத்துமீறி...

மூன் மக்களை கண்டுகொள்ளாது சென்று விட்டார். இனி அரசியல்வாதிகளை நம்பாது, எமது சொந்த மண்ணுக்கு செல்வதாக தீர்மானித்துள்ள நிலையில், பலாலி அந்தோனியார் ஆலய எல்லைக்குள் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, அங்கு கொட்டகைகள் அமைத்து அங்கு இருந்து உணவு சமைத்துச் சாப்பிடுவதாக தீர்மானித்துள்ளோம். அந்த வகையில், மீள்குடியேற்ற மக்கள் சார்பில் இயங்குகின்ற அமைப்புக்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பல்லைக்கழக சமூகத்தினர் உட்பட பொது மக்கள் அனைவரையும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு தரவேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-4)

# மின்சாரம் தாக்கியதில் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் மூவர் எரிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் உடுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கடை ஒன்றின் மேல் விளம்பரப் பலகையை கட்டும் போதே மேற்படி அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இதில் உடுவிலை சேர்ந்தவர்களான சதீஸ்வரன் (வயது 42), விதூசன் (வயது 21), சயோடின் என்ற மூவருமே எரிகாயங்களுக்கு உள்ளானவர்களாவர். (செ-30)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல், மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 18.09.2016 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 19.09.2016 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

காணி விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 3 பரப்பு வெறும் காணியும், 5பரப்பு-கிணறு; உடைந்த திருத்தக்கூடிய வீட்டுடன் விற்பனைக்குண்டு.

T.P:0778730129

வேலையாள் தேவை

அமுல் கிறீம் ஹவுசுக்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.



- உணவு பரிமாறுபவர்
- சமையல் உதவியாளர்
- ரொட்டி தயாரிப்பாளர்
- ஐஸ்கிறீம் தொழில் தெரிந்தோர்

தொடர்புகளுக்கு :- 021 222 5707

Vaccancies

முன்னனி ஆங்கில பாடசாலையான BIS இன் மன்னார் மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்

1. English Teachers
Basic Salary 25000/= to 47500/=
2. Course Coordinator
Basic Salary 15000/= to 25000/=
3. Receptionist
Basic Salary 12000/= - 20000/=

ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்

email : bisvavuniyainfo@gmail.c
271, Mannar Rd, Vavuniya.
Tel : 077-6844016

வாடகைக்கு அறைகள்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் (ராஜா தியேட்டருக்கு அண்மையில்) அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு :-
077 445 8582
077 942 4952

கடைகள் வாடகைக்கு

முல்லைத்தீவு நகரில்
60 அடி நீளம் 12 அடி அகலம்;
40 அடி நீளம் 16 அடி அகலம் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
077 5360958

VALAMPURII Advertisements

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில்

Full / Part time

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.

BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 021-4930041
51, Filed Rd, Mannar. Tel : 023-4924124
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590
13, 1st Chaphel Rd, Colombo-06. Tel : 011-2362775

Hot line :
077-6844016
BRITISH COUNCIL IELTS
Students Registration Centre

இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1 Kg) மொத்தமாகவும் (ரூ.100/=) சில்லறையாகவும் (ரூபா.110/=) பெற்றுக்கொள்ளலாம்

சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சிக்னல் லைற்றுக்கு அருகில்)

நாளை 05.09.2016 திங்கட்கிழமை



சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம்
தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு நாளைய பாற்காவடிகள் பலன் அளிக்கட்டும்.
- சோழியூரான் பிறைசூடிக்குரு


noolaham.org | aavanaham.org

# 2000 காணியுறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை

(கொழும்பு)

20 வருடங்களுக்கும் மேலாக காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு சொந்தமான காணிகளில் வசித்துவந்த 2000 பேருக்கு காணியுறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் காணியுறுதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் சுமனதிஸ்ஸ தாம்புகல தெரிவித்தார்.

சகல இனத்தவர்களையும் உள்ளடக்கிய வகையில் பாரபட்சமின்றி காணியுறுதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## காரியாலயம் 30ம் திகதியுடன் மூடப்படவுள்ளது

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனத்தின் இணுவிலில் அமைந்துள்ள யாழ். காரியாலயம் இந்த மாதம் 30 ஆம் திகதியுடன் மூடப்படவுள்ளது.

அங்கு பணிபுரிந்த முன்னாள் ஊழியர்களில் இதுவரை பணிக்கொடையினை பெற்றுக் கொள்ளாதவர்கள் குறித்த திகதிக்கு முன்னர் யாழ். காரியாலயத்தில் தமது விபரங்களை பதிவு செய்யுமாறு காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவத்தின் யாழ். காரியாலய பொறுப்பதிகாரி பொ.விமலநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கில் போர் ஆரம்பித்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனம் மூடப்பட்டது. அங்கு பணிபுரிந்த 450 ஊழியர்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு தமது சுயவிருப்பின் பெயரில் ஓய்வு பெற்றனர்.

பின்னர் இணுவிலில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் 36 ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையில் இருந்தார்கள். அவர்களும் இந்த வருடம் ஜூலை மாதம் 31 ஆம் திகதியுடன் தமது சுய விருப்பின் பெயரில் ஓய்வு பெற்றுள்ளனர்.

எனவே காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனத்தின் இணுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாண காரியாலயத்தை செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் மூடுமாறு லங்கா சீமெந்து நிறுவனத் தலைவர் லலிந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் இதுவரை (EPF/ETF GRATUITY) பணிக்கொடையினை பெற்றுக்கொள்ளாத ஊழியர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண காரியாலயத்தில் தொடர்புகொண்டு சகல ஆவணங்களையும் கையளித்து விபரங்களை பூர்த்தி செய்ய முடியும். மேலதிக விபரங்களை 077 626 1488 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொண்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் (EPF/ ETFGRATUITY)பணிக்கொடை தொடர்பான சகல விடயங்களும் கொழும்பிலுள்ள லங்கா சீமெந்து நிறுவனத்தின் தலைமைச்செயலகத்தின் ஊடாகவே தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## வணிக கப்பற்றுறை அலுவலகத்தின் கிளைக் காரியாலயம் யாழில் திறப்பு





(யாழ்ப்பாணம்)

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கு சொந்தமான வணிக கப்பற்றுறை அலுவலகத்தின்கிளைக் காரியாலயம் ஊர்காவற்றுறையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த காரியாலயத்தை நேற்று முன்தினம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க திறந்து வைத்துள்ளார்.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்மாவை சேனாதிராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

## வடக்கு முஸ்லிம்களை கைவிட்டு விடாதீர்கள்

### பான் கீ மூனிடம் கோரிக்கை

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்திருந்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் சார்பில் தவிசாளர் அப்துல் றமீஸ், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து வடக்கு முஸ்லிம் மக்கள் தொடர்பிலான கோரிக்கைகள் அடங்கிய ஆவணமொன்றினைக் கையளித்துள்ளனர். மேற்படி ஆவணம் "தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வுக்கான செயற்றிட்டத்தில் யாழ்.. கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் உள்ளீர்க்கப்பட வேண்டியதற்கான நியாயப்பாடுகள் உபாய மார்க்கங்கள்" என்னும் தலைப்பில் வழங்கப்பட்டிருந்தது. (இ-7-10)

## அபிவிருத்தியின்போது இன,மத வேறுபாடு கருத்திற்கொள்ளப்படமாட்டாது - அர்ஜுன

(யாழ்ப்பாணம்)

நாட்டை அபிவிருத்தி செய்யும் பொழுது இன, மத வேறுபாடுகள் கருத்திற் கொள்ளப்படாதெனவும் வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர் ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வணிக கப்பற்றுறை செயலகத்தின் கிளை காரியாலயத்தை நேற்று முன்தினம் காலை ஊர்காவற்றுறையில் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கடந்த காலத்தில் முழுமையாக அழிவடைந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தொடர்பாக தற்பொழுது விசேட அவதானத்தை செலுத்தியுள்ளார்கள் என்றார்.

இக்குறிக்கோளை அடையும் பொருட்டு இன, மத பேதங்களை கருத்திற்கொள்ளாது அனைத்து மக்களையும் ஒன்றிணைக்க வேண்டிய தேவை தற்பொழுது மேலெழுந்துள்ளது.

புதிய அரசாங்கம் என்ற வகையில் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை வடக்கு, கிழக்கு பகுதிகளில் முன்னெடுப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

வடக்கு-கிழக்கு பகுதிகளென பாகுபாடுகள் இல்லை. தற்சமயம் நாடு முழுவதிலும் அபிவிருத்திசெயற்பாடுகளைமுன்னெடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதிக்கு வாழ்த்து

### டுவிட்டரில் தெரிவிப்பு




(கொழும்பு)

65 ஆவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

"இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்" என்றும் "நலமுடன் வாழ இறைவன் ஆசீர்வதிப்பார்" என்றும் தனது வாழ்த்துக்களை மோடி டுவிட்டர் மூலம் பதிவேற்றம் செய்துள்ளார். (இ)

## சிங்கப்பூரில் சிநேக சந்திப்பு



தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா பிஸ்வால் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. சிங்கப்பூருக்கு விஜயம்மேற்கொண்டுள்ள பிரதமர் நேற்று முன்தினம் நிஷா பிஸ்வாலை சந்தித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலும் இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு, தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகளை வரவேற்றுள்ள நிஷா பிஸ்வால் அமெரிக்காவின் ஒத்துழைப்புக்கள் தொடருமெனவும் உறுதியளித்துள்ளார். (இ-7-10)

## மலேசியாவில் மறைந்திருக்கும் புலிகள்தான் மகிந்தவிற்கு எதிராகப்போராட்டம் நடத்தினர்

மலேசியாவில் மறைந்திருக்கும் புலிகள் அமைப்பினரே முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் இருப்பதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரின் பின்னர் தப்பிச் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் மலேசியாவின் பண்ணைகளில் மறைந்து வாழ்கின்றனர்.

மலேசியாவில் உள்ள விடுதலைப் புலி ஆதரவு அமைப்புகளுடன் இவர்கள் இணைந்து செயற்படுகின்றனர்.

இந்த இரு தரப்பினரும் இணைந்தே தற்போது அந்நாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.


அத்துடன் மகிந்தவுக்கு மலேசியாவினுள்காலடி வைக்க முடியாதவாறு வாழ் நாள் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் மலேசிய அரசாங்கம் மற்றும் அந்நாட்டு பொலிஸார் விடுதலைப் புலி ஆதரவாளர்களின் கோரிக்கைகள் தொடர்பில் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை என்றும் குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம்; பஞ்சதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

## 04.09.2016



## சித்திவிநாயகர் பல்லாண்டு
(தேரேறி வரும்போது பாடியது)

ஏரால் மேவும் யாழ்மண்ணில்
நீரால் மேவும் மண்டைதீவெனும்
ஊராம் நடுவண் எழுந்தருளும்
சித்தி மகா கணபதியாம்
பேரால் மேவும் பெருங்கருணைப்
பேறை நமக்கு தினம் அருளி
தேராம் என்னும் உற்சவத்தில்
பவனி வருவார் பல்லாண்டே.

பிரபுத்துவமாம் மரபதிலே
இலங்கைநாயக முதலி வழித்தோன்றி
பரபத்தினியார் பதம் போற்றும்
ஐயம்பிள்ளை உடையார்
சிரமேற்கொண்ட பணியதுவாம்
ஆலயம் தன்னை அமைத்ததனால்
வரங்கள் பெறவே கோயிலமர்ந்த
வாழிய அவர் புகழ் பல்லாண்டே.

ஆவணி பூரணை நன்னாளில்
அற்புதமாக தீர்த்தமாடி
பூவணி கோலத்தில் உவப்புடனே
வீதியில் நீரே உலா விடுவீர்
கோவணி நித்திலம் நீ சூடி
நித்தமும் கருணை மழைபொழிவாய்
திருவெண்காடு மண்டைதீவினிலே
கணபதி வாழிய பல்லாண்டே!

திருக்கொன்றை மரங்களும் ஆலமரங்களும்
மேவிடும் திருவெண்காடு பதியினிலே
செந்தமிழ் கற்றறிந்த பண்டிதர்கள் தந்த
சிரபுரத்து சித்திவிநாயகரே
பவளமணித்தேரினில் பவனிவரும்
வெள்ளையானை வடிவில் தோன்றிய கணபதியே
ஏழை கண்ணீர் நீ துடைத்து
எழிலாய் வாழ்வீர் பல்லாண்டே!

மாங்கனிக்காய் பெற்றோரை
வலம் வந்து வணங்கிய நாதா நீ
ஓங்கிய அங்குச பாசம் அதனால்
அசுரர் குலமதை வேரறுத்தாய்
பாங்கியர் சித்தி புத்தியெனும்
பாவையர் இருவரின் பதியானாய்
பாங்குடன் தேரினில் பவனி வந்து
பாரினில் நிலைபெறவே பல்லாண்டே!

ஆக்கம் :- இரத்தினசபாபதி யோகநாதன் (இந்திரன்)
திருவெண்காடு மண்டைதீவு

## ஆலய வரலாறு

மண்டைதீவு மையப்பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும் திருக்கொன்றை, வேம்பு முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப் பகுதியாகத் திகழ்ந்தது. இக்காட்டில் ஒரு பெரிய ஆலய விருட்சமும் காணப்பட்டது. இக்கிராமத்தின் வடபகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டின் ஊடாகவே சென்று வந்தார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆல விருட்சத்தின் அருகாமையில் அமைந்திருந்தது.

ஒருநாள் மாலைநேரம் ஐயம்பிள்ளை உடையார் இப்பாதை வழியாகச் சென்று அவ் ஆலய விருட்சத்தைக் கடந்து கொண்டிருக்கையில் தன்னைப் பின் பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அவர் திணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தபோது ஆலய விருட்சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று அவரை நோக்கி தன் துதிக்கையை நீட்டிய வண்ணம் நின்றது. இதைக் கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப் பட்டார். இதன்போது யானை ஆலமரத்தின் மறுபக்கம் சென்று மறைந்து விட்டது.

இச்சம்பவம் அவருக்கு ஓர் அதிசயமாகவும் மிகுந்த பயமாகவும் இருந்தது. எனினும் அவ்யானையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் அச்சுற்றாடலில் தேடினார்.

ஆனால் அவரால் யானையை மீண்டும் காணமுடியவில்லை. அவர் இச்சம்பவத்தை தனது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்தாலோசித்தார்.

அவர்கள் எல்லோரும் பிள்ளையார்தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தைக் கூறினார்கள். இதன் காரணமாகவே அவர் அவ்வாலய விருட்சத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார். அதுவே திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயமாகச் சிறப்புற்று விளங்குகின்றது.

18 ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற வரலாற்று பெருமைமிக்க இவ்வாலயத்தில் இன்று புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகமும் பஞ்சதள இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகமும் சிறப்புற நடை பெறுகின்றது. இந்நாளில் நாம் அவன் திருப்பாதம் தொழுது இன்புறுவோமாக.



பொ.வி.திருநாவுக்கரசு,
ஆலய தர்மகர்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி

உங்களுக்கு மிக அருகில் மக்கள் வங்கி

## திருநெல்வேலி சேவை நிலைய கோலாகலமான திறப்பு விழா

மக்கள் வங்கி யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளையின் திருநெல்வேலி சேவை நிலைய மானது புதிய மெருகுடனும் நவீன மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகளுடனும் வைபவ ரீதியாக 05.09.2016 திருநெல்வேலியில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை பெறுமதி வாய்ந்த எமது இனிய வாடிக்கையாளப் பெருமக்களுக்கு அறியத்தருவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

**இடம் :** மக்கள் வங்கி திருநெல்வேலி சேவைநிலையம் 80, பலாலி வீதி, திருநெல்வேலி.
**காலம் :** 05.09.2016 திங்கட்கிழமை.
**நேரம் :** காலை 8.30 மணி
**பிரதம விருந்தினர் :** திருவாளர் ஆழ்வார்பிள்ளை சிறீ பிரதேச செயலர் நல்லூர்.

- சகல வயதினருக்குமான சேமிப்புக் கணக்குகள்.
- கவர்ச்சிகரமான வட்டிவீதத்துடன் நிலையான வைப்புகள்.
- நடைமுறைக் கணக்கு செயற்பாடுகள்
- வெளிநாட்டு நாணயக் கணக்குகள்.
- வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவை
- தங்க நகை அடகுச் சேவை.
- வெளிநாட்டு பணப்பரிமாற்றல்கள்.
- மையப்படுத்திய வங்கிச்சேவை (Online Banking)
- வீசா பற்று / கடன் அட்டைகள்.
- குறுந்தகவல் வங்கிச் சேவை (SMS Banking)
- இணைய வங்கிச்சேவை (Internet banking)
- கடன் வசதிகள்.
- மின்சார, தொலைபேசி, நீர் கட்டணங்கள் மற்றும் இது போன்ற கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.
- காசோலை வைப்பு.
- வைத்தியசேவைக்கான இலத்திரனியல் முன்பதிவு. (e-channeling)

உங்கள் அனைவரையும் எமது புதிய சேவைநிலையத்திற்கு வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச முகாமையாளரும் ஊழியர்களும்
பிரதேச தலைமைக்காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

மக்கள் வங்கி

முகாமையாளரும் ஊழியர்களும்,
மக்கள் வங்கி,
பல்கலைக்கழக கிளை
திருநெல்வேலி சேவைநிலையம்.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா:29உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/6246 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:CDF/வங்கியாளர்<br>தொ.இ: G/1480 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்O/L/சொந்ததொழில<br>தொ.இ: B/6247 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'4'<br>தகைமை/தொழில்HNDA/அரச தொழில்<br>தொ.இ: G/1488 |
| பிறப்பு: 1982 RC<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்BA/தனியார் தொழில்<br>தொ.இ: B/6248 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/1500 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 1 1/2<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: B/6249 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 56<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/1579 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



# காரைநகர் EVERYDAYS நிறுவனத்தின் குடிநீர் விநியோக சேவையின் முதலாவது பிறந்த தின வாழ்த்துக்கள்







காரைநகர் மக்களுக்கு சுகாதார திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக சுத்தமான குடிநீரை எமது தேவைகளுக்கேற்ப உரிய நேரத்தில் பூர்த்தி செய்து எமது மனங்களை வென்ற EVERYDAYSநிறுவனத்தின் குடிநீர் சேவையின் முதலாவது அகவையினை பூர்த்தி செய்யும் இந்நாளில் தங்கள் பணி மேலும் சிறக்க வாழ்த்துவதோடு தங்கள் நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் காரைநகர் மக்களின் சார்பில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

EVERYDAYS குடிநீர் சேவையைப் பெறும் அங்கத்தவர்களும் காரைநகர் மக்களும் நலன்விரும்பிகளும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாடநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2016 இல் க.பொ.த.உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இரண்டாம் மொழி சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில பாடநெறிகள் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை மும்மொழிக் கற்கை நிலைய த்திலும் கல்வி அமைச்சின் www.edumin.np.gov.lk என்ற இணையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.இவ் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து 20.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபால் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.பணிப்பாளர்,மும்மொழிக்கற்றை நிலையம்,G.P.S. வீதி,கல்வியங்காடு.

மேலதிக விபரங்களுக்கு 021223 1343 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ

## தொழில் சந்தை-2016


தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வேலையற்ற இளைஞர் யுவதிகளின் நலன் கருதி இன்று 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாபெரும் தொழில் சந்தையும் தொழில் வழிகாட்டலும் எனும் வேலைத் திட்டம் நடை பெறும். (இ-7-10)

# யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் வேலைவாய்ப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி அவதியுறுவதாக யாழ்.வணிகர் கழகம் அறிகின்றது. இவ்வாறான இளைஞர்களுக்கு யாழ்.நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்க முடியும்.

யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் சிட்டை லிகிதர்கள், பொருட்கள் பொதி செய்பவர்கள், உதவியாளர்கள்,சாரதிகள், காசாளர், கணக்குப்பதியுநர்,கணனி இயக்குநர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் போன்ற பணிகளுக்கு ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.இவ்வாறான பணிகளில் சேர விரும்புவோர் யாழ்.வணிகர் கழகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.மேலதிக விபரங்களுக்கு 021 222 8593 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும் என யாழ்.வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ



பொலிஸ் சேவையின் 150ஆம் ஆண்டு விழா நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொலிஸ் அணி வகுப்பு மரியாதை இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:-கரணவாய் செய்தியாளர்)

## யோகா பயிற்சி நெறி அறிமுக நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் யோகா உலகம் அமைப்பு நல்லூர் தேரடி அருகில் அறுபத்துமூன்று நாயன் மார் குருபூசை மடத்தில் யோகா புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் நா.வரதராஜ் உடம்பை வளர்க்கும் உபாயம் என்னும் தொனிப் பொருளில் கருத்துரை வழங்குவார்.இவ் யோகாப் பயிற்சிகள் காலை 6மணி தொடக்கம் காலை 7மணி வரையும் மாலை 5மணி தொடக்கம் 6 மணி வரையும் இரவு 6 மணி தொடக்கம் 7மணி வரையுமாக மூன்று பிரிவுகள் இரண்டு மாதங்கள் தினமும் நடை பெறும். (இ-7)

## மஞ்சவனப்பதி மஹோற்சவம்

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத்திருவிழாவும் 12ஆம் திகதி திங்கட்கிழமை கைலாச வாகனமும் 14ஆம் திகதி புதன் கிழமை சப்பறத்திருவிழா,15ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழா மறுநாள் தீர்த்தத்திருவிழா என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

## மக்களின் கோரிக்கைகளையடுத்து பற்றைகளை அகற்றும் பணி ஆரம்பம்



வடமராட்சி முள்ளி-யாக்கருவுக்கு இடைப்பட்ட தாழங்குழி வீதியின் இருமருங்குகளும் கனரக வாகன உதவியுடன் துப்புரவு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியின் இருமருங்கிலும் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதனால் சட்டவிரோதமான நடவடிக்கைகள்,கொள்ளை,கொலை போன்றன இடம்பெற்று வந்தன.

இதனால் இப்பற்றைகளை வெட்டி அழிக்குமாறு பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-60)


## கண்ணீர் அஞ்சலி



**செல்லப்பா மாணிக்கவாசகர்**

ஓய்வுநிலை பொலிஸ், தலைமையகம்,
பிரதம லிகிதர் கொழும்பு, தங்கோடை காரைநகர்

உண்மையை பூனை தின்றதாக நித்தம் நித்தம் கூறி வாழ்ந்த
செல்லப்பாவின் செல்ல மகனாகவும் வேலுப்பிள்ளை மாம்பழத்தின்
பாசத்துக்கும் அன்புக்குரியவராகவும் காரைமண் பெற்று
எடுத்த மனிதருள் மாணிக்கவாசகரே வந்த வேலையும் முடிந்தது.
சொந்த மண்ணும் கசந்தது சோதியில் நீரும் கலந்தீரோ தாய்
தந்தையர் இறைவன் பெயர் சூட்டினர். அமரருக்கு நாம்
செய்யும் அஞ்சலி இன்பத்திலும் துன்பத்திலும்
ஒற்றுமை காத்து ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல
ஈழத்து சிதம்பர நடராசப் பெருமானை இறைஞ்சி நிற்கிறோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வேலுப்பிள்ளை சிற்சபேசன்

(5805)


## இராசி பலன்

**மீனம்:** சொந்த பந்தங்களின் வருகையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**இடபம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மிதுனம்:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**கும்பம்:** குடும்பத்தில் சிறு மனக்கசப்புகள் ஏற்படலாம், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம்,பூரட்டாதி | | |
| | | | சூரி<br>ராகு<br>புத |
| | சனி<br>செவ் | | குரு<br>சுக்<br>சந் |

04.09.2016
(ஆவணி 19, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திருதியை மாலை 6.24 மணிவரை
அத்தம் பிற்பகல் 5.19 மணிவரை
சுபநேரம்- 9.05- 10.35 மணிவரை
இராகுகாலம் 4.35- 6.05 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**மகரம்:** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வழிபாட்டால் குதுகலம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்:** வியக்கும் தகவலகள் வந்து சேரலாம், சகோதர வழியில் ஒற்றுமை மேலோங்கும், விருந்தினர் வருகையுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒருசில வேலைகளுக்காக பலமணி நேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# சுதுமலை
# ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானம்
# ஏக குண்ட புனராவர்த்தன பிரதிஷ்டா
# மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்
# 04.09.2016



### அருளாசியுரை

மூன்று ஆலயங்கள் பிரசித்து விளங்கும் சுதுமலை கிராமத்தில் சுப்பிரமணியர் பரமேஸ்வரன் அம்பாள் என்கின்ற வரிசைக் கிராமத்தில் பெரும் வீதிக்கு பக்கத்தில் அமைந்திருக்கும் வல்லிதேவ சேனா சமேத சுப்பிரமணிய பெருமான் மஹாகும்பாபிஷேகம் பக்தர்களின் முயற்சியால் திருப்பணி நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.சிறப்பாக நடைபெற ஆசி கூறுகிறேன்.

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
**இணுவில்**
**தர்மசாஸ்திர குலகுரு அதிபர்.**





### வாழ்த்துச் செய்தி

திருவாரூரில் பிறப்பது எவ்வளவு பெருமை. புண்ணியம் என ஆன்றோர்கள் கூறியிருக்கின்றார்களோ அதேபோன்று தான் சுதுமலைப்பதியும் வருடத்தில் பல தேர்கள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் சொரியும் பெருவீதியின் நடுவே அமைந்தருளும் ஆலயங்களில் ஒன்றுதான் சுதுமலை ஸ்ரீமுருகமூர்த்தி ஆலயம். சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய பக்தர்கள் சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஷ்வநாத சுவாமி திருக்கோவில் தேர்கள், சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத் தேர்கள் பவனிவந்து சிறப்பிக்கும் ஊரின் கண்ணே இன்று ஓர் பெரும் விசேடம் என்றால் அது மிகையாகாது. நாம் வாழ்வது கலியுகம். கலியுகத்தில் அதிபதி முருகப்பெருமான்.

முருகப்பெருமான் பல நூற்றாண்டுகளாக கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எமது ஆலயத்தில் இன்றையதினம் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா. ஒரு மஹாகும்பாபிஷேகத்தை கண்ணுற்றவன் பன்னிரண்டு ஆண்டுகள் தினம்தோறும் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டவன் என்ற புண்ணியங்களுக்கு பலாபலன் உடையவன் என்று சொல்வார்கள். வானத்து தேவர்களும் கலந்து சிறப்பிக்கும் இன்றைய மஹாகும்பாபிஷேகத்தைக் கண்ணுற்று கந்தவேளின் கருணைக் காடாட்சத்தில நனைந்து இன்புறுவோமாக

**இராசலிங்கம் ஸ்ரீகாந்தன்**
**தலைவர்,**
**பரிபாலன சபை,**
**சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம்.**



### ஆலய குருவின் ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாண தேசத்தில் வளம்கொளிக்கும் தொல்பதி சுதுமலை சுள்ளு என்றால் வெண்மை என்று பொருள்பட மலை போன்ற வெண்மை குவிந்திருந்தால், அதாவது சங்குகள் மலை மலையாகக் குவிந்த இடம் சுள்ளுமலையாகி பின்னர் காலத்தால் மருவி சுதுமலையான சுந்தர பூமியின் மத்தியில் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள், விசாலாட்சி அம்பாள், சமேத விஸ்வநாதப் பெருமான் ஆகியோரின் ஆலயங்களுக்கு அருகில் எழிலுடன் அமைந்த ஆலயம்தான் சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம். ஆன்மாவை லயப்பட வைக்கும் சுதுமலையின் மரதநில ஓரத்தில் வயல் காற்று தாலாட்டும் மகிழ்வை மனநிறைவுடன் ஏற்று வந்தமர்ந்த முருகனின் வரலாறு வரலாற்றுக்கும் முற்பட்டது. இருப்பினும் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் அதாவது ஆயிரத்து எண்ணூறுகளில் யாழ்ப்பாணக் கச்சேரியில் பதிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்து ஆலயங்கள் சிலவற்றுள் இதுவும் ஒன்றாகும். கந்தப்பெருமான் கழல் பணிய கஷ்டங்கள் விலகும். வறுமைகள் நீங்கும், கவலைகள் தீரும், செல்வங்கள் பெருகும். பாவங்கள் பொடிபட பாக்கியங்கள் சேரும். இன்றையதினம் இவ்வாலயத்தில் நடந்தேறும். இறை கைங்கரியங்களில் தலையாய கைங்கரியங்களில் ஒன்றான மஹாகும்பாபிஷேகம் காண இவை அனைத்தும் ஒரு நொடியில் சேரும் என ஆசி கூறி கந்தப்பெருமான் கழலடி போற்றுகின்றோம்.

**பிரம்மஸ்ரீ நாகேஸ்வரசர்மா**
**ஜனார்த்தன சர்மா**
**ஆலய பரம்பரை குரு.**

04.09.2016 ஞாயிறு காலை
7.45 முதல் 8.55
வரையான சுபவேளையில்



### பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை

கலியுகவ்ரதனாம் கந்தப் பெருமானின் மஹாகும்பாபிஷேகம் இன்றைய தினம் முருகப்பெருமானின் திருவருளுடன் நடைபெற இருக்கின்றது. இறைவன் இச்சா ஞானகிரியா சக்தி ரூபங்களாக இக்கலியுகத்திலே கலயு கவரதனாகவும் மகாவல்லி கஜாவல்லி சமேத ஸ்ரீமுருக மூர்த்தி சுப்ரமணிய பரமேஸ்வரராக எழுந்தருளி இருந்து எமக்கு அருளாசி வழங்கி திருவருள் சக்தியை எமக்குத்தந்து கொண்டிருக்கின்றார். சுதுமலைக் கிராமத்திலே ஸ்ரீபுவனே ஸ்வரி அம்பாள் விசாலாட்சி அம்பாள் சமேத விஷ்வநாத பரமேஸ்வரர் ஆலயங்களுக்கு அருகில் மஹாவல்லி கஜாவல்லி சமேத ஜெகன்நாத சுப்ரமணிய பரமேஸ்வரராக எழுந்தருளி இருந்து இன்றைய தினம் மஹா கும்பாபிஷேகம் காண்கின்றார். முருகப்பெருமான், இந் தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண இன்றையதினம் எமக்கெல்லாம் திருவருள் கூடியிருக்கின்றது. எங்களுடைய கைகள் மட்டுமல்ல எங்களுடைய பார்வைகள் காதுகள் எல்லாமே அவனது திருவருள் சக்தியை வேண்டிக் கொண்டு அவனது கும்பாபிஷேகம் காண விரைந்து நிற்கின்றது. இந்த மஹாகும்பாபிஷேகம் காண வருகின்ற அடியவர்களுக்கும் மற்றும் கலியுக வரதனாம் கந்தப்பெருமானின் அருளாட்சிக்கு உட்பட்ட அனைத்து அடியவர்களுக்கும்அவன்திருவருள் என்றென்றும் கிடைத்திட அவனது பேரருளால் ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ தா.ம.சோமசுந்தரக்குருக்கள்**
**பிரதிஷ்டா பிரதம குரு,**
**தர்மகர்த்தா குருகுலம் இணுவில்.**



### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சுதுமலைத்திருவூரில் அருள் மழை பொழியும் முருகப் பெருமான் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.சுதுமலை புவனேஸ்வரி அம்பாளின் திருவீதியில் எழுந்த இத்திருக்கோவிலை பக்தர்கள் மிகவும் புனிதமாகப் பாதுகாத்து வருகின்றார்கள். காலத்துக்குக் காலம் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு ஆலயம் மிகவும் அழகாக காட்சியளிக்கிறது. இவ்வாலயத்தில் நடைபெறும கந்தசஷ்டி விழாவில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம். இவ்வாலயத் திருப்பணியில் அயராது உழைத்த அன்பர்கள் அந்தணப் பெரியோர்களுக்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை சமர்ப்பித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

மலரமைப்பு
வி.கிரிதரன்,மானிப்பாய்

## மஹாகும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

புதிய சென்னை சில்க்ஸ்
இல.228.
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ சுபா பேக்கரி
சுதுமலை

பிரவின்ஜா
ஜுவல்லறி
K.K.S. வீதி,
இணுவில்.

சுந்தர்சன்
இல.138 யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

NDB வங்கி
மானிப்பாய் கிளை
ஆலடிச் சந்தி யாழ்.வீதி,
மானிப்பாய்.

றோயல் புத்தகசாலை
பாடசாலை, அலுவலக உபகரணங்கள்,
அன்பளிப்பு பொருட்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இல.21 பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# உரும்பிராய் வடக்கு அருள்மிகு க...
# மஹா கும்பாபிஷேக சிற...

## அருளாசிச்செய்தி



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கண்குத்தி ஞான வைரவப் பெருமானின் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு ஆசிவழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

காவற் தெய்வமாம் வைரவப் பெருமானின் அருட்கடாட்சம் எம் மக்கள் அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டி வணங்குகின்றேன்.

உரும்பிராய் எனும் தெய்வீகம் கமழும் ஊரில் கண்குத்தி வைரவப் பெருமான் கோவிலில் எழுந்தருளி எம்மக்கட் குறை தீர்ப்பார் என்பதில் ஐயமில்லை.

கும்பாபிஷேக இன்நன்னாளில் அனைவருக்கும் ஆசி கிடைக்க வேண்டி கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்தி அமைகின்றேன்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஆதீன முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், திருஞான சம்பந்தர் ஆதீனம்.**

## ஆசிச்செய்தி



எல்லாவற்றையும் படைத்து , காத்து, அருள் புரிகின்ற சிவனின் அம்சமான வைரவப் பெருமான் ஞான வைரவராக வீற்றிருந்து உரும்பிராய் பதியில் அருள் பாலித்து வருகின்றார்.எமது சமய நல்லொழுக்கங்கள், கிரியைகள் அருகி வருகின்ற இக் கால கட்டத்தில் எமது பக்தர்களின் துயர் தீர்த்து நற்பேறை அருளும் வண்ணம் கண்குத்தி ஞான வைரவர் பெருமான் திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நிகழ்கின்ற இவ் வேளையில் இறைவனை தரிசித்து இறையருள் பெறுவோமாக. கும்பாபிஷேகம் சிறப்பான வகையில் நிகழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நல்லாசிகளையும் கூறுகின்றேன்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**
**பிரம்மஸ்ரீ க.மு. சோமசுந்தரக்குருக்கள்**
பிரதம குரு, பர்வத வர்த்தனி
அம்மன் கோவில்,உரும்பிராய்.

## செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



கண்குத்தி ஞான வைரவப் பெருமான் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்த மடைகின்றேன். உரும்பிராயில் எழுந்தருளியிருக்கும் இத்திருக்கோவிலை பக்தர்கள் மிகவும் புனிதமாகப் பாதுகாத்து வருகின்றார்கள்.

திருப்பணி வேலைகள் நிறைவுற்று ஆலயம் மிகவும் அழ காக காட்சியளிக்கிறது. இவ்வாலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம். இவ்வாலயப் திருப்பணிகளில்அயராது உழைத்த அன்பர்களுக்கு கண்குத்தி ஞான வைரவப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டி எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

***கலாநிதி ஆறு.திருமுருகன்***
***தலைவர்,***
***துர்க்காதேவி தேவஸ்தானம்,***
***தெல்லிப்பழை.***

## அருளாசிச்செய்தி




ஷேத்ரபாலர் என அழைக்கப்படும் வைரவப் பெருமான் நம்மைச்சூழ உள்ள எல்லா இடங்களையும் காப்பவராக விளங்குகிறார். சிவாகமங்களில் சிவாம்சமாகப் போற்றப்படும் வைரவர் சாதாரண கிராமியத் தெய்வமாகவும் விளங்குகிறார். அந்நியர் ஆட்சிக்காலத்தில் நமது முன்னோர்கள் சூலவடிவிலே மறைமுகமாக வழிபடக்கூடிய இலகு தெய்வமாகவும் அருள் செய்த பெருமைக்குரியவர்.

உரும்பிராய் வடக்குப் பகுதியில் கண்குத்தி ஞான வைரவர் என்ற பெயரில் வீற்றிருந்து அடியார்களால் பயபக்தியுடன் வழிபடப்படுகின்ற வைரவப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடப்பது பெருமைக்குரியது.

இவ்வேளையில் ஆலய பரிபாலகர்கள், அடியார்கள் அனைவருக்கும் ஆசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். வைரவப் பெருமானின் பேரருள் அனைவருக்கும் கிட்டுவதாகும்.

**சர்வ போதகாசிரியர்**
**பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா**
**கோப்பாய்-சிவம்**



## தலைவரின் வாழ்த்துச் செ...

ஈழத்திருநாட்டின் வட பகுதியிலே அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலே... உரும்பிராய் வடக்குப் பகுதியிலே அடியவர்களுக்கு எல்லாம் அருள் பாலி... ஞான வைரவப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நட... டைகின்றேன்.

இன்று மக்களை அவலப்படுத்திக்கொண்டிருக்கின்ற வறுமைகள், ... வாழ்வில் எழுச்சி பெறவும் விவசாயம் மேலோங்கிடவும் எல்லாத்துறையி... டவும் மாணவர்கள் கல்வியிலே மேலோங்கி உத்தியோக வாய்ப்புப் பெற்றி... பிரார்த்திப்பதோடு, வைரவப் பெருமானுடைய மஹா கும்பாபிஷேகம் சிறப்...

**திரு. பொ. தங்...**
**ஆலய பரிபாலன சபை...**

மலரமைப்பு
எஸ்.குணேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்.

அனைத்துவிதமான ஆடைத்தெரிவுக்கும் நாடவேண்டிய இடம்
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
Boys & Baby Selection
பலாலி றோட்,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

விநாயகர் ஸ்ரோர்ஸ்
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். 077 398 7859

சங்கரன் இரும்புத் தொழிலகம்
& ஆட்ஸ் வெல்டிங்
(வெள்ளிரும்புகள்)
மானிப்பாய் வீதி,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
077 202 2814, 077 907 4207

சஜி ரவல்ஸ்
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
077 703 6658

தீபன் பந்தல் சேவை
ஸ்ரேசன் றோட், மல்லாகம்.
077 977 3513

மது மோட்டோர்ஸ்
MATHU MOTORS
இல. 05, கோப்பாய் வீதி,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
No: 05, Kopay Road,
Urumpirai Junction
TP:- 077 381 4330

ரூபன் களஞ்சியம்
Ruban Stores
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

நியூ டிலான் ரெக்ஸ் & ரெயிலர்ஸ்
New Dilan Text & Tailors
137,
Post Box Junction
Palaly Road,
Thirunelvely.
TP:- 077 138 7239

மது மோட்டோர்ஸ்
MATHU MOTORS
இல. 05, கோப்பாய் வீதி,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
No: 05, Kopay Road,
Urumpirai Junction
TP:- 077 381 4330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மயம்

# ந் கண்குத்தி ஞானவைரவர் ஆலயம்
# க சிறப்பிதழ்-04.09.2016





## ஆலய அர்ச்சகரின் ஆசிச் செய்தி



எமது ஆலயம் சிறிய ஆலயமாக இருந்தது. குறுகிய காலத்திலே பல வேலைகள் செய்யப்பட்டு பண்டிகை, தூபிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டு இப்பொழுது மஹா கும்பாபி ஷேகம் இன்றைய தினம் நடைபெறுவதற்கு வைரவப் பெருமான் அருள் பாலித்துள்ளார். இந்த வைரவப் பெருமானுக்கு புதிதான, அற்புதமான பெயர் உள்ளது.

அருள்மிகு கண்குத்தி ஞானவைரவர் என்னும் பெயர் நாமத்தை கொண்டு திகழ்கிறது. இந்தக் கிராமத்திலே வைரவப் பெருமான் திருவருள் புரிவார் எனும் ஐதீகம் இன்று தெரிகின்றது. இலங்கை வாழ் சைவசமய பக்த அடியார்களுக்கு வைரவப் பெருமான் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க அருள் புரிவாராக!.

வைரவர் துணை
''திருச்சிற்றம்பலம்''
ஸ்தானிககுரு
சிவஸ்ரீ P.K.கோகுலரதசர்மா,
உரும்பிராய்.

## பிரதம குருவின்ஆசிச் செய்தி



வந்தோரை வாழ வைக்கும் சிங்கார பூமி இலங்கை தூபிபத்திலே ஸ்ரீமத் தட்சண கைலாயம் என போற்றப்படும் திவ்விய ஷேத்திரத்திலே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியாய்த் திகழ்ந்து தன்னையே நாடி வருகின்ற அடியவர்களுக்கு விநாயகப் பெருமான், வைரவப் பெருமான் மற்றும் முருகப்பெருமான் என்பன நிர்மா ணிக்கப்பட்டு இந்த ஆலயம் புதுப்பொலிவுடன் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

இன்று இந்த வைரவப் பெருமானுக்கு மங்கள வாத்தியங்கள் இசை முழுங்க மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக இடம்பெறவும் எல்லா அடியவர்களுக்கும் வைரவப் பெருமானின் அருளாசி கிடைக்கவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"*

கும்பாபிஷேக பிரதம
சிவாச்சாரியார்
ஆகம பிரவீனா கிரியாஜோதி
சிவஸ்ரீ
சி.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
(அச்செழு அம்மன்கோவில்)
ஆலய பிரதம குரு.

## ழ்த்துச் செய்தி



பாணத்திலே புண்ணிய பதியாக விளங்குகின்ற
அருள் பாலிப்பதற்காக அமைந்துள்ள கண்குத்தி
பிஷேகம் நடைபெறுவதனையிட்டு பெருமகிழ்வ

வறுமைகள், துன்பங்கள் என்பவற்றைப்போக்கி
லாத்துறையிலே இருக்கின்றவர்களும் மேலோங்கி
ப்புப் பெற்றிடவும் எல்லாம் வல்ல கண்குத்தி ஞான வைரவப் பெருமானை
பிஷேகம் சிறப்படையவும் வாழ்த்தி நிற்கிறேன்.

பொ. தங்கராசா,
ாலன சபைத் தலைவர்.

## புலம் பெயர் வாழ் கண்குத்தி ஞானவைரவர் பெருமான் அடியவர்களின் வாழ்த்துச் செய்தி

உரும்பிராய் வடக்கிலே அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் முகமாக எழுந்தருளி இருக்கின்ற கண்குத்தி ஞானவைரவப் பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதனையிட்டு புலம்பெயர் உறவுகளாகிய நாம் பெரு மகிழ்வடைகிறோம்.

எங்களை எல்லாம் இன்புற்று வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற கண்குத்தி ஞானவைரவப் பெருமானுடைய மஹாகும்பாபிஷேகம் சிறப்படையவும் அடியவர்களுக்கு அருள்பாலிக்கவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!

புலம் பெயர் உறவுகள்







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கில் பான் கீ மூனின் வருகையை முன்னிட்டு

# போராட்டங்கள் நடக்குமென்று நான் எதிர்பார்த்திருந்தேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

**வடக்கில் பான் கீ மூனின் வருகையை முன்னிட்டு பெரியளவில் போராட்டங்கள் நடக்குமென்று நான் எதிர்பார்த்திருந்தேன். போராட்டம் நடத்தியவர்களது கோரிக்கையில் நியாயம் இருக்கின்றது. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர் ஒருவர் வடமாகாணத்தில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினீர்கள். ஆனால் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் கடற்படையினருக்கு காணியை சுவீகரிக்க முதலாம் திகதியும் அளவீடு நடத்த முயற்சிக்கப்பட்டது.

இதற்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தியிருந்தனர். இதேபோல் பல போராட்டங்கள் வடக்கில் இடம்பெறுகின்றன. நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இதற்கு என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று வினா தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, ஐ.நா.செயலாளர் நாயகத்தின் வருகையையொட்டி வடக்கில் பெரியளவில் போராட்டங்கள் நடத்தப்படலாம் என்று நான் எதிர்பார்த்திருந்தேன்.

அதேபோல் போராட்டங்கள் இடம்பெற்றன. இந்தப் போராட்டம் நடத்தியவர்களின் கோரிக்கையில் நியாயம் இருக்கின்றது.

பொதுமக்களின் காணிகளை மீளக் கையளிக்கும் விடயத்தில் பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கி வருகின்றோம்.நலன்புரி முகாம்களில் உள்ளவர்களில் ஒரு பகுதியினர் தமக்கு சொந்தக் காணிகளே வேண்டும் என்கின்றனர்.



ஆனால் வேறு சிலர் தாம் வாழக் கூடிய பொருத்தமான காணியை தந்தால் போதும் என்கின்றனர். இவ்விடயத்தில் நில அளவீடு செய்யும் போது போராட்டமும் நடத்துகின்றனர்.

அகதி முகாம்களில் உள்ளவர்களை காணி வழங்கி குடியேற்ற முயன்றால் அங்குள்ள கடும் போக்காளர்கள் அந்தக் காணியைப் பெற வேண்டாமென்று கோருகின்றனர்.

இத்தகையவர்களுக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விருப்பமில்லை. கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் நாம் பெருமளவு காணிகளை மீள வழங்கியுள்ளோம். ஏனைய காணிகளையும் மீளக் கையளிக்க விரைவில் நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

---

# சுலைமானை கடத்தியவர் அவரது ஸ்தாபன ஊழியரே!

பம்பலப்பிட்டி வர்த்தகர் சுலைமானின் வர்த்தக ஸ்தாபனத்தில் நிதிக்கு பொறுப்பாக இருந்த நபரே, இரண்டு கோடி ரூபா கப்பம் கேட்டு அவரை கடத்திச் செல்லும் திட்டத்தை வகுத்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாக்கீர் அஸ்லம் மொஹமட் என்ற இந்த நபர் கடந்த 8 வருடங்களாக வர்த்தகர் சுலைமானிடம் பணி புரிந்து வந்துள்ளார்.

வர்த்தகருக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டதன் காரணமாக, அவரிடம் நிதிப் பொறுப்பையும் சுலைமான் ஒப்படைத்துள்ளதாக தெரியவந்துள்ளது என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

வர்த்தகர் சுலைமானின் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தனது எஜமானிடம் பெருமளவில் பணம் புழங்குவதை நன்றாக அறிந்து கொண்ட பின்னர், சந்தேக நபர் இந்தத் திட்டத்தை தீட்டியுள்ளார்.

இதனடிப்படையில் கப்பம் பெறுவதற்காக வர்த்தகரை கடத்திச் சென்றுள்ளனர். இந்தக் கொலையுடன் தொடர்புடைய 8 சந்தேக நபர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் சந்தேக நபரின் வீட்டுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. வீட்டை புனரமைக்க வர்த்தகர் 5 லட்சம் ரூபா கொடுத்துள்ளதுடன் அவரது மனைவி மேலும் 50 ஆயிரம் ரூபாவை கொடுத்துள்ளார்.

வர்த்தகர் சுலைமானை கடத்த ஒன்றரை மாதங்கள் திட்டமிட்டுள்ளனர். கடத்திச் செல்ல பயன்படுத்திய வாகனத்திற்கு ஒரு நாளுக்கு 34 ஆயிரம் ரூபாவை வாடகையாக செலுத்தியுள்ளனர்.

கடத்தலுடன் சம்பந்தப்பட்ட நபரது மனைவியின் தங்க ஆபரணங்களை அடகு வைத்தே இதற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வாகனத்தில் வைத்து கூரிய ஆயுதம் ஒன்றில் வர்த்தகரின் தலையில் தாக்கியதால், அவர் உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு கோடி ரூபாவை கப்பமாக பெற வேண்டும் என்பதே கடத்தியவர்களின் நோக்கம் என்ற போதிலும் தலையில் தாக்கியதால், அவர் உயிரிழந்து விடுவார் என இவர்கள் எண்ணியிருக்கவில்லை.

வர்த்தகர் கடத்திச் செல்லப்பட்ட தினத்திற்கு மறுதினம் சந்தேக நபர் வர்த்தக ஸ்தாபனத்திற்கு சென்றுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய வர்த்தகரின் தந்தை தனது மகனை விடுவிக்க பணத்தை கொடுப்பார் என்ற நம்பிக்கையில் சந்தேக நபர் அங்கு சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட 8 பேரில் 6 பேர் முஸ்லிம்கள் எனவும் சம்பவத்தின் பின்னணியில் இனவாத நோக்கங்கள் எதுவுமில்லை எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வரும் நிலையில், கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை குறுகிய காலத்தில் கைது செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7-10)

---

# பாடசாலை சீருடைகளுக்காக காசோலை வழங்க நடவடிக்கை

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை வழங்குவதற்காக காசோலை முறைமை அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு பாடசாலை சீருடைகளை வழங்குவதற்காக வவுச்சர் முறைமை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இதுவரை காலமும் இலவசமாக பாடசாலை சீருடைகள் நேரடியாக வழங்கப்பட்டு வந்தன.

எனினும், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் தரமான சீருடைகளை வழங்குவதற்காக வவுச்சர்களை அறிமுகம் செய்திருந்தது.

எனினும் வவுச்சர் முறையிலும் சில குளறுபடிகள் காணப்பட்டதாக பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வவுச்சர் முறைமைக்கு பதிலீடாக காசோலைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குளியாபிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

---

# மர்மமான முறையில் உயிரிழந்த விமானப்படை வீரரின் சடலம் மீட்பு!

சந்தேகத்திற்கு இடமான முறையில் மரணமாகியுள்ள விமானப்படை வீரர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் கல்கிஸ்ஸ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் நேற்று அதிகாலை ரத்மலானை விமான நிலைய வீதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேலும், விமானப்படை வீரரின் உடலில் காயங்கள் காணப்பட்டதாகவும் வீதியில் சடலம் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

40 வயதான அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை. இவர் ரத்மலானை விமானப்படை முகாமில் கடமையாற்றிய விமானப்படை வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

---

# கடற்கரைப் பகுதியில் கஞ்சாப் பொதி மீட்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு கடற்கரைப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 12 கிலோகிராம் கேரளக் கஞ்சாவினை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் பிரகாரம் வங்களாவடி 8ஆம் வட்டாரப்பகுதியில் உள்ள கடற்கரை மணலினை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கடற்படையினர் தோண்டிய போது பை ஒன்றில் வைக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்த 12 கிலோகிராம் கஞ்சாவினை கைப்பற்றினர்.

இதனை யார் புதைத்தனர்? எங்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்தது.? என்பன குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மீட்கப்பட்ட கஞ்சாவினை ஊர்காவற்றுறைப் பொலிஸில் பாரப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில்யாரும்கைது செய்யப்படவில்லை. (இ-60)

---

# இரத்தினக்கல் கைத்தொழிலை விஸ்தரிக்க புதிய நடவடிக்கை



(கொழும்பு)

இரத்தினக்கல் கைத்தொழிலை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண சங்கத்தினால் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண கண்காட்சியில் நேற்று முன்தினம் பங்கேற்ற போது ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கை இரத்தினக்கல் கைத்தொழிலை சர்வதேச அளவில் விரிவுபடுத்துவதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணியை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை இரத்தினக்கல் கைத்தொழிலை உலக அளவில் பிரசாரம் செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

---

# செக் குடியரசின் ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்வார்

இலங்கைக்கும் செக் குடியரசுக்கும் இடையிலான பொருளாதார இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக செக் குடியரசின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

செக் குடியரசின் இலங்கைக்கான தூதுவராக பிரியானி விஜேசேகர செக் குடியரசின் ஜனாதிபதி Miloz Ziman மூலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் ஓகஸ்ட் 23ஆம் திகதி செக் குடியரசின் தலைநகரான பிராகா கோட்டையில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நிகழ்வின் போது பிரியானி விஜேசேகர, ஜனாதிபதி, வெளிவிவகார பிரதி அமைச்சர் மற்றும் வெளிவிவகார தெற்கு ஆசியா திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோரை சந்தித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் செக் குடியரசுக்கும் இடையிலான பொருளாதார இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு இலங்கை வரவுள்ளதாகவும் செக் குடியரசின் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும்,செக் குடியரசின் தலைநகர் பிராகாவில் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் நிறுவ வேண்டும் என செக் குடியரசின் ஜனாதிபதி Miloz Ziman இதன் போது வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் கலாசார உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்த நிகழ்வின் போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா பணியாளர்கள்

## 2006ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படாமலுள்ள சம்பள நிறுவையை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு

வடக்கு மாகாண கல்வி அமைச் சிற்குட்பட்ட 12 கல்வி வலயங் களிலும் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரி யர்கள், கல்விசாரா பணியா ளர்கள் ஆகியோரிற்கான 2006 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப் படாமல் உள்ள சம்பள நிலுவை, வருடாந்த சம்பள ஏற்ற படிகளை வழங்குவதற்காக 7. 82 மில் லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வ தற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதி யில் உள்ள 9 மாகாணங்களி லும் கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக் கம் பாடசாலை அதிபர், ஆசிரியர் கள், கல்விசாரா பணியாளர்கள் ஆகியோரிற்கு வழங்கப்படாமல் உள்ள சம்பள நிலுவை, வருடாந்த சம்பள ஏற்றபடிகளை வழங்கு வதற்காக 902.94 மில்லியன் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதில் வடக்கு மாகாணத்திற்கு 7.82 மில்லியன் ரூபாவும் கிழக்கு மாகாணத்திற்கு 98.88 மில்லியன் ரூபாவும் மேல் மாகாணத்திற்கு 212.77 மில்லியன் ரூபாவும் தென் மாகாணத்திற்கு 146.80 மில் லியன் ரூபாவும் ஊவா மாகாணத் திற்கு 41.04 மில்லியன் ரூபாவும் வடமத்திய மாகாணத்திற்கு 41.12 மில்லியன் ரூபாவும் வடமேல் மாகாணத்திற்கு 170.94 மில் லியன் ரூபாவும் மத்திய மாகாணத் திற்கு 76.14 மில்லியன் ரூபாவு மாக 902.94 மில்லியன் ரூபா நிதி ஒன்பது மாகாணங்களிலுமுள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா பணியாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற் காக பகிர்ந்தளிக்கும் நடவடிக் கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)

## யுத்தத்தால் கண்பார்வை இழந்த இருவருக்கு உதவித்தொகை



நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தினால் கணபார்வையை இழந்த இளைஞர்கள் இருவருக்கு உளவியல் கற்கை நெறியைத் தொடர்வதற்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சுவிட்சர்லாந்து ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோவில் வழங்கியுள்ளது.

வசந்த நகர் திருமுறிகண்டி கிருஷ்ணபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரு க்கே உதவித் தொகை இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டது.

திருவிழா காலங்களில் பக்தர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு வழங்கப்பட்டது.

இவ் உதவியை வலி.வடக்கு மீள் குடியேற்றத் தலைவர் ச.சஜீ வன் நேரில் சென்று வழங்கி யுள்ளார். (2)

## பொலிஸார், பொதுமக்கள் இணைந்த விளையாட்டுப் போட்டிகள் முன்னெடுப்பு

### மு/மாங்குளம் வித்தியில் இன்று; முல்லை. பொது மைதானத்தில் நாளை

இலங்கை பொலிஸ்திணைக் களத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நாடு தழுவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங் களைச சேர்ந்த பொலிஸார், பொதும க்கள் ஆகியோர் இணைந்த ரீதியி லான பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவிற்குட்பட்ட 7 பொலிஸ் நிலையங்களுக்கு இடை யிலான உதைபந்தாட்டம், மென் பந்து, துடுப்பாட்டம் ஆகிய போட்டி நிகழ்வுகள் நடைபெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவ லில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழி காட்டலின் கீழ் மாங்குளம், மல் லாவி, முல்லைத்தீவு, ஒட்டுச்சுட்டான், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, வெலி ஓயா ஆகிய பொலிஸ் நிலைய ங்களைச் சேர்ந்த பொலிஸார், பொது மக்கள் ஆகியோர் இணைந்து பங் கேற்கும் கரப்பந்தாட்டப் போட்டி கட ந்த 31ஆம் திகதி புதன்கிழமை வெலி ஓயா பொலிஸ் நிலையத்தின் ஏற்பா ட்டில் வெலி ஓயா பொது விளையா ட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வெலி ஓயா பொலிஸார் பொதுமக்கள் இணைந்த அணி யினர் முதலாமிடத்தையும் மாங்கு ளம் பொலிஸார் பொதுமக்கள் இணை ந்த அணியினர் இரண்டாமிடத்தை யும் தனதாக்கிக் கொண்டனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் மாங் குளம் பொலிஸ் நிலையத்தின் ஒழுங் கமைப்பில் 7 பொலிஸ் நிலை யங்க ளைசேர்ந்த பொலிஸார்பொது மக்கள் இணைந்த அணியினர் பங்கேறகும் உதைபநதாட்டப்போட்டி நடைபெறும.

நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் ஒழுங்கமைப்பில் 7 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸார் பொதுமக்கள் ஆகியோர் இணைந்த அணியினர் பங்கேற்கும் மென்பந்து துடுப்பாட்ட போட்டி முல் லைதீவு பொதுமைதானத்தில் நடை பெறும் என முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தக வலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## வட்டுவாகல் பாலம் புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன்ரூபா நிதி தேவை

### நிதி கிடைக்கப் பெற்றதும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்கிறார் மாவட்ட செயலாளர்

முல்லைத்தீவு ஏ-35 வீதியின் வட்டுவாகல் பாலத்தை புனர மைப் பதற்கான நிதி கிடைக்கும் போது அதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஏ-35 வீதியில் காணப்படும் வட்டுவாகல் பாலம் சேதமடைந்து மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இவ்வாறு குறித்த பாலம் மிக ஆபத்தான நிலையில் காணப் படுவதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே குறித்த பாலத்தினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக கோரி க்கை விடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் தொடர்புகொண்டு வினவிய போது வட்டுவாகல் பாலத்தை புனர மைப்பதற்கு விண்ணப்பம் செய்ய ப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக் களத்திற்கு (ஆர்.டி.ஏ) அதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் பாலத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான பாலமாக காணப்படும் வட்டுவாகல் பாலத்தைப் புனர மைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடு செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொக்கிளாய் பகுதியில் பதியபாலம் அமைப் பதற்கு ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதியும் வற்றாப்பளை வீதி புனரமைப்பிற்கு இருநூறு மில்லி யன் ரூபாவும் என மூன்று வேலை களுக்கும் மொத்தமாக இரண்டா யிரத்து எண்ணூறு மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடு செய் யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (2-15)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2016
04

- 1666 - லண்டன் மாநகரில் மூன்று நாட்களாக இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் 13,000 இற்கும் அதிகமான வீடுகள் அழிந்தன.
- 1781 - லாஸ் ஏஞ்சலஸ் நகரம் ஸ்பானிய ஆளுந ரான ஃபிலிப்பே டி நெவெ என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1884 - குற்றவாளிகளை ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்சுக்கு அனுப்பும் கொள் கையை பிரித்தானியா கைவிட்டது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: நேபாளம் ஜெர்மனி மீது போரை அறிவித்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஐரோப்பியப் போரில் ஜப்பான் நடுநிலையை அறிவித்தது.
- 1956 - வன்தட்டு நினைவகத்தைக் கொண்ட உலகின் முதலாவது கணினியை ஐபிஎம் அறிமுகப்படுத்தியது.
- 1963 - சுவிஸ் எயார் விமானம் சுவிட்சர்லாந்தில வீழந்து நொருங்கியதில் அதில் பயணஞ் செய்த அனைத்து 80 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1970 - சல்வடோர் அலெண்டே சிலி நாட்டின் அதிபரானார்.
- 1971 - அலாஸ்காவில் போயிங் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 111 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1972 - ஐக்கிய அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் ஜெர்மனியின் மியூனிக் நகரில் இடம்பெற்ற 1972 ஒலிம்பிக போட்டிகளில் நீச்சலில் ஏழாவது தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்தார்.
- 1978 - அண்ணா பல்கலைக்கழகம் அமைக் கபபட்டது.
- 2006 - இஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாட சாலை ஒன்றின் அடியில் கிமு 1ம் நூற்றாண் டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு புதை குழிக் குகை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.
- 2007 - சூறாவளி ஃபீலிக்ஸ் நிக்கராகுவா வைத் தாக்கியதில் பலத்த நிலச்சரிவுகளும் உயி ரிழப்புகளும் ஏற்பட்டன.

பிறப்புக்கள்

- 1824 - ஆன்டன் புரூக்னர், ஆஸ்திரிய இசையமைப்பாளர். (இ. 1896)
- 1825 - தாதாபாய் நௌரோஜி, இந்திய அரசியல்வாதி. (இ. 1917)
- 1902 - தாமஸ் மிட்ச்சல், இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர். (இ. 1996)
- 1910 - டெனிஸ் டொம்லிங்சன், தென்னாப் பிரிக்கத் துடுப்பாட்ட வீரர். (இ. 1993)
- 1926 - ஐவன் ஈலிச், ஆஸ்திரிய மெய்யிய லாளர். (இ. 2002)
- 1927 - ஜோன் மெக்கார்த்தி, அமெரிக்கக் கணினியியலாளர். (இ. 2011)
- 1939 - டெனிஸ் லின்ட்சி, தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர். (இ. 2005)
- 1941 - சுசில்குமார் சிண்டே, இந்திய அரசியல்வாதி.
- 1950 - இகுத்திசாமுத்தீன், பாக்கித்தான் துடுப்பாட்ட வீரர்.
- 1952 - ரிசி கபூர், இந்திய நடிகர்.
- 1955 - கார்த் லே ரூ, தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்.
- 1961 - ரிஸ்வான் உஸ் சமான், பாக்கித்தா னியத் துடுப்பாட்ட வீரர்.
- 1962 - கிரான் மோரி, இந்தியத் துடுப்பாட்ட வீரர்.
- 1962 - சின்யா யாமானாக்கா, சப்பானிய மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர்
- 1971 - லான்சு குளுசுனர், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்.
- 1974 - நவீட் அஸ்ரப், பாக்கித்தான் துடுப்பாட்ட வீரர்.
- 1981 - பியான்சே நோல்ஸ், அமெரிக்க நடிகை.

இறப்புகள்

- 422 - முதலாம் போனிஃபாஸ் (திருத்தந்தை).
- 1907 - எட்வர்டு கிரெய்கு, நார்வேயைச் சேர்ந்த இசையமைப்பாளர். (பி. 1843)
- 1987 - பில் போவ்ஸ், இங்கிலாந்து துடுப் பாட்ட வீரர். (பி. 1908)
- 2006 - ஸ்டீவ் இர்வின், ஆஸ்திரேலிய இயற்கை ஆர்வலர். (பி 1962)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 | 50 | 80 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 80 | 80 | 100 | 100 |
| தக்காளி | 50 | 50 | 40 | 40 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 100 | 90 | 60 | 80 |
| கோவா | 140 | 80 | 120 | 90 | 80 | 100 |
| கரட் | 100 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பூசணி | 30 | 20 | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 20 | 50 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 200 | 60 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 120 | 50 | 80 | 50 |
| கருணைக்கிழங்கு | 120 | 140 | 160 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 160 | 50 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 20 | 40 | 40 | 40 | 70 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 300 | 120 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 160 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 20 | 60 | 50 | 50 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 280 | 240 | 200 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40-60 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 140 | 150 | 160 | 60 | 160 | 100 |
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 30 | 15 |
| ஈரப்பலா | 40 | 20 | 60 | 40 | 80 | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதங்குளம் அடர்ந்த காட்டுப்பகுதியில்

# கடத்தி செல்வதற்கு தயார் நிலையில் இருந்த 58 பாலை, முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவில் உள்ள மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்துவெட்டுவான், மருதங்குளம் கிராமத்தின் அடர்ந்த காட்டுப் பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான 58 பாலை, முதிரை மரக் குற்றிகள் கடத்திச் செல்லப் படுவதற்கு தயாராக இருந்த நிலையில் பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது கைப் பற்றப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடார்பாக மேலும் தெரிய வருவதாவது,


மல்லாவி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புத்துவெட்டுவான்,ஐயங்கன்குளம், கொக்காவில், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியன்குளம் ஆகிய கிராமங்களில் இருந்து சட்ட விரோதமான முறையிலும் சூழலைப் பாதிக்கும் வகையிலும் ஆற்று மணல், கிரவல் மண் அகழ்வு உட்பட பயன் தரு மரங்கள் வெட்டப்பட்டு தினசரி கடத்தப்படும் சம்பவங்கள்இடம்பெறுவதாக முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே மேற்படி சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி வழிநடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரே இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டு 58 மரக்குற்றிகளை மீட்டு மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் மரக்கடத்தலுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளதாகவும் அவர்களை மிக விரைவில் கைது செய்யும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## கனகபுரம் பிரதான வீதியின் நிலையை சற்று கவனியுங்கள்



கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, கனகபுரம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கனகபுரம் பிரதான வீதியின் நடுவே பாரிய குன்றும் குழியும் ஆங்காங்கே இருப்பதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப் பிரதான வீதியானது ஏ-9 வீதியிலிருந்துகனகபுரம் நகரத்திற்கூடாக அக்கராயன் செல்லும் வீதியாகும்.

இவ் வீதியில் உதயநகர் சந்திக்கு அருகாமையிலுள்ள இப்பிரதான வீதியின் 10 மீற்றர் வரையிலான பகுதி இவ்வாறு சேதமடைந்து காணப்படுவதாக சாரதிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இவ் விடயம் தொடர்பில் வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் கவனத்தில்எடுத்து இவ்வீதியை சீர்செய்து தருமாறு பொது மக்கள், சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-283)

## மோ.சைக்கிள்-உழவு இயந்திரம் விபத்து; மூன்று பேர் படுகாயம்



முல்லைத்தீவு தண்ணீரூற்று பகுதியில் இடம்பெற்ற உழவு இயந்திரம் மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு 9.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரான றிஸ்வான் (வயது -34), உழவு இயந்திர சாரதியான ஆனந்தரூபன் (வயது - 31), உதவியாளரான கதிரவேலு (வயது - 42) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முள்ளியவளையில்இருந்து தண்ணீரூற்றுப் பகுதி நோக்கி உழவு இயந்திரப் பெட்டியில் நெல் மூடைகளை ஏற்றி பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரம் திடீரென வலது பக்கமுள்ள [illegible] வீதியை நோக்கி திரும்ப முற்பட்டவேளை எதிரே நீராவிப்பிட்டியிலிருந்து தண்ணீரூற்று நோக்கி அதி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரத்தின் முன் பகுதியுடன் மோதுண்டு விபத்துக் குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் சுமார் 10 மீற்றர் தூரத்திற்கு அப்பால் தூக்கிவீசப்பட்ட அதே வேளை உழவியந்திரத்தின் சாரதி மற்றும் உதவியாளர் தூக்கி வீசப்பட்டு படு காயம் அடைந்தனர்.

இதன் பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி மூலம் மூவரும் மேற்படி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

தகவலறிந்த முள்ளியவளை பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன் இரு வாகனங்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. (2-302-310)

## நிர்வாகத் தெரிவுக்கூட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட ஊடக சங்க நிர்வாக தெரிவுக் கூட்டமானது இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் அருகாமையிலுள்ள தமிழருவி இணைய வானொலி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சகல நிறுவன ஊடகவியலாளர்கள் அனைவரும் இவ்ஊடக சங்க நிர்வாகத் தெரிவுக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.மேலதிக தொடர்புகளுக்கு 077 4010861எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஊடக சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (2-281)

## நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிப் பயணித்தவருக்கு ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் 7 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையும் கடந்த முதலாம் திகதி கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தர விடப்பட்டது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் புகையிரதக் கடவை மூடப்பட்டிருந்த சமயம் ஆபத்தான முறையில் புகையிரதக்கடவையைக்கடக்க முற்பட்டவருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதி அனுமதிப் பத்திரம் இரண்டு மாத காலத்திற்கு நீதிமன்றினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் புகையிரதக் கடவை மூடப்பட்டிருந்த சமயம் ஆபத்தான முறையில் புகையிரத வீதியை மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட ஒருவரை கடந்த 19 ஆம் திகதி கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட நபரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான்நீதிமன்றில் நீதமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

குறித்த குற்றவாளிக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரண்டு மாத காலம் இடைநிறுத்தி வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சிப் பகுதியில் வரிப்பத்திரமின்றியும் காப்புறுதிப்பத்திரமின்றியும் வாகனம் செலுத்திய நபருக்கு 6 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் வரிப்பத்திரமின்றியும் காப்புறுதிப் பத்திரமின்றியும் வாகனம் செலுத்திச் சென்ற நபர் ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 6 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢.

கிளிநொச்சி பளைப்பகுதியில் பாரஊர்தியொன்றில் 29 தேக்கமரக்குற்றிகளை கொண்டு சென்றவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி பளைப்பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கடந்த முதலாம் திகதி லொறி ஒன்றில் 29 தேக்கமரக்குற்றிகளை மாட்டெருவுக்குள் மறைத்துக் கொண்டு சென்ற சமயம் ஒருவரை கைது செய்ததுடன் லொறி மற்றும் தேக்கமரக்குற்றிகளையும் கைப்பற்றியிருந்தனர்.

இதனையடுத்து இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பளைப்பொலிஸார் குறித்த சாரதியை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட சாரதியை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது. (2-15)

## மஹோற்சவம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவானது எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறவுள்ள இத்திருவிழாவில் 14 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழா பிற்பகல் 2மணிக்கு கணேசபுரம் சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று அன்றைய தினம் இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெறும். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய பிறகு வருந்துவதை விட பேசுவதற்கு முன்னாலேயே யோசனை செய்வது மிகவும் நல்லது.
–ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தலைவர்கள் அவமானப்படும் நிலைவரும்

இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டிப்போகும் போது இலங்கை அரசு மீது தமிழ் மக்களுக்கு ஆத்திரம் வரும் என்று யாரேனும் கருதுவார்களாயின் அது மகா தவறாகவே இருக்கும்.

உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வும் அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு விடையும் அறியப்படாத நிலைமை நீடிக்குமாயின் அதன் விளைவு தற்போது பாராளுமன்றப் பதவிகளிலிருக்கும் தமிழ் அரசியல் தலைமை மீதே தமிழ் மக்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

தமிழ் அரசியல் தலைமை அரசுடன் சேர்ந்து கொண்டு தங்களை வஞ்சிப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கருதுகின்றனர்.

இந்த நிலை பாராமல் விடப்படுமாக இருந்தால் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டியில் விருந்தினராகக் கூட கலந்து கொள்வது முடியாத காரியமாகி விடும்.

எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு காலம் தாழ்த்தப்படுமாக இருந்தால் முன்னைய சூழ்நிலை போன்றல்லாமல் தமிழ் அரசியல் தலைமை மீது தமிழ் மக்கள் கோபம் கொண்டு பாய்வர். எந்த நிகழ்வுகளில் அவர்களைக் கண்டாலும் மிகவும் கீழ்த்தரமான சொற்பிரயோகங்களால் தூஷிக்கப்படுவர். இதற்கான அறிகுறிகள் பல சந்தர்ப்பங்களில் தென்படத் தொடங்கியுள்ளன.

இத்தகையதோர் சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால் அது தமிழ் மக்களின் அரசியல் களத்தை சிதறடிக்கும் என்பது திண்ணம்.

ஆகவே, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ற விடயத்தில் தமிழ் அரசியல் தலைமை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

2016ஆம் ஆண்டின் இறுதிக்குள் தீர்வு கிடைக்கும்; இதை நம்புங்கள் என்று அறிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் வாக்குறுதி 2016 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் நிறைவேறாமல் போகுமாயின் தமிழர் பகுதிகளுக்கு அவர் இடைசுகம் வந்து போவது கூட அடியோடு கெட்டுப்போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இருந்தும் 2016 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் தீர்வு கிடைப்பதற்கான சாத்தியம் அறவே இல்லை என்பது சாமானிய மனிதர்களுக்கும் தெரிந்ததே.

எனினும் இரா.சம்பந்தர் அவர்கள் புதிய அரசியல் அமைப்பு விரைவில் நடைமுறைக்கு வரும் எனவும் அவ்வாறு புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வரும் போது எங்கள் பிரச்சினைகள் அனைத்தும் அடியோடு அறுபட்டுப்போகும் எனவும் நம்புகிறார்.

இந்த நம்பிக்கை அவரின் அரசியல் அறிவு, அனுபவம் என்பவற்றின் ஊடாக பெறப்பட்டதாக இருக்கும் என்று நாம் நம்பவில்லை.

ஏனெனில் இரா.சம்பந்தரின் அரசியல் அனுபவம் ஒன்றே இப்படி ஒரு முடிவுக்கு அவர் வராமல் இருப்பதற்கும் போதுமானதாகும்.

இருந்தும் அவர் அப்படியொரு நம்பிக்கையைக் கொண்டுள்ளார் எனில் அதற்கான காரணமும் சூழ்நிலையும் எதுவாக இருக்க முடியும் என்று ஆராய்வது அவசியமாகும்.

இத்தகையதொரு கட்டத்தில்தான் இரா.சம்பந்தர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை; தமிழ் மக்களின் அரசியல் தலைவர் என்ற எல்லைகளை கடந்து இலங்கைத் திருநாட்டின் ஒரு நல்ல எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார் என்பதைக் கண்டறிய முடியும்.

இதன் காரணமாகவே இரா.சம்பந்தரால் ஒரு நேர்மையான–விசுவாசமான நல்ல தமிழ்த் தலைவராக செயற்பட முடியாமல் உள்ளது.

இத்தகைய நிலைமை தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களைச் சந்திக்கமுடியாத மிக மோசமான ஒரு சூழமைவை ஏற்படுத்தும் என்பது சர்வ நிச்சயம்.

# சகோதர மக்களுக்காக சேவை புரிய எப்போதுமே நாம் ஆயத்தமாயுள்ளோம்

## யாழ்.பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் பிரச்சினைகளை எங்களது பிரச்சினைகளாக நினைக்கும் பொலிஸ் திணைக் களத்தின் கௌரவத்தை பாதுகாத்துகொண்டு சகோதர மக்களுக்காக சிநேக பூர்வமான ஓர் சேவையை வழங்குவதற்கு நாங்கள் எப்போதுமே ஆயத்தமாக இருக்கின்றோம் என யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம்இலங்கை பொலிஸ் திணைக்களமானது ஆரம்பிக்கப்பட்டு 150 ஆண்டுகளை கடந்திருந்தது. இதனை நினைவுகூரும் வகையிலான நிகழ்வுகள் நாடுமுழுவதும் இடம்பெற்று வந்திருந்த நிலையில் யாழில் இடம்பெற்ற பொலிஸ் தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை மக்களினையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாப்பதற்காக பொலிஸ் திணைக்களமானது ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை 33 பொலிஸ்மா அதிபர்கள் சேவையாற்றியுள்ளதுடன் தற்போது 34ஆவது பொலிஸ்மா அதிபராக பூஜித் சேனாதி பண்டார ஜெயசுந்தர சேவையாற்றி கொண்டிருக்கிறார்.

1864ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி மானவல்ல நகரத்திற்கு முற்பட்ட இடத்திலிருந்து துணிகரமாக கடமையாற்றுவதற்கு சென்ற பொலிஸ் கொஸ்தாபல் சபானிலிருந்து இன்று வரை 3110 உத்தியோகத்தர்கள் வீர மரணம் அடைந்துள்ளனர். மேலும் இவ்தொழிலை மேற்கொள்ளும்போது அநேகமான இடையூறுகளும் விமர்சனங்களும் எங்களுக்கு எதிராக இருந்தாலும் அவற்றை கடந்து மக்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எங்களது பிரதான கடமையாக இருந்தது.

பொலிஸ் சேவையென்பது தினமும் மக்களோடு இணைந்து செயற்படும் சேவையாகும். பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மக்களுடைய சேவையை விடவும் வேறு சேவைகள் இல்லை. பொலிஸாராகிய நாங்கள் பொலிஸ் நிலையங்களுக்கு வருகின்ற மக்களது முறைப்பாடுகளை விசாரிக்கும் போது எங்களது பிரச்சினையாகவே பார்க்கின்றோம்.

அந்தவகையில் பொலிஸ் திணைக்களத்தின் கௌரவத்தை பாதுகாத்துகொண்டு சகோதர மக்களுக்காக சிநேக பூர்வமான ஓர் சேவையை வழங்குவதற்கு நாங்கள் எப்போதுமே ஆயத்தமாக உள்ளோம் என்றார். (செ-4)

## மனைவி முறைப்பாடு கணவன் கைது!

(கரணவாய்)

வடமராட்சி வதிரிப் பகுதியில் கணவனால் உயிர் அச்சுறுத்தல் உள்ளதாக மனைவி செய்தமுறைப்பாட்டின் அடிப்படையில் கணவன் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் வசிக்கும் பெண் தனது ஆறுபிள்ளைகளுடன் வசிப்பதாகவும் கணவன் கத்தியினைக் கொண்டு வந்து வெட்டுவதாக மிரட்டியதாகவும் இதற்கு அஞ்சியே தான் இம்முறைப்பாட்டை பதிவு செய்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நேற்று சனிக்கிழமை செய்த முறைப்பாட்டை அடுத்து அவரது கணவன் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## திடீரென இலங்கைக்கு வந்தார் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி

(கொழும்பு)

தென் னாபிரிக்க ஜனாதிபதி ஜகோப் ஸுமா பயணம் செய்த தென்னாபிரிக்க விஷேட விமானம் நேற்றுமுன்தினம் அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

சீனா நோக்கி பயணம் செய்துகொண்டிருந்த குறித்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக இவ்வாறு தரையிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது, தென்னாபிரிக்க ஜனாதிபதி மற்றும் அவருடன்வந்த 18 பேரும் விமான நிலையத்தின் விஷேட பகுதியில் சிறிது நேரம் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எரிபொருள் நிரப்பிய பின்னர், அவர்கள் மீண்டும் சீனா நோக்கி பயணித்துள்ளனர். (இ-7,10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில மறவன்புலோ - கேரதீவு வீதி, கோகிலாக்கண்டி, அச்செழு பிரதேசம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் குமுழமுனை, கரியாலைபடுவான், அன்பு புரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், 651ம் பிரிவு இராணுவமுகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சாம்பல் தோட்டம் கிராமம், குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோவில் வரை, தோணிக்கல் சிவன் கோவில் பிரதேசம், குட்செட் வதி ஆகிய இடங்களிலும் மனனார் பிரதேசத்தில் முதலைக்குத்தி பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# 'தியாகங்களுக்குத் தயாரான சீடர்கள் ஆவோம்'

இயேசு தன்னை பின்பற்ற விரும்பும் சீடர்கள் தம் வாழ்வை சீர்தூக்கிப் பார்த்து தன்னையே பின்பற்றி நடக்கவேண்டும் என்று கூறுகிறார்.

சீடத்துவ வாழ்க்கை ஓர் உன்னத அழைப்பு. இயேசுவின் சீடராயிருக்க என்ன செய்யவேண்டும் என்று இன்றைய பைபிள்பகுதி சொல்கிறது:"என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் ஆகியோரையும், ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது. தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது" இயேசு தனக்கு நெருக்கமானவரகளை வெறுக்க வேணடும் என்று சொன்னதாக

### பரமபிதா காட்டிய பாதை

நாம் பொருள் கொள்ளக்கூடாது. இயேசுவின் மன நிலையில் நிச்சயமாக அவர் அப்படி சொல்லியிருக்க மாட்டார். இயேசு இங்கே சொல்ல விரும்புவது மற்றவர்களை விட கடவுளை அதிகம் அன்பு செய்ய வேணடும் என்பது தான்.

பணத்திற்காக, இன்னும பிற புகழ், பெருமைகளுக்காக, ஏதோ ஒன்றைச் சாதிக்க வேண்டும் என்பதற்காக [illegible] மறந்து [illegible] நந்து உழைக்கும் பலரைப் பார்த்திருக்கிறோம். தாங்கள் ஆரம்பித்ததை வெற்றிகரமாக முடிக்க வேணடும் என்று அவர்கள் கொண்டுள்ள அந்தத் தீவிரத்தை, வெறியை தன் சீடர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார்.

இங்கு நாம் முன்பு படித்ததில் பிடித்த ஒரு கதையை பகிர்வது சாலப்பொருத்தம் என எண்ணுகின்றேன்: Dietrich Bonhoeffer டைறிச் பொணொபெர்(1906-1945) ஹிட்லர் காலத்தில், ஜேர்மனியில் வாழ்ந்த ஒரு லூத்தரன் சபை பணியாளர், இறையியலாளர். ஹிட்லரின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். துன்பங்களைச் சந்தித்தவர். ஹிட்லரின் இராணுவத்தில் கட்டாயப் பயிற்சியில் சேர்வதைத் தவிர்க்க, அவர் அமெரிக்கா சென்றார். ஆனாலும், தன் சொந்த நாட்டை விட்டு வெளியேறியது அவர்மனதை உறுத்தியது. மீண்டும் ஜேர்மனிகுத் திரும்பினார். அங்கு அவர் கைது செய்யப்பட்டார். Flossenberg:-புலோசென் பேக் என்ற சித்திரவதை முகாமில் 1945 ஏப்ரலில் அவர் தூக்கிலிடப்பட்டார்.

அவர் எழுதிய ஓர் அற்புதமான, புகழ் பெற்ற புத்தகம்: "The Cost of Discipleship" - [illegible] வேண்டிய விலை." அவர் இந்தப் புத்தகத்தை வெறும் அறிவுபூர்வமான விளக்கமாக எழுதவில்லை. தான் அந்தப் புத்தகத்தில் விபரித்த சீடராக அவரே வாழ்ந்து காட்டினார். இயேசுவின் சீடராக வாழ்வது என்பது, உலகத்தோடு ஒத்துப் போகும், கும்பலோடு கும்பலாகக் கலந்து போகும், கலைந்து போகும் வாழ்வு அல்ல. டைறிச் பொணொபெர் விரும்பியிருந்தால், ஹிட்லரின் கொள்கைகளைக் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொண்டிருக்கலாம். அல்லது, ஏற்றுக் கொண்டது போல் நடித்திருக்கலாம். 39ஆண்டுகளே வாழ்ந்த அவர், அமெரிக்கா சென்ற போது, அங்கேயே தங்கி விட்டு, போர் முடிந்த பின் ஜேர்மனி திரும்பியிருக்கலாம். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து, பல புத்தகங்கள் எழுதி புகழ் பெற்றிருக்கலாம். இவ்வாறு நாம் பட்டியல் இட்டால் அவை எல்லாமே உலக வழியில் எழும் சிந்தனைகள். ஆனால், அவர உலகம் சொன்ன வழியை விட, இயேசு இன்றைய பைபிள்பகுதியில் சொன்ன வழியைத் தேர்ந்தெடுத்தார். இயேசுவின் சீடராய் வாழ்வதற்கான விலையைக்கொடுத்தார். தூக்கிலிடப்பட்டார்.

டைறிச் பொணொபெர் சாவதற்கும் துணிந்து விடும் சீடராக வாழத் தூண்டியது இயேசுவும் அவர் வாழ்வும் ஆகும். சீடராக இயேசுவைப் பின் பற்றுவது என்பது



ஏதோ ஓர் இரவில் தோன்றி மறையும் கனவு அல்ல. மாறாக, வாழ்நாள்முழுவதும் ஒவ்வொரு இரவும் பகலும் நம் சிந்தனை, சொல், செயல் இவைகளை நிறைக்க வேண்டிய ஒரு தாகம் என்பதைத் தான் இயேசு இன்று சொல்லியிருக்கிறார்.

இயேசுவின் சீடர்கள் என்றால், குருக்கள், துறவறத்தாருக்குஎன்றுஎண்ணி, நாம் தப்பித்துக் கொள்ள முனைகின்றோம். இயேசு இந்த வார்த்தைகளைத் தன் சீடர்களுடன் தனித்து இருக்கும் போது சொல்லவில்லை. மாறாக, தன்னைப் பின் தொடர்ந்த 'பெருந்திரளான மக்களை" நோக்கி, நம் ஒவ்வொருவரையும் நோக்கிச் சொல்கிறார். தியாகங்களுக்குத் தயாராக இல்லாத உள்ளங்கள் என்னைப் பின்தொடர்வது இயலாது என்று கூறும் இயேசுவுக்கு நமது பதில் என்ன?

**ம.பிரான்சிஸ்க்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கோப்பை காற்பந்து தகுதிச் சுற்று; மெஸ்சியின் கோலால் ஆர்ஜென்டினா வெற்றி




உலகக்கோப்பை காற்பந்து தகுதி சுற்றில் மெஸ்சியின் கோலால் ஆர்ஜென்டினா வெற்றி பெற்றது.

2018 ஆம்ஆண்டு உலகக் கோப்பை காற்பந்து போட்டிக்கான தகுதி சுற்று பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. இதில் தென்அமெரிக்க கண்டத்துக்கான தகுதிச் சுற்று போட்டிகளில் 10 அணிகள் விளையாடி வருகிறது. ஒவ்வொரு அணியும் உள்ளூர், வெளியூர் அடிப்படையில் தலா ஒருமுறை மோத வேணடும். அதாவது ஒவ்வொரு அணியும் 18 ஆட்டங்களில் விளையாட வேண்டும். இதன் பிறகு புள்ளிப் பட்டியலில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் நேரடியாக உலகக் கோப்பைக்கு தகுதி பெறும். 5ஆவது இடத்தை பெறும்அணி பிளே-ஓப் சுற்றில் விளையாடி அதன் மூலம் உலகக் கோப்பை வாய்ப்பை எட்டலாம்.

இந்த நிலையில் நடந்த ஒரு தகுதி சுற்று ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா, உருகுவே அணியுடன் மோதியது. சொந்த மண்ணில் ஆடிய ஆர்ஜென்டீனா 1:0 என்ற கோல் கணக்கில் உருகுவேயை சாய்த்தது. கடந்த ஜூன் மாதம் திடீரென ஓய்வு பெறுவதாக அறிவித்து பரபரப்பை ஏற்படுத்திய ஆர்ஜென்டீனா கப்டன் லயோனல் மெஸ்சி, பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க இரு மாதங்களுக்கு முன்பு தனது ஓய்வு முடிவை கைவிட்டார். இந்த ஆட்டத்தில் களம் இறங்கி ரசிகர்களை பரவசப்படுத்திய அவரே வெற்றிக்கான கோலையும் (43ஆவது நிமிடம்) அடித்தார். மற்றொரு ஆட்டத்தில் பிரேசில் அணி 3:0 என்ற கோல் கணக்கில் ஈகுவடாரை துவம்சம் செய்தது.

தென்அமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்றில் இதுவரை ஒவ்வொரு அணியும் தலா 7 ஆட்டங்களில் ஆடியிருக்கின்றன: இதில் ஆர்ஜென்டீனா 14 புள்ளிகளுடன் முதலிடத்திலும், உருகுவே, கொலம்பியா, ஈகுவடார் தலா 13 புள்ளிகளுடன் அடுத்த இடங்களிலும், பிரேசில் 12 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்திலும் உள்ளன. (க)

# ஆஸிக்கு எதிரான போட்டி கப்டன் மத்யூஸ் விலகல்




இலங்கை அணியின் கப்டன் மத்யூஸ் காயம் காரணமாக அவுஸ்திரேலிவிற்கு எதிரான எஞ்சிய போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதுவரை நடைபெற்று முடிந்துள்ள நான்கு போட்டிகளில் மூன்று போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை 3:1 எனக் கைப்பற்றியுள்ளது.

நான்காவது போட்டி புதன்கிழமை நடைபெற்றது.

இந்த போட்டியின்போது இலங்கை அணியின் கப்டன் மத்யூஸ் காயம் அடைந்தார்.

இதனால் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான கடைசி ஒருநாள் மற்றும் இரண்டு இருபது 20 போட்டிகளில் விளையாட மாட்டார் என்று இலங்கை கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

மேலும், அந்த அணியில் இருந்து திசார பெரேரா, லக்ஷ்மன் சண்டகான் ஆகியோர் ஐந்தாவது ஒருநாள் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இந்த மூன்று பேருக்கும் பதிலாக உபுல் தரங்கா, நிரோஷன் டிக்வெல்லா, தசுன் ஷனகா ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க)

# 2019 உலகக்கிண்ணம்தான் எனது இலக்கு; யுவராஜ்!




இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாட்டில் 2019ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் 50 ஓவர் உலகக்கோப்பை தொடரில் இடம்பிடிப்பதே என்னுடைய இலக்கு என்று யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர் யுவராஜ் சிங். 2007 ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி இருபது-20 உலகக்கோப்பையை கைப்பற்ற முக்கிய பங்காற்றினார். இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஸ்டூவர்ட் பிராட்டின் ஓவரில் தொடர்ச்சியாக 6 சிக்சர்கள் விளாசி உலக சாதனை படைத்தார்.

2011ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை போட்டியில் இந்தியா கோப்பையை வெல்ல முதுகெலும்பாக இருந்தார். 362 ஓட்டங்கள்குவித்தது டன், 15 விக்கெட்டுக்களும் வீழ்த்தி தொடர்நாயகன்விருதுபெற்றார்.

ஆனால், அதன்பின் இந்திய அணியில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. பெரும் போராட்டத்திற்குப் பின் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக நடைபெற்ற இருபது 20 போட்டியில் இடம்பிடித்தார். தொடர்ந்து உலகக் கோப்பை வரை விளையாடினார். ஆனால் ஒருநாள்போட்டிக்கான அணியில் இடம் கிடைக்காமல்திணறிவருகிறார்.

தற்போது துலீப் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறார். அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கை பற்றி குறிப்பிடுகையில், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாட்டில் நடைபெற இருக்கும் 2019 ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக் கோப்பை வரை விளையாட இருக்கிறேன் என்றார்.

இதுகுறித்து யுவராஜ் சிங் கூறுகையில், "வாய்ப்பு கிடைக்கும்போது அதை சரியாக பயன்டுத்திக் கொள்ள வேண்டும் என்பதால், விளையாடாமல் இருக்கும்போதும் கடினமாக பயிற்சி செய்து வருகிறேன். உண்மையாகவே, நான் ஏன் இன்னும் சர்வதேச கிரிக்கெட் விளையாடக் கூடாது. நான் மீண்டும் இந்திய அணிக்காக விளையாட விரும்புகிறேன். மீண்டும் அணிக்கு திரும்பினால், சிறப்பாக விளையாடி அணியில் இரண்டு மூன்று வருடங்கள் தனது திறமையை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. 2019 ஆம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் விளையாடுவதே என்னுடைய இலக்கு" என்றார். (க)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி; நடால் 4 ஆவது சுற்றுக்குத் தகுதி



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் நடால், கெர்பர் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் 4 ஆம் நிலை வீரரும், 2 முறை சம்பியனுமான ரபேல் நடால் (ஸ்பெயின்) 3 ஆவது சுற்றில் ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் குஸ்னெட்சோவை எதிர் கொண்டார். இதில் நடால் 6:1, 6:4, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வென்றார்.

அவர் 2013 ஆம் ஆண்டுக்கு பிறகு தற்போது தான் அமெரிக்க ஓபனில் 4ஆவது சுற்றுக்கு முன்னேறி இருக்கிறார். நடால் 4 ஆவது சுற்றில் பிரான்ஸை சேர்ந்த லூகாஸ் பவுலியை சந்திக்கிறார்.

உலகின் முதல் நிலை வீரரும், நடப்பு சம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா) 3 ஆவது சுற்றில் ரஷ்யாவைச் சேர்ந்த மைக்கேல் யூஜ்னியை எதிர் கொண்டார். இதில் ஜோகோவிச் 4:2 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போது யூஜ்னி காயத்தால் விலகினார்.

இதனால் ஜோகோவிச் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவர் 2ஆவது சுற்றிலும் விளையாடாமலேயே வெற்றி பெற்றார்.

ஏனைய ஆட்டங்களில் மான்பில்ஸ், சோங்கோ (பிரான்ஸ்) போன்ற முன்னணி வீரர்கள் வென்று 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

7ஆம் நிலை வீரர் சிலிச் (குரோஷியா) அதிர்ச்சிகரமாக தோற்றார். ஜான் சோக் (அமெரிக்கா) 6:4, 6:3, 6:3 என்ற செட் கணக்கில் சிலிச்சை வீழ்த்தினார்.

இதே போல் 20ஆம் நிலை வீரர் ஜான் இஸ்னெரும், (அமெரிக்கா) அதிர்ச்சிகரமாக தோற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் நிலை வீராங்கனை கெர்பர் (ஜேர்மனி) 6:1, 6:1 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் அமெரிக்க வீராங்கனை பெலிசை வீழ்த்தினார்.

ஏனைய ஆட்டங்களில் மேடி சன் கெய்ஸ், ராபர்ட்டோ சான்சி, ஹேஸ்னியாக்சி குவிட்டோவா ஆகியோர் வென்று 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

12 ஆம் நிலை வீராங்கனை சிபுல்கோவா அதிர்ச்சிகரமாக தோற்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வமணி முத்துலிங்கம்



வேலணையை பிறப்பிடமாகவும், மன்னார் கள்ளியடி, இலுப்பைக் கடவையினை வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி தெய்வமணி முத்துலிங்கம் 02.09.2016 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஷ்-நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், வினாசித்தம்பி-மகிழம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் வி.முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும், கோபாலகிருஷ்ணன்(லண்டன்), சேதுராஜா (லண்டன்), சிவாஜினி(லண்டன்), பிரபா(லண்டன்), சதீஸ்வரன் (லண்டன்), கிசாந்தினி (பிரான்ஸ்), விஜிதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகபூசணி அம்மாள் (மனோன்மணி), குணமணி, வசந்தமல்லிகா, ஞானசேகரலிங்கம், திருநாமம், விசியமணி, சிவபாதம், கற்பகமணி ஆகியோரின் மூத்த சகோதரியும் மற்றும் கிருஷ்ணகுமார் (லண்டன்), ரதீஸ்வரி(லண்டன்), துஸ்யேந்தினி (லண்டன்), சிவதர்சினி (லண்டன்), முரளிதரன் (பிரான்ஸ்), சாருபிரபா ( லண்டன்), சாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நாகேஸ்வரி, அன்னம்மா, அமிர்த லிங்கம், கனகலிங்கம், தர்மலிங்கம், மகேந்திரி, இராசலிங்கம், பஞ்சலிங்கம் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (சுபன்), புஸ்பராணி, பரமலிங்கம், கந்தசாமி, மலர், முத்துலிங்கம், நாகேஸ்வரன், காலஞ்சென்ற கணேசலிங்கம், சடாட்சரம், சாந்தினி, கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனியும் அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சிவ ஞானம், செல்வச்சீராளன், கந்தசாமி, காலஞ்சென்ற செல்வக்குணவதி, சந்திரவதனி, கௌரி, அஜந்தா, சற்குணவதி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், மதுஷன், தர்மிகா, மதுஷா, சேதுஜா, காயத்திரி, மிதுனா, ஜனகன், அனுஜன், ரசிகா, ஆதித்தன், வேஜினி, காலஞ்சென்ற வேர்னிகா, அச்சயன், அர்விந்த், தனுப்பிரியன், றோய்யின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கள்ளியடியில் உள்ள அவரது இல்லத்தில் திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு இடம்பெற்று அதனைத்தொடர்ந்து கள்ளி யடி இந்து மயானத்தில் பி.ப 3.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்
0770476140, 0778041446

(5814)

## அப்புத்துரை யோகராஜா (குஞ்சர்)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை யோகராஜா 03.09.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-நாகரத்தினம் தம்பதி யினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் பர்வத லட்சுமி தம்பதியரின் மருமகனும், மஞ்சுளாவின் அன்புக் கணவரும், ஜலஜா, மேனகா, அருள் பிரதீப், பானுகோபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசுதனின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகராஜா, மகேஸ்வரி, மங்கையற்கரசி, குலமணி மற்றும் வரதராஜா குலோத்தமி-செல்வராஜா ஆகியோரின் சகோதரனும், மனோகரன், மனோகரி, மாலதி ஆகியோரின் மைத் துனரும், ஜெனிலியா, ஜெவின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (04.09. 2016) மதியம் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு பி.ப 1.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.1199, k.k.s வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-
0778010228, 0773612249

(5817) குடும்பத்தினர்

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை மடத்தடி ஸ்ரீ சாஞ்ச நாகபுவ னேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற் சவம் நேற்று 3ஆம் திகதி சனிக்கிழமை ஆர ம்பமானது.

எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை ஏகாதசியன்று தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-3)


## கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஓர் நற்செய்தி!

உங்கள் ரி.சி.ரியில் யாழ்ப்பாண பிரதேச செய லகத்திற்குட்பட்ட எதிர்கால செல்வங்களின் ஆரோக்கியத்திற்கான July, August மாதங்க ளுக்குரிய உணவு விநியோகம் ஆரம்பம். உங்கள் 2000 ரூபாய் உணவு முத்திரைக்கு தரமானதும் மலிவானதும் சுகாதாரமானதுமான உணவு களை சத்துணவு ஆலோசகரின் அறிவுறுத்தலுக்கமைய ஒரே கூரையின் கீழ் சுயதெரிவு முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

சிந்தியுங்கள் செயற்படுங்கள் எதிர்கால சந்ததியினரை மேம்படுத்துங்கள்.

(சி-5643)

**TCT Multi Trade Centre**

No. 527, Navalar Road, Nallur, Jaffna.

T.P:0769699957
0217451895

"அறப்பணியே முதற்பணி"


## அழியாத நினைவுகளோடு 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 09 - 04 - 1931



விண்ணில் 30 - 08 - 2011

திதி:திருதியை

## நடராஜா பத்மநாதன்

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை
விட்டு பிரிந்து ஆண்டுகள் ஐந்து கடந்த போதும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதில்
நீறு பூத்த நெருப்பாய் அழியாதிருக்கும் ஐயா!
நாம் இன்று போல் என்றும் வாழ உங்கள்
ஆசிகள் வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்:மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மகன்:ப.பிறேமச்செல்வன் (பிரான்ஸ்)

103/1, கோவில் வீதி, நல்லூர்.

(5806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாடகைக்கு!

யாழ்நகரில் அமைதியான சூழலில் வீடு மற்றும் அறைகள் வாடகைக்கு உண்டு
தொடர்பு 0773673309

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதியில் 2 1/2 பரப்பு காணி பயன் தரும் மரங்களுடன் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0778073546 (5819)

## வேலைவாய்ப்பு!

எமது நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை.
1.மேற்பார்வை முகாமையாளர்
2.கணினி திருத்துநர்
3.பயிலுநர்கள் GUNA BEST PC
50/12 Hospital Road,Jaffna.
522 Manipay Road,Jaffna. 0779086737
கணினி திருத்தம் விற்றல் வாங்குதல்





V2 TRAVELS 11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறையில் எமது 5வது கிளை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள் வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா? விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
ரூபா 1000/= பணப்பரிசு
UK – 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
முற்பதிவுகளுக்கு - 0768226240 (C-5629)

## Personal Class-கணினி

*12வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2016, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
சிங்கள Typing இலவசம்
* கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
TP:0779672038 ஆசிரியர்:KRC


## கேரள... சிகன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிஸின் வழிகாட்டலுக்கு அமைவாக மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உ.கௌசிகன் தலைமையில் சென்ற பொலிஸாரே இதனைக் கைப்பற்றினர். (சு-4)


## காணி விற்பனை

1. சபாபதி லேன் கொக்குவிலில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2. பலாலி வீதி, திருநெல்வேலியில் 6 1/2 பரப்புக் காணி துண்டுகளாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.
3. கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் 8 பரப்பு, 13 குழி விற்பனைக்கு உண்டு.
077 1671 174
077 7286 061 (5804)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.





CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062 (C-5634)

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு (Water Proofing)

உங்கள் இல்லங்கள் நிறுவனங்கள் போன்றவற்றிலுள்ள சீமெந்தினாலான கட்டடங்கள்,நீர்த்தாங்கிகள் மற்றும் மாடிக் கட்டடங்களில் உள்ள குளியல் அறைகள் என்பவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளை தடுத்து நிறுத்துவதுடன் உங்களின் பழைய கட்டடங்களின் சுவர்களில் ஏற்பட்டுள்ள பிளவுகளைச் சிறந்த தொழில் வல்லுநர்களைக் கொண்டு சீர்செய்து தரப்படும்.

FINCO ஸ்தாபனத்தின் ஏக விநியோகஸ்தர்கள் ஆகிய எங்களிடம் ஒப்பந்தகாரர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். (5810)

North and East Engineering
No.55 Stanly Road, Jaffna.
பீப்பிள் லீசிங்குக்கு முன்பாக
021 222 2363, 077 524 4177, 077 232 3000
FINCO


# மரண அறிவித்தல்



## ஐயாத்துரை சிவராசா

(பிரபல விவசாயி)

புளியம்பொக்கணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவராசா கடந்த (01.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை-சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும்,முரசுமோட்டை குணரட்ணம்-தங்கமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவாஜினி (ஆசிரியை, யாழ்/கரம்பகம் அ.த.க.பா) அவர்களின் பாசமிகு கணவரும், அபிலாஸ் (பளை ம.க. உ/த 2014 விஞ்ஞானப் பிரிவு), ஜெனகா (விசுவமடு மத்திய கல்லூரி 2016 உ/த விஞ்ஞானப்பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, மோகனதாஸ், குகதாசன் (லண்டன்), புவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, புஸ்பமலர், தயாநிதி (லண்டன்), இரவிந்திரன் (சுவிஸ்), சிறீதரன் (ஜேர்மனி), மாலினி (கனடா), ரமேஸ்தரன் (ஜேர்மனி), குணேஸ்தரன் (அவுஸ்திரேலியா), சுகந்தினி (கனடா), யோகவதனி, குகேந்தினி (ஆசிரியை, கண்டாவளை ம.வி), வினோதரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலவெட்டித்திடல் நெடுமோட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புளியம்பொக்கணை (C-5641) குடும்பத்தினர்


## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு





11th Batch start on 10.09.2016
வேலைவாய்ப்பு உத்தரவாதம் * (*Conditions apply)
100% தொழில்சார் செயன்முறை பயிற்சிநெறி
2016 A/L மாணவர்களுக்கு 50% Discount

## Mobile Phone Repairing Course





SmartPhoneகள் உட்பட அனைத்து Phoneகளிலும் பயிற்சியளிக்கப்படும்
6th Batch start on 14.09.2016
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.
ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000 (C-5636)

# NEW SCIENCE WORLD

Navalar Road–Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
VICTORY MUST G.C.E (A/L) 2017
To Inquire : 077 336 4055

## Day Classes

திங்கள் - வெள்ளி

| | | |
|---|---|---|
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன் திரு. V. உமாசங்கர் | 7.00-9.00 |
| இணை.கணிதம் | திரு. S.S. செந்தில்நாதன் | 7.00-9.00 |
| பௌதிகவியல் | திரு. R. குகன் திரு. R. குமரன் | BatchI 9.30-11.30 BatchII 11.30-1.30 |
| இரசாயனவியல் | திரு. டயஸ் திரு. K.T. சிவகுமார் | 11.30-1.30 |

ஆரம்பம் :- 05.09.2016 திங்கள் காலை 07.00மணி (C-5630)

LONDON METROPOLITAN COLLEGE





## புதிய பிரிவுகள் ஆரம்பம்

IELTS LIFE SKILLS (A1)
Speaking & listening
Duration : 48 hours (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான IELTS A1 புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
▸ ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
▸ இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.

IELTS
Academic & General
Duration : 48 hours (week & week ends)
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் விசேட கவனிப்பு முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
IELTS 5.5 - 6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
ஒரே தரத்திலேயே தேவையான Band இனை பெற்றுக்கொள்ளலாம்.
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைத்து கற்கை நெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.தவணை அடிப்படையிலான மிகக் குறைந்த கட்டணம்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 021 753 8395 (C-5631)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி


# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 04.09.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 81








# பான் கீ மூனின் விஜயம் தமிழருக்கு என்ன இலாபம்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் கீ மூனின் யாழ். வருகை தமிழ் மக்களுக்கு தீர்வு தருமா?

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் எதற்கானது என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே. இத்தகையதொரு கேள்வியின் பின்னால் பான் கீ மூன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டதன் மூலம் அவர் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பாரா என்ற ஆதங்கம் இருப்பதை மறுத்துவிடமுடியாது.



2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இறுதி யுத்தம் முடிந்து இலங்கை அரசு தனக்கு வெற்றி என அறிவித்தது. இந்த அறிவிப்பின் மறுபக்கமாக யாருடனான போர் என்றால் தன் நாட்டிற்குள் இருக்கக்கூடிய தமிழ்மக்களுடனானது என்ற உண்மையை இலங்கை அரசு வெளிப்படையாகத் தெரியப்படுத்துகின்றது.

ஒரு நாட்டிற்குள்- தான் சகோதரராக நினைக்க வேண்டிய மக்களை மிக மோசமான பேராயுதங்களைப் பயன்படுத்தி கொன்றொழித்த மிகக் கொடூரமான செயல் இலங்கை அரசுக்குப் போர் வெற்றியாகத் தெரிகிறது.

தென்பகுதியில் இருக்கக்கூடிய எந்தப் புத்திஜீவியும் மதத்தலைவர்களும் இதென்ன அநியாயம் தமிழ் மக்களை வதைத்து கொன்றொழித்து வெற்றிவாகை சூடுவது பௌத்த தர்மமா? இதுதான் ஆட்சியின் அறமா?

சிறுபான்மை இனம் என்பதற்காக தமிழ் மக்களை இவ்வாறு கொன்றொழிப்பது நியாயமாகுமா? என்று கேட்டிலர்.

ஏன்? இலங்கைத் தீவில் சிறுபான்மையாக இருக்கக்கூடிய முஸ்லிம் மக்கள் கூட தமிழ்மக்களின் அவலம் கண்டு ஒரு அறிக்கை தனிலும் விடவில்லை என்றால் நிலைமை எப்படியாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழ்மக்கள் ஆற்றாது அழுதபோது தமிழ் மக்களை சர்வதேசம் காப்பாற்றவேண்டும் என்று கோரிக்கை விடவேண்டிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு முண்டு கொடுத்தார்.

இப்போது அந்த இஸ்லாமிய மகன் யாழ்ப்பாணத்திற்கு வந்து; தமிழ்மக்கள் சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளைக் கேட்கக் கூடாது. அரசு தருவதை வேண்டிக் கொண்டு மௌனமாக இருக்கவேண்டும் என ஆலோசனை கூறுகிறார். இந்த ஆலோசனையின் பின்னாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இருந்தது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது.

இது ஒரு புறம் இருக்க, யுத்தத்திற்குள் அகப்பட்டு தங்களைக் காப்பாற்ற யாரும் இல்லையா? என்று ஏங்கி நின்ற தமிழ்மக்களைக் காப்பாற்றவேண்டிய தார்மீகப் பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு இருந்தது.

எனினும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அது விடயத்தில் பாராமுகமாக இருந்தார் என்பது தெட்டத் தெளிவான உண்மை.

இலங்கை அரசுக்குச் சார்பாக ஐ.நா. செயலாளர் செயற்படுகிறாரோ என்று கூட தமிழ்மக்கள் நினைத்தனர். அந்த நினைப்பு இன்றுவரை நியாயமானதாகவே கருதப்படுகிறது.

இஃது பான் கீ மூனுக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புவதில் தவறில்லை.

வன்னியுத்தம் முடிந்து தமிழ்மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைபட்டிருந்த போது ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் உலங்கு வானூர்தி மூலம் முள்ளிவாய்க்கால் பகுதியைப் பார்வையிட்டார்.

ஏதோ! இயற்கையின் சீற்றம் காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தைப் பார்ப்பது போலதான் அவருடைய மனநிலை இருந்தது.

முள்ளிவாய்க்காலைப் பார்த்து ஒரு நாட்டிற்குள் இப்படியொரு அழிவா? இப்படியொரு யுத்தமா? என்று கண்ணீர் விட வேண்டிய பான் கீ மூன் இலங்கை அரசுக்குச் சார்பாக நடந்து தமிழ் மக்களுக்குத் தீராத ஆத்திரத்தையும் கவலையையும் ஏற்படுத்தினார்.



பின்னாளில் தமிழ்மக்களைக் காப்பாற்ற ஐ.நா. சபை தவறிவிட்டது என்ற உண்மையை அவர் ஏற்றுக் கொள்வதாக அறிக்கை விட்டார்.

இந்த அறிக்கை வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்த தமிழ் மக்களையோ பாலகன் பாலச்சந்திரனையோ உயிர்ப்பிக்காது என்பது பான் கீ மூனுக்கு நன்கு தெரியும். இருந்தும் ஒரு காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களை பான் கீ மூன் வஞ்சித்தார் என்றோ அல்லது இலங்கை அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற மறுத்தார் என்றோ குற்றச்சாட்டுக்கள் எழலாம்.

அவ்வாறு குற்றச் சாட்டு எழும்போது அதில் இருந்து தப்பித்துக் கொள்ளும் முன்னாயத்த நடவடிக்கையாகவே பான் கீ மூனின் அந்த அறிக்கை இருந்துள்ளது என்று நினைப்பதில் தவறில்லை.

எதுவாயினும் பான் கீ மூனின் செயலாளர் பதவி இருப்புக்கு வருகின்ற கட்டத் தில் அவர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டதுடன் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்துள்ளார். அவரின் யாழ்ப்பாண விஜயம் குற்றவு ணர்வுக்குப் பரிகாரம் காண்பதற்கானதாகக் கூட இருக்கலாம்.

ஏனெனில் இப்போது இலங்கையில் மகிந்தவின் ஆட்சி முற்றுப்பெற்றுள்ளது. ஆகையால் புதிய அரசுக்கு சில அழுத்தங்களைக் கொடுத்து தமிழ்மக்களின் விடயத்தில் தன்னால் செய்யக்கூடிய நன்மைகளைச் செய்யலாம் என்ற அடிப்படையில் அவரின் யாழ்ப்பாண விஜயம் அமைந்தது என்று கருதப்பட்டால் அவரின் வருகையால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏற்பட வாய்ப்புண்டு.

இருந்தும் பான் கீ மூனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்திப்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருப்தியில்லை என்பதே உண்மையையும் இங்கு ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

தமிழ்த் தலைவர்கள் என்று கூறப்படுபவர்களை பாதிக்கப்பட்ட மக்கள் எப்படி அர்ச்சிக்கின்றனர் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஐ.நா. செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வாறு வரவேற்புக் கொடுத்தனர் என்பதை சம்பவ இடத்தில் நின்றவர்கள் நன்கு அறிவர்.

ஆக, பான் கீ மூனின் யாழ்ப்பாண விஜயம் என்பது கூட்டமைப்பின் தலைவர்களுடனான சந்திப்போடு மட்டும் நின்று போகுமாக இருந்தால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராகவே பான் கீ மூனை தமிழ் மக்கள் பார்ப்பார்கள்.

இல்லை தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்கள், மீள் குடியேற்றங்கள், அரசியல் கைதிகளின் விடுதலைகள், காணாமற்போனவர்கள் தொடர்புபட்ட சம்பவங்கள் தொடர்பில் பான் கீ மூன் இலங்கை அரசுக்கு கடுமையான அழுத்தத்தைக் கொடுத்து மேற்குறித்த விடயங்களுக்குத் தீர்வு கிடைக்க வழி செய்வாராயின்,

ஐ.நா. செயலாளர் என்ற பதவியை பான் கீ மூன் பாதுகாத்தார் என்றுரைக்க முடியும்.

மேற்குறித்த இரண்டில் எது சரி என்பதை காலத்தின் அசைவே விடையாகத் தரும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர ஆலடி மாநாட்டிற்கு அனைவரும் வருகை தந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறி வித்ததும் மாநாட்டில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மாநாட்டில் அனைவரும் அமரும் நேரம் விதானையார் விசுவலிங்க மும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**கங்காணி:** விதானையாருக்கு ஆயுள் நூறு.

**விதானையார்:** ஏன்? கிடந்து அழுந்தவோ.

**கங்காணி:** இல்லை விதானையார் நான் நினைக்க நீங்கள் வாறியள். ஒருதரைப் பற்றி நினைக்க, கதைக்க அந்த நேரத்தில அவர் அந்த இடத்திற்கு வந்தாரென்றால் அவர் நூறுவயது மட்டும் இருப்பார் என்று சொல்லுற ஒரு சம்பிரதாயம் எங்களிட்ட இருக்குத்தானே. அதுதான் சொன்னனான்.

**மூப்பர்:** அது சரி விதானையார் இண்டைக்கு ஏன் பிந்திப் போனியள்.

**விதானையார்:** என்ர மூத்த மகன் கொழும்பால வந்தவன். நல்லூர்த் திருவிழா முடிச்சு கொழும்புக்குத் திரும்புகிறான். தன்ர வாகனத்தில வந்தவன் போற போது நூறு ரூபாய்த்தாளில குறைந்தது இரண்டாயிரம் ரூபா எண்டாலும் வேணுழ் எண்டனான்.

நானும் இரண்டாயிரம் ரூபாவை நுாறு ரூபா தாளில மாத்திக்கொள்ள அலைஞ்சு போனன். அதுதான் இங்க வர லேட்டாப் போச்சுது.

**சாத்திரியார்:** ஏனாம் நூறு ரூபாய்த்தாளில இரண்டாயிரம் ரூபா தேவை.

**விதானையார்:** அதையேன் கேட்கிறியள் சாத்திரியார். நீங்கள் பத்து வருடமா கனடாவில இருந்து போட்டு வந்தனீங்கள். அதால உங்களுக்கு ஒண்டும் தெரியாது.

இப்ப வாகனத்தில கொழும்புக்குப் போறமெண்டால் ஏ-9 வீதியில மரங்கள் மற்றும் ஏற்ற இறக்கங்கள் இதுகளுக்குள்ள சிலர் மறைந்து நிற்பினம்.

வேகம் கூடிவிட்டது, மஞ்சள் கோட்டில வாகனத்தை முந்தினது எண்டு ஏதோவொரு குற்றச்சாட்டை முன்வைப்பினம். அப்படியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஏனென்டு தெரியும்தானே!

அதுதான் மறைந்து நிற்கிற அவையளுக்கு தட்சணை கொடுக்கவேணுமாம். இல்லை எண்டால் அவையள் எழுதி விட தபாற்கந்தோரில போய் காசு கட்டி பிறகு பொலிஸ் ரேசனுக்கு அலைஞ்சு லைசென்சை எடுக்கிறதில போது மொண்டு போயிடும்.

அதால தபாற்கந்தோரில கட்டுற காசை அவையளுக்குத் தட்சணையாகக் கொடுத்து விட்டால் சுகம்தானே! அதுதான் என்ர மகன் இரண்டாயிரம் ரூபாவை நூறு ரூபாய்த்தாளாக மாற்றிக் கொண்டு போறான்.

**பண்டிதர்:** இதென்ன அநியாயம். போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டியவியள் மரங்களுக்குள்ள மறைந்து நிண்டு தட்சணை வேண்டுவது எவ்வளவு குற்றம் தெரியுமோ?

**சாத்திரியார்:** ஏன்? பண்டிதர் ஐயா, இலஞ்சம், ஊழல் இவற்றைப் பிடிக்கிறவியள் ஒருக்கா ஏ-9 றோட்டில வந்தால் மறைந்திருப்பதன் மாயத்தையும் மெய்யுமாகக் கண்டறியலாமல்லோ?

**விதானையார்:** இதெங்க நடக்கிற காரியமோ. குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டியவர்களே குற்றம் இழைத்தால் குற்றங்கள் பெருகுமல்லாது குறையாது.

**மூப்பர்:** விதானையார் சரியாய் சொன்னியள். வடமராட்சிப் பகுதியில போதைப்பொருள் கடத்தல் அடிக்கடி நடக்குது. இதன் பின்னணியில் குற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் இருக்கினம் எண்டல்லோ சனங்கள் கதைக்கினம். அப்ப பார்த்தியளோ நிலைமையை.

**வாத்தியார்:** அது சரி கங்காணியார், இண்டைக்கு ஒரு மாதிரியா இருக்கிறியள். உடல் நலக்குறை வேதுமோ

**கங்காணி:** ஓம் வாத்தியார். இப்ப யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் சாப்பாட்டுக்கடைகளிலதானே போசனம் நடக்குது. வீடுகளில சமைக்கிறதைவிட கடைகளில் சாப்பாடுகளை எடுப்பது சுகம் எண்டு நாங்கள் நினைக்கிறம்.

அண்டைக்கு கைதடிப் பக்கம் போனனான். ஒரு சாப்பாட்டுக் கடையில காலைச்சாப்பாடு சாப்பிடலாம் எண்டு போனனான். அங்கு இடியப்பம் முடிஞ்சு போய்ச்சுதாம்.

நூடில்ஸ், மசாலா, கோதுமைமா தோசை, கோதுமைமா றொட்டி, கொத்து றொட்டி இதுகள் தான் இருக்குது. என்ன செய்யிறது. உடல் ஆரோக்கியத்திற்கு ஆகாது எண்ட சாப்பாடுகளைத் தான் எங்கட சாப்பாட்டுக்கடைக்காரர் விற்பனை செய்யினம்.

**பண்டிதர்:** கங்காணியார் சொல்லுறதில நியாயம் இருக்கத்தான் செய்யுது. யாழ்ப்பாணத்தில இருக்கிற சாப்பாட்டுக்கடைகளில மதியம் குத்தரிசிச்சோறு சாத்திரப்படிக்குப் போடுவினம். மிச்சம் முழுவதும் சம்பா அரிசிதான். அரைப்பதம் சோறு, அரைப்பதம் அரிசி. இதுகளாலதான் உங்கட சனங்கள் சலரோகம், இதய வியாதி, இப்படியே கஷ்டப்படுகுதுகள்.



## "எழுக தமிழ்" மாபெரும் பேரணி செப்டெம்பர் 24 ஆம் திகதி நடக்கும்

**வாத்தியார்:** இதுகளைப் பார்க்கிறதுக்கு எங்களிட்ட ஆட்கள் இல்லை. அதால எந்தச் சாப்பாடுகளை மக்கள் தவிர்க்கவேணுமோ அந்தச் சாப்பாடுகள்தான் கடைகளில விற்பனையாகுது.

இதுவிடயத்தில உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேணும். இல்லையெண்டால் எங்கட சனங்கள் நோய்க்கு ஆளாகுவதை எவராலும் தடுக்க முடியாது.

**விதானையார்:** தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை எழுக தமிழ் என்ற கோஷத்துடன் மாபெரும் பேரணி ஒன்று நடக்க இருக்குது. அதுக்கு நாங்கள் கட்டாயம் போக வேணும்.

**வாத்தியார்:** விடுதலைப்போராட்டம் தோற்ற கையோட ஒரு மக்கள் இயக்கத்தை நாங்கள் ஆரம்பித்திருக்க வேணும். அப்படி யொரு அமைப்பு உருவாகியிருந்தால், எங்கட இனம் இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்காது.

**பண்டிதர்:** இப்பவும் தமிழ்மக்கள் பேரவை எண்ட மக்கள் இயக்கம் உருவானதாலதான் ஓரளவுக்கெண்டாலும் எங்கட அரசியல் தலைமைகள் நிதானமாக நடக்கத் தலைப்பட்டிருக்கினம். இல்லையெண்டால் எங்கட இனத்தைக் காவிலைக்கு வித்துப் போடுவினம்.

**கங்காணி:** தமிழ் மக்கள் பேரவை பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி நடத்துகிற மாபெரும் பேரணிக்கு வடமாகாணம் முழுவதும் அணி திரளவேணும். நாங்கள் ஆருக்கும் எதிரானவர்கள் அல்லர். எங்களால இனியொரு ஆயுதப் போராட்டத்தை நடத்தவும் முடியாது. ஆனால் எங்கட உரிமைகளை தாறது இந்த அரசாங்கத்தின்ர தலையாய கடமை.

இதைவிடுத்து தமிழர் தாயகத்தில பௌத்த விகாரைகளை அமைப்பது, சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டு ஆரம்பிப்பது இதெல்லாம் எந்தவகையில நியாயமாகும்.


அதனாலதான் சொல்லுறன் தமிழ்மக்கள் பேரவை நடத்துகிற மாபெரும் பேரணியில வடக்கு மாகாணம் முழுவதும் அணிதிரள வேணும். எங்கட பிரச்சினையில சர்வதேசம் தலையிடவேணும். எங்கட மண்ணில நாங்கள் நிம்மதியா வாழவேணும். எங்கட இளம் சந்ததியினர் கல்வி, வேலைவாய்ப்பு, விழுமியம், ஒழுக்கம் இவற்றில உயர்ந்த நிலையில இருக்க வேணும்.

இதுதான் எங்கட ஆசை. ஆனால் இண்டைக்கு திட்டமிட்ட போதைப் பொருள் விற்பனை நடக்குது. இதால எங்கட இளம் சந்ததிக்கு எவ்வளவு ஆபத்துத் தெரியுமோ. ஆகையால எங்கட மனநிலையை அகிம்சை வழியில நாங்கள் வெளிப் படுத்த வேணும். ஆகவே நாங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து பேரணியில கலந்து கொள்ளுவம்.


இப்படி கங்காணியார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீண்டும் ஒரு காதல் கதை




மலையாள சுப்பர் ஹிட்டான "தட்டத்தின் மறையத்து" படத்தின் ரீமேக்கே "மீண்டும் ஒரு காதல் கதை".

மொபைல் போனுக்குகூட அனுமதி இல்லாத, பாரம்பர்ய முஸ்லிம் குடும்பப் பெண் ஆயிஷா. அவளைப் பார்த்ததும் வினோத்துக்கு காதல். பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு வினோத் தன் காதலைச் சொல்ல, ஆயிஷா தரப்பில் நோ சிக்னல்.

பொலிஸின் பேராதரவுடன் வினோத் மீண்டும் முயற்சிக்க, சம்மதம் சொல்கிறாள் ஆயிஷா. அவள் வீட்டில் என்ன சொன்னார்கள் என்பது, தமிழ் சினிமா கோடி முறை பார்த்த க்ளைமாக்ஸ்.

பென்சில் ஓவியங்கள் அசைந்தாடும் அந்த அழகிய டைட்டில் கார்டிலேயே ஈர்க்கிறார் இயககுநர் மித்ரன் ஜவஹர். ஆனால், அதன் பிறகு எந்த மாற்றமும் இல்லாத ரீமேக் வேலைக்குத் திரும்பிவிடுகிறார். முதல் படம் என்னும்போது வால்டர் பிலிப்ஸின் வரவு, நல்வரவு. அவ்வப்போது முகத்தில் எட்டிப்பார்க்கும் ஓவர் ஆக்ட்டிங் தவிர்த்து எல்லாம் கச்சிதம். கதைகளை சரியாகத் தேர்வு செய்தால், இனனொரு சொக்லேட் பாய் ரெடி. 2012ஆம் ஆண்டில் வந்த "தட்டத்தின் மறையத்து" படத்தின் நாயகி இஷா தல்வாரே தான் இதிலும். ஆனால், 2016ஆம் ஆண்டு இஷா முகத்தில் இருந்த அந்த இளமை மிஸ்ஸிங்.

நாசரின் பேக்டரி, படத்தின் முக்கிய விடயம். அதை கடைசி வரை கண்ணில் காட்டாமல் வசனத்திலேயே பேசிவிடுகிறார்கள். மனோஜ் கே.ஜெயன் & கோ, உண்மையில் பொலிஸ் தானா?

ஜி.வி.பிரகாஷ் குமாரின் இசையில் "மை போட்டு மை போட்டு..." மட்டுமே ஹிட் ரகம். ஒரு மியூஸிக்கல் படத்துக்கு இன்னும் கொஞ்சம் உழைத்திருக்கலாம். படத்தில் காதல் வழிந்தோடுவது விஷ்ணு சர்மாவின் ஒளிப்பதிவில்தான். அவ்வளவு அழகு!

திகட்டத் திகட்ட காதல், ரம்மியமான இசை,பொசிட்டிவான முடிவு... என எந்தக் காலத்திலும் எனர்ஜி தரும் டெம்ப்ளேட். ஆனால், அலைகள் ஓய்வதில்லையில் தொடங்கி காதலுக்கு மரியாதை"யைத் தாண்டி பல கிளாசிக்குகளில் இருந்த நேர்த்தி இதில் இல்லை.

மாணவ கம்யூனிஸ்ட் தொடங்கி பல விடயங்கள் மலையாளத்துக்கே உரிய கலாசாரம். ஒரு மொழியில் ஹிட் அடித்த கதையை வேறு மொழிக்கு மாற்றும்போது, இதுபோன்ற கலாசார, பிராந்திய விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். மீண்டும் ஒரு காதல் கதையில் முக்கியப் பிரச்சினை இதுதான்.

# கிடாரி

நந்தா, பீமா என தமிழ் சினிமாவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரும் அதே காட்ஃபாதர்- காட்சன் கான்செப்ட் தான். சண்டித்தனம் செய்யும் ஊர் பெரியவர் அவரின் காவலுக்கு கூடவே இருக்கும் சிஷ்யப்பிள்ளை. இந்த இருவருக்கும் தெருவுக்கு நான்கு எதிரிகள். அதற்கான காரணங்களும் விளைவுகளுமே கிடாரி.

சாத்தூரில் வேல.ராமமூர்த்தி பெரிய தலைக்கட்டு. ஆட்டுச்சந்தையில் ஆரம்பித்து இவர் ஆட்டுவிக்காத தொழிலே கிடையாது. கௌரவத்துக்கும், மரியாதைக்கும் ஆசைப்படும் இவரின் மகனுக்கு அந்த அளவுக்கு திறமை போதவில்லை. அந்த இடத்தில் இருக்கிறார் சசிகுமார். வேல.ராமமூர்த்தியை யாரோ கழுத்தில் சதக் சதக் செய்துவிட, யாராக இருக்கும் என்ற வாய்ஸ் ஓவரோடு கதை தொடங்குகிறது. வில்லன்கள் இரண்டு இரண்டு பேராக அறிமுகமாக, வேல.ராமமூர்த்தியின் வாழ்க்கைப்பக்கங்களை புரட்டுகிறது படம். பக்கத்துக்கு பக்கம் துரோகமும், இரத்தமும் தான். அவரின் கதைக்கு முற்றுப்புள்ளி யார் வைத்தார்கள் என்பது தான் சஸ்பென்ஸ்.

திரை முழுக்க சிவப்பு நிறம். அதில்தான் டைட்டில் கார்டே. அது முடிந்ததும் ஃப்ரென்ச் படங்களில் வரும் முறுகலான ஆங்கிளில் ஒரு பழைய வீட்டின் அறை. திடீரென ஃப்ரேமுக்குள் ஓடுகிறது இரத்தம். கொழகொழவென அப்போதுதான் பீறிட்டு வருகிறது. அந்த இரத்தத்தின் மிச்சத்தைப் பூசிக்கொண்டு ஒரு கை. உதவி வேண்டி மேலெழுகிறது. வாசிக்கும்போதே துணுக்குறச் செய்யும் இவையாவும் திரையில் விரிவதுடனே படம் தொடங்குகிறது. வன்முறைதான் இவர்களின் வாழ்வியல் என சாக்கு சொன்னாலும், இது ரொம்பவே அதிகம்தான்.

அறிமுக இயக்குநர் பிரசாத் முருகேசன் அட்டகாசமான வரவு. உலக சினிமாக்களின் இலக்கணங்களை விரல் நுனியில் வைத்திருக்கிறார். பிற ஹாலிவுட் ஆர்வலர்களிடம் இருந்து வித்தியாசப்படுத்துகிறார் தன் மேக்கிங்கில். மிரட்டியிருக்கிறார். இவரின் அடுத்த படம் தமிழ் சினிமாவின் முக்கிய படமாக



இருக்கக்கூடும் என்றே தோன்றுகிறது.

கிடாரி சசிகுமாருக்கு, பழக்கப்பட்ட வேலைதான். ஆனால், அது திரையில் வேறு மாதிரியாக வந்திருப்பதுதான் புதுசு. வன்முறை, குரோதம். இவைதான் விற்கும் என்றாலும், அதில் ஒரு புது மாதிரியான படத்தை தயாரித்து நடித்ததற்கு பாராட்டியே ஆக வேண்டும்.

Casting.... படத்தை தூக்கி நிறுத்துவது இந்த விடயம் தான். மெயின் கொம்பையா பாண்டியனில் தொடங்கி, அந்த புத்தி சுவாதீனமற்ற பெரியவர் வரை ஒவ்வொரு கரக்டருக்கும் பக்கா ஃபிட்.

எஸ்.ஆர்.கதிரின் கேமராவுக்கு புது அரிதாரம். மூவ்மெண்டிலே ஒரு கதாப்பாத்திரத்தை தாண்டிய பின் இன்னொரு முகத்தை காட்டுவது, டூ ஷாட், த்ரீ ஷாட்களை சூழ்நிலைக்கு ஏற்ப கையாள்வது என உலகத்தர உழைப்பைக் கொடுத்திருக்கிறார்.

இயக்குநரின் கற்பனைக்கும், கேமராமேனின் உழைப்புக்கும் தன்னால் எந்த பங்கமும் வந்துவிடாமல் பார்த்து பார்த்து இசையை கோர்த்திருக்கிறார் தர்புகா சிவா. "கிடாரியே உன் போல" எல்லா எஃப்.எம்களில் ஒலித்துக் கொண்டிருக்கும் பாடல். அது மாதிரி 10 மடங்கு சிறந்த பின்னணியை கொடுத்திருக்கிறார். கிடாரி, உங்களுக்கு ஒரு ரெட் கார்பெட் பாஸ். உங்களிடம் நிறைய எதிர்பார்க்கும் தமிழ் சினிமா. இப்படி டெக்னிக்கலாக மிரட்டும் கிடாரி அலுப்பு தட்டுவது திரைக்கதையில்தான். கோர்வையாக ஒரு விடயத்தை சொல்லாமல், 20 நிமிடத்திற்கு ஒரு புது அத்தியாயம் திறப்பது அலுப்பு. பின்பாதி கதையிலும் வில்லன்களை அறிமுகப்படுத்திக் கொண்டே இருந்தால் எப்படி பாஸ்? ரசிகன் என்ன 64 ஜிபி மெமரி கார்டா வைத்திருக்கிறான்?

காதல் காட்சிகள் அழகு. ஆனால், ஒரு பந்தில் நான்கு ரன் அடிக்க வேண்டியவனிடம் ஆட்டோ கிராப் கேட்டு கிரவுண்டுககுள் ரசிகன் ஓடி வரலாமா? கொஞ்சம் தைரியமாக காதல் காட்சிகளுக்கு நறுக் போட்டிருக்கலாம். அதே சமயம்... அதையெல்லாம் தாண்டி முகத்தை சுழித்து இதயத்தில் சுளுக்கு விழ வைக்கிறார் நிகிலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








பான் கீ மூன் யாழ் வருகை பற்றி?

உண்மையான அன்பை புரிகிறார்கள் இல்லையே?

ரெசிலிங் உண்மையா?

**ராதிகா — தாவடி**

**உங்கள் நண்பரிடம் உங்களிடம் பிடித்தது என்ன?**

இராமுவும் சேகரும் நண்பர்கள். இராமு சேகர் வீட்டிற்கு அடிக்கடி செல்வான். ஒரு முறை சேகரின் தங்கை இராமுவை காதலிப்பதாக கூறினாள்.

உடனே சேகர் இராமுவின் தங்கைக்கு கன்னத்தில் ஓங்கி அறை கொடுத்தான். உனக்கு சேகர் அண்ணன் என்றால் இந்த இராமுவும் அண்ணன்தான்.

இனிமேல் இப்படியெல்லாம் சிந்திக்காதே என அறிவுரை கூறி அனுப்பினான். இந்த இராமு போல் நண்பனை யாருக்குத்தான் பிடிக்காமல் போய்விடும்.

**நிறஞ்சன் — கொக்குவில்**

**கல்யாணம் ஏன் பண்ணுறாங்கள்?**

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்

**வாசன் — அல்வாய்**

**உண்மையான அழகு எது?**

அழகை வரையறுத்துவிட முடியாது. காக்கை தன்குஞ்சை கொஞ்சுகிறது. கழுதையும் தன் குட்டியை கொஞ்சுகிறது. அழகு முகம் சார்ந்ததல்ல, அகம் சார்ந்ததே.

**தீபா — கிளிநொச்சி**

**உண்மையான அன்பை புரிகிறார்கள் இல்லையே?**

உன் அன்பைப் புரியாதவர்களிடத்தே எதற்கு நீ அன்பை புரிய வைக்க நினைக்கிறாய். மதியாதார் தலைவாசல் மிதியாதே என்பது இதற்கும் பொருந்தும். விட்டுவிடு உன்னைத்தேடி ஒருநாள் வருவர். அப்போது வைத்துக்கொள் கச்சேரியை.

**பிரதீப் — வட்டக்கச்சி**

**படிக்கும் போது காதல் செய்வது தப்பா?**

நான் தப்பு என்று சொன்னால் மட்டும் நீ விட்டு விடவா போகிறாய். கெட்டுக் குட்டிச்சுவராய் போவேன் என்று அடம்பிடித்தால் அதற்கு வியாசர் என்ன பண்ண?

**தர்சன் — நாவற்காடு**

**லவ் லெற்றர் போஸ்ரரில் அனுப்பலாமா?**

பதில் போஸ்மனுக்குத்தான் கொடுக்கப்படும் பரவாயில்லையா?

**கோபு — திடலூர்**

**நட்பு காதலாய் மாறுவது தவறா?**

கள்ளக் காதலாய் மாறாமல் இருந்தால் சரி.

**சர்மி — கிளிநொச்சி**

**ஒருவரை காதலிக்கும் பெண் தனது உறவுக்காரர், அண்ணா, தம்பி, மச்சான் ஆகியோருடன் கதைப்பது தப்பா?**

அந்த இடையில் வரும் உறவுக்காக இந்த தொடரும் உறவுகளை நிராகரிப்பது எந்த வகையில் நியாயம்.

**விசாக்கா**

**கடவுள் இருக்கிறார் என நம்புகிறீர்களா?**

இல்லை என்று சொல்லவில்லை இருந்தால் நன்றாக இருக்கும் என்றுதான் சொல்கிறேன். வன்னியில் எம்மினம் வதைபடும் போது அவன் ஏன் வரவில்லை என்பதுதான் எனக்குள்ளான மிகப்பெரிய கேள்வி.

**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**
**குறுந்தகவல்**
**(SMS)**
**021 567 1532**

**சிவா — திருநெல்வேலி**

**உங்கள் வாழ்வின் சிறந்த அனுபவம்?**

நான் கொஞ்சம் வளர்ந்த போது என் அப்பாவின் வேட்டியையும் சட்டையையும் விளையாட்டாக போட்டதுண்டு. அப்போது அதன் பொறுப்பையும் தூய்மையையும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நான் தந்தையான போது அதை உணர்ந்து கொண்டேன். அந்த அனுபவத்தை ஒவ்வொரு தந்தையாலும் தான் உணர்ந்து கொள்ள முடியும்.

**லக்ஷன் — யாழ்ப்பாணம்**

**ரெசிலிங் உண்மையா?**

டூப் காட்டற சினிமாவில் கூட மூஞ்சயில ஒரு தடவை குத்தினாலே இரத்தம் வருது. ஆனா இந்த கறுமாந்திரம் பிடிச்ச விளையாட்டில மூஞ்சயில மாங்குமாங்கென்று குத்துறாங்க ஆனா இரத்தம்தான் வரமாட்டேங்குது.

**சௌமியா — யாழ்ப்பாணம்**

**அருமையான பஞ்ச் ஒன்று சொல்லுங்க?**

அரசியல் என்கிறது சாக்கடை மாதிரி. அந்த சாக்கடைக்குள்ள தான் கட்டியிருக்கிற வேட்டியில சேறு படாமல் வலைவீசி அதில மீன் பிடிச்சு நல்ல விலைக்கு எவன் விக்கிறானோ அவன்தான் உண்மையான அரசியல்வாதி.

**(தொப்பி அளவானவர்கள் போட்டுக் கொள்ளலாம்)**

**அருள் — குளப்பிட்டி**

**குடும்பங்கள் இப்போது எப்படி இருக்கிறது?**

முதியோர் இல்லம் போயிருந்தேன். அப்போது ஒரு முதியவர் தளதளத்த குரலில் கூறிய கதை "அன்று என் மகன் என்னிடம் கேட்டான் அப்பா அப்பா உங்க கல்யாணப் படத்தில் நான் இல்லையே? என. இப்போது அவனிடம் நான் அதே கேள்வியைக் கேட்க நினைக்கிறேன்."

**சயன் — நல்லூர்**

**இப்போதைய அரசியல் எப்படிப்பட்டது?**

அன்புக்கினிய என்தருமை மக்களே! இலவசங்களை நம்பாதீங்கள். உங்கள் ஆடம்பரத் தேவைகள் இலவசமாகத் தரப்படுகின்றது என்றால் உங்களின் அடிப்படைத்தேவைகளைப் பறித்துக்கொள்ளப் போகிறார்கள் என்று அர்த்தம். ஆடம்பரமா? அடிப்படையா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள், செயற்படுங்கள்.

**ஸ்கவுட் மாரியப்பா — வட்டுக்கோட்டை**

**தமிழினிக்கு புற்றுநோய் ஏற்பட்டு மரணித்ததும் அந்த மாதிரி இருக்குமோ?**

குற்றங்கள் நிரூபிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இப்போதைக்கு இதைவிட எதையும் கூற முடியாது.

**கமல் — வல்வெட்டித்துறை**

**பான் கீ மூன் யாழ். வருகை பற்றி?**

கொத்துக் கொத்தாய் குண்டு போட்டு நாம் குருதியில் கிடந்தவேளை எம்மை வந்து பார்த்தவர்கள் எல்லாம் எம்மைப் பார்த்து பரிதாபப்பட்டனரே தவிர எம்மை இந்த நிலைக்காளாக்கியவரை வார்த்தையாலேனும் கண்டிக்க தவறிவிட்டார்கள். இனி கோடி கோடியாய்க் கொட்டி என்ன பயன். எல்லாம் முடிந்த செயல். இதைவிட வேறு எதுவும் இல்லை.



**மந்திரி:மன்னா... உயிர் பயத்தில் எதையுமே கவனிக்காமல் ரொம்ப தூரம் ஓடி உசைன்போல்ட முந்துற நிலைக்கு வந்துட்டம்!**
**மன்னன்: ம்ம்ம் வரலாறு ரொம்ப முக்கியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## மாற்றிடுவோம்...!

நாளுக்கு நாள்
அதிகரித்தே செல்கிறது
போதைப்பொருள் அரக்கனின்
போக்கிரித்தனம்
போகுமிடமெங்கும்
பொல்லாத போதையின்
ஆக்கிரமிப்பு
அது எங்கோ என்று
இருந்த எமக்கு
இப்போது
இங்கும்
பரிணாமம்
கல்வியில் மூழ்கி
முதல்நிலை பெற்ற தேசம்
இப்போது
போதையில் மூழ்கி
முன்னிலை வகிக்கிறது
மாறும் இளைய சமுதாயம்
எப்போது இனி
இவற்றை மாற்றுவது?
மாறிடுவோம்!
மாற்றிடுவோம்!
நல்லதொரு
நாட்டை உருவாக்கிடுவோம்

**வல்வைக்கமல்**

## பெண்ணே?

பெண்ணே
கற்கும் வயதில் காதல் வரும்
கடந்து செல்
இலட்சியமே வேதமென்று
அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்கு என்றால்
இவ்வுலகம் இருளில்
மூழ்கிவிடும்
அன்னை திரேசாவாய் இருந்திடு
உன் அன்பு மழையில்
ஏழைகளின் வாழ்க்கையில்
வசந்தங்கள் வீசட்டும்
பெண்மையின் சாதனையை
உலகம் புகழ்ந்திட
பெருமையோடு வாழ்ந்திடு
பெண்ணே

**த.சர்மினி**
**புதிய கற்பகபுரம்**

## நெருப்பு நிலவு

அனிச்சம் பூவிலும்
மென்மையானவள்
நீ உன்னை
பதராக்கி...!
காலிடை போட்டுக்
கசக்கினரோ...
நீ பாரதியாய்
பண்படுத்தப்பட்டவள்...!
நெருப்புச் சுமக்கும்
நிலவு...
விழி திறந்துபார்...!
காமுகப் பேய்களை
உலுக்கியெடுத்து
தீயிட்டுப் பொசுக்கடி
கண்ணகியின் கடைக்குட்டி நீ

**சுகி தமிழ்நிலா**

## தீர்ப்பு நிச்சயம்

போர் தந்த வடுக்கள்
எம் மண்ணை புதைகுழி ஆக்கின
பார் வென்ற மன்னர்
தம் மேனியில் பிசிறல் சுமந்தனர்

கார்வண்டுகூட
சுதந்திரமாய் சுற்றிய காலமொருகாலம்
யார் வந்து தடுத்தார்
எம் தாயகம் சுடுகாடாய் மாறியது

விருட்சங்கள் வீழ்ந்தாலும்
வேர் கொண்டமண் மழைகண்டால்
மறுபடி முளைத்தெழும்
சிதைக்கப்பட்டவை எம் சந்ததியும்தான்

சீர்செய்ய யாருமிலா
தமிழன் பாழ்பட்ட இனமானான்
சீராளன் யார் வருவான்
பாறை பிளந்து பயன்தரும் மண்ணாக்க

சண்டாளரே எமக்கு
சரித்திரமொன்று உண்டென்பதை
உம்மால் அழித்திட முடியா
அது எந்நாளும் நடைபெறா நப்பாசை

ஒன்றுமட்டும் உண்மையது
வந்து போபவர் உமை மன்னிப்பார்
இறைவனுளான்
உமை இறுதிவரை தண்டிக்காமல் விடான்

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 317



## பெண்மை

ஊமை மொழி கொண்டு
உணர்வுகள் கருக்கப்பட்டு
ஐந்து விரலுக்குள்
கயவர்களின் காமத்தில்
சிறகிழந்து சின்னாபின்னமாகாமல்
சிதைக்கப்படும் ஓவிய
தூரிகையோ பெண்ணே– நீ
ஆண்மையின் மூர்க்கத்தை
அகிலம் புரட்டிப் பார்க்க
உன் நம்பிக்கை காணும்
அண்டம் புரட்டி ஆள
புறப்படு புதிய பிறப்பெடுத்து
இப்பிறப்பின் மனிதம் உணர்த்த

**யு.சோபியா**
**விசுவமடு**

## தமிழன் வாழ்வு

கையிலே பிடியுண்டு
கலங்குகிறாள் தாயவள்
கவலையைப் போக்கி
காத்திட யாரிங்கே?
அது வறுமையின் பிடியா?
அல்லது வாழ்க்கையின் சுமையா?
எம் ஈழத்தாயை நசுக்கும்
இனவாதத்தின் கையா?
வளங்கள் எல்லாம் இழந்து
தமிழன் வாழ்வு நசிந்தது
என்று எமக்கு விளக்கும்
விபரீத கையா அது
தளரும் கைப்பிடி ஒருநாள்
தாய் நீயும் நலமாவாய் அந்நாள்

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி**

## மாறுமா?

பாவமிவள் பருவமடையாத
பதின்ம வயதிலே பாதகரால்
பாலியல் கொடுமைக்கு
ஆளாகுகின்றாளே!
என்னே! மனிதர் தாயும் தாரமும்
பெண் என்பதை மறந்து விட்டாயோ?

**தான்தோன்றி**
**பண்டத்தரிப்பு**

## கொடுமை

ஒற்றைக் கைக்குள் நசுக்கி
எம்மை ஓரங்கட்டி விட்டு
நாடி நரம்புகளை
இறுக்கிப் பிடித்து
நையாண்டி செய்யும்
உத்தம உலகை
என்னவென்று கூறுவது

**பா.கலாதேவி**
**சண்டிலிப்பாய் மேற்கு**

## ஏனிந்த நிலை?

அதிகார வர்க்கத்தின்
இரும்புக்கரத்தினுள்ளே
சிக்கித் தவிக்கின்றாள்
தமிழன்னை– அவளின்
தவப்புதல்வர்களோ
பதவி மோகத்தால்
தங்களுக்குள் அடிபடும்
நிலை கண்டீரோ?
இங்கே யார்? யாரை?
காப்பாற்றுவது? ஓ இறைவா!
ஏனிந்த நிலை தமிழ்த்தாய்க்கு

**யோ.காண்டீபன்**
**மானிப்பாய்**

## பெண்ணடிமை

தமிழர் பாரம்பரிய பண்பாடு
ஒழுக்க விழுமியங்களை
கண்போல் பழுதின்றிப்
பாதுகாத்தனர் முன்னோர்
இன்று வன்புணர்வாளர்களின்
கோரப்பிடியில் சிக்குண்டு
சீரழிந்து போகின்றனர் பெண்கள்
ஆண் ஆதிக்கம் இன்று
பெண்களை அடிமையாக்கி
அடக்கி ஆளும் நிலையால்
பெண்ணின் பெருமை இன்று
மண்ணாகிப் போகிறதே

**துரை**
**தென்மட்டுவில்**

## அணைக்கப்படும் கல்விச்சுடர்

அவலத்தின் அகலமாய்
எம் நிலத்தின் வீதிகளில்
கஞ்சா சரைகளின் தரை இறக்கம்
அகப்பட்டவை போக அகப்படாதவை
வேலிக்குள் இருந்த பொட்டுக்கால்
நுழைந்து தடவித் திரிகின்றன
இளம் குருத்துக்களை
போதைச்சுவாலையில் பொசுக்கி
காமச்சாலையில் நகர மறுக்கும்
வன்புணர்வு வண்டியின்
அச்சாணிக்கு கொழுப்பாக்கி
எம் நிலத்தில் மீதமுள்ள
கல்விச் சுடரையும் அணைத்திடவே

**அராலியூர் சோ.சிவகுமாரன்**

## கடிவிலங்கை கன்னி நீயே உடைத்திடு

காவியங்கள் படைத்த
பெண்களுக்கு மத்தியில்
இங்கு கசக்கி எறியப்பட்ட
பெண்கள் எத்தனையோ
கற்சிலையைக்கூட காம எச்சையுடன்
பார்க்கும் காடையர்கள்
கற்புள்ள பெண்ணே உன்னை
கற்பூரமேற்றி வணங்குவரோ?
நாணயத்திற்கு நாணல் போல
வளைந்து கொடுக்கும் நீதி
நானிலமெங்கும் இதுவே நியதி
பெண்ணே நீயடைந்த பெருந்துன்பம்
பேராற்றில் விழுந்து ஓடிவிடும்
கன்னியவள் கட்டுண்ட கடிவிலங்கு
கணப்பொழுதில் இங்கு நொருங்கிவிடும்

**நி.சிந்துரன்**
**அளவெட்டி மேற்கு**

# மௌனத்தின் தேடல் –318



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.09.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலையில் எழுந்திருக்க முடியவில்லையா? அப்ப இதில் ஒன்றை வாங்கிடுங்களேன்

நம்மில் பலருக்கும் அலாரம் வைத்துவிட்டு, குறிப்பிட்ட நேரம் தாண்டியும் அசந்து தூங்கிவிடுகிற பழக்கம் உண்டு. இவர்களைப் போன்றவர்களுக்காகவே சில புதுவிதமான அலாரம்கள் சந்தைக்கு வந்திருக்கின்றன.

## நேரத்தை ஓடிப்பிடிங்க!




'கிளாக்கி". ஸ்நூஸ் பட்டனை மணிக்கணக்கான நேரத்துக்கு இஷ்டத்துக்குத் தட்டி சரியான நேரத்தில் எழ முடியவில்லை என நொந்து கொண்டவர்களுக்கானது இது. இந்தக் கடிகாரத்தில் ஒருமுறை ஸ்நூஸ் செய்யலாம். அடுத்த முறை எழுந்திருக்காவிட்டால் இதன் இருபுறங்களிலும் இருக்கும் சக்கரம் சுழல ஆரம்பித்து, அறையின் ஏதாவது ஒரு மூலையில் ஓடி ஒளிந்துகொள்ளும். கடிகாரத்தைக் கண்டுபிடித்து ஸ்நூஸ் பட்டனைத் தட்டும் வரையில் அலாரம் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். மேலிருந்து கீழே விழுந்தாலும் உடைந்துவிடாத வகையில் இந்தக் கடிகாரம் வடிவமைக்கப்பட்டு ள்ளது.

## குறி வெச்சு அடிங்க!




இந்த 'லேசர் கன்' வகை கடிகாரங்களைப்பயன்படுத்தினால் தூக்கத்திலிருந்து எழுவது மிக உறுதி. உறங்கிக் கொண்டிருக்கும்போது லைட் ஒன் செய்தாலே எழுந் துவிடுபவர்கள் பலர். இந்தக் கடிகாரத்தை வடிவமைத் தவர்கள் அதற்கும் ஒரு படி மேலே போயிருக்கிறார்கள். அதாவது குறிப்பிட்ட நேரத்தில் அலாரம் அடிக்கும்போது, லேசர் ஒளி யைப் பாய்ச்சும் துப்பாக்கியின் மூலம், இலக்கின் மையத்தில் சரியாகக் குறிவைத்து சுட வேண்டும். இல்லாவிடில் அலாரத்தின் ஒளி மொத்த ஊரையே கூட்டிவிடும். நான்லாம் பயங்கரமா தூங்குவேன் பாஸ். இதெல்லாம் வேலைக்கு ஆகாதுனு சொல்றவங்க, இதை மேலும் கடினமாக்க லேசர் துப்பாக்கியை வேறு இடத்தில் வைத்துவிடலாம். இதன் மூலம், அதைத் தேடி எடுப்பதில் தூக்கம் போவது நிச்சயம்.

## நேரம் விலைமதிப்பற்றது பாஸ்!



நம்நாட்டு நடைமுறைக்கு கொஞ்சமும் சரிப்பட்டு வராது என்றாலும் இந்தக் கடிகாரத்தின் அடிப்படை சுவாரஸ்யமானது. "நேரம் பொன் போன்றது" எனப் பொன்மொழி கேள்விப்பட்டிருப்போம். இந்த அலாரம் கடிகாரம் உணர்த்துவது அதைத்தான். உறங்குவதற்கு முன் இதில் பண நோட்டுகளை அடுக்கிவிட வேண்டும். அலாரம் அடிக்கும்போது குறிப்பிட்ட நேரத்தைத் தாண்டியும் எழாவிட்டால் இதில் வைக்கப்பட்ட பணமானது ஒவ்வொன்றாகக் கிழிக்கப் படும். பணம் கிழிக்கப்படும் ஓசை கேட்டால் யார்தான் நிம்மதி யாக உறங்க முடியும்? இதுதான் இந்த அலாரம் கடிகாரத்தின் விதி.

## இது 'வொர்க் அவுட்' ஆகும்!



உடம்பை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள நினைப்பவர்களுக்கான அலாரம் இது. காலையில் எழ நினைக்கும் நேரத்தை செட் செய்துவிட்டால், அலாரம் அடிக்கும். இதில் என்ன புதுமைனு கேட்கிறீர்களா? அங்கேதான் விடயமே இருக்கிறது. மற்ற கடிகாரங்களைப் போல இதில் எளிதில் ஸ்நூஸ் செய்துவிட்டு உறங்கிவிட முடியாது. டம்ஸ்புல் போன்றிருக்கும் இந்தக் கடிகாரத்தை, படுக்கையிலிருந்து எழுந்து 30 தடவை கைப்பயிற்சி செய்தால் மட்டுமே அலாரம் நிற்கும். காலை சரியான நேரத்துக்கு எழுந்த மாதிரியும் ஆச்சு, உடற்பயிற்சி செய்த மாதிரியும் ஆச்சு. கைப்பயிற்சி எண்ணிக்கையை நாமே தேர்வு செய்துகொள்ளலாம் என்பது கூடுதல் வசதி.

## அதிரடி விரும்பிகளுக்கு மட்டும்!



'பேவ்லாக்' அலாரம். கடிகாரத்தில் எழுப்பிவிட ஒலியெல்லாம் இல்லை. வாட்ச் போன்று கையில் கட்டிக் கொள்ளக்கூடிய இது மொபைல் அப்ளிகேஷன் மூலமாக இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அலாரத்தை செட் செய்துவிட்டு இதைக் கையில் கட்டிக்கொண்டால் போதும். சரியான நேரத்தில் நாம் எழுந்திருக்க கையில் அதிர்வை ஏற்படுத்தும். இது போதாது என்பவர்கள் Zap தேர்ந்தெடுத்தால், கையில் மிதமான எலக்ட்ரிக் ஷோக் அடிக்கும். அந்த அதிர்ச் சியானது நம்மை எப்பேர்பட்ட உறக்கத்தில் இருந்தும் எழுப்பிவிடும் எனக் கூறுகிறார்கள் இதை வடிவமைத்தவர்கள்.

# அது ஒரு அழகிய டி.வி.காலம்



டி.வி. பெட்டிக்கும் மனிதர்களுக்குமான தொப்புள்கொடி உறவு இருப்பது இன்னிக்கு நேத்து இல்லை. டி.வி-யைக் கண்டுபிடிச்ச கிரஹம் பெல் காலத்திலிருந்தே இருக்கு. டி.வி-யைப் பற்றி நினைச்சாலே கலர்கலராகவும், கறுப்பு வெள்ளையாகவும் நினைவுகள் கலந்துகட்டி நம் மூளைக்குள்ள கவுந்து படுத்துக்கும். அதையெல்லாம் தண்ணி தெளிச்சுத் தட்டி எழுப்புவோம் வாங்க மக்காள்.

❖ சின்னவயசில் தூர்தர்ஷன்ல வந்த 'வோஷிங் பவுடர் நிர்மா' விளம்பரத்தின் குட்டிப் பாடலை எப்போப் பார்த்தாலும் பாடிக்கொண்டே திரிந்து எல்லோரிடமும் கண்டமேனிக்கித் திட்டு வாங்கியிருப்போம்.

❖ 'ஒலியும் ஒளியும்' பார்க்கிறதுக்காக, இருக்கிற வேலைகளையெல்லாம் அரக்கப்பறக்க ஆறு மணிக்கே முடிச்சுட்டு டி.வி முன்னாடி துண்டை விரிச்சு மல்லாக்கப் படுத்திருப்போம். ஒவ்வொருத்தரா வந்து சேர்ந்து 50 பேர் குவிஞ்சு நம்மை வியர்வையில் அவிய வெச்சுருவாய்ங்க.

❖ பக்கத்து வீடு, அடுத்த வீடு, மூணாவது தெருவிலிருந்து நம் வீட்டுக்கு சாயங்காலத்தில் டி.வி. பார்க்க வர்றவிங்களுக்கெல்லாம் 50 பைசா டிக்கெட் போட்டு மொத்தமா வசூல் பண்ணி ஒரு பெரிய டி.வி. வாங்கிடலாம்னு ப்ளான் போட்ருப்போம்.

❖ 'லைபோய் இருக்குமிடம் ஆரோக்கியம் இருக்குமிடம்', 'ஹமாம் இருக்க பயமேன்' என சோப்பு விளம்பரங்களாகக் காட்டிக்காட்டி டி.விக்கள் உலகமக்களைக் குளிக்க வைத்துக் குளிர்வித்துக்கொண்டிருக்கும்.

❖ நிகழ்ச்சி ஓடிக்கொண்டு இருக்கும்போது திடீர்னு 'டொய்ங்'ங்கிற சத்தத்தோட வரும் 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' என்கிற ஸ்கிரீனை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டே வெகுநேரமாக அமர்ந்திருப்போம்.



❖ 'சக்திமான்' மாயாஜாலத் தொடர் பார்த்துட்டு உண்மையாகவே அப்படி ஒருத்தர் இருக்கிறார்னு நம்பி, வாத்தியார் அடிக்கும்போதும், அப்பா திட்டும்போதும் சக்திமானைத் துணைக்குக் கூப்பிட்டு பல்பு வாங்கியிருப்போம்.

❖ பழைய கறுப்பு வெள்ளை டி.வியில் ஊதா கலர் அட்டையை ஒட்டி கலர் டி.வியாக எக்ஸ்சேஞ்ச் செய்து 'எங்க வீட்டுலேயும் கலர் டி.வி. இருக்குதே'னு பெருமை பொங்கச் சொல்லி சந்தோஷப்பட்டிருப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதர்சிய தம்பதிகள்...

காலை நேர விரிவுரைக்காக தயார்படுத்திக் கொண்டிருந்த தயாளனின் மனம் நிலை கொள்ளாது அலைந்து கொண்டிருந்தது. பாடசாலைக் காலத்தில் இருந்தே படிப்பில் சிறந்து விளங்கிய தயாளன் பல்கலைக்கழகத்திலும் தனது கெட்டித்தனத்தை தக்கவைத்துக் கொண்டான். அதன் விளைவு இன்று பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறி மீண்டும் அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளனாக சென்று கொண்டிருக்கிறான். இப்படியாகப்பட்ட நிலையில், சில காலமாகவே அவனது மனம் நிலை கொள்ளாது அலைந்து கொண்டிருக்கிறது.


தனது திருமண வாழ்க்கையைப் பற்றி பல கனவுகளை நீண்டகாலமாக சுமந்ததினால் என்னவோ, தயாளன் தான் பார்க்கும் சினிமாக்கள், கதைகள் மூலமாக தனது மனைவியைப் பற்றியும் தனது குடும்ப வாழ்க்கையைப் பற்றியும் கொஞ்சம் அதிகமாகவே கற்பனை செய்திருந்தான். அதன் விளைவு பார்க்கும் பெண்களை யெல்லாம் தனது கற்பனைக்குள் பொருத்திப் பார்த்துக் கொள்வான். மனைவி என்று அமைந்து விட்டால் அவள் தான் எல்லாம் என்று சிந்தித்திருந்தான்.இந்த நிலையில்தான் தயாளனின் காதில் மணி ஓசையும் , தலைக்கு பின்னால் சிறு ஒளி வட்டமும் கடைவாயிலில் சிறு அருவியும் உருவாகியிருந்தது சமீபகாலமாக. இவற்றுக்கெல்லாம் காரணம் அவனது விரிவுரை வகுப்பில் இருக்கும் அழகுப் பதுமையான மயூரதி என்னும் இறுதியாண்டு மாணவி.

தனது கற்பனை வளையத்துக்குள் போட்டுப் பார்க்கும் முன்னரே தனது மனதுக்குள் நுழைந்தவளை வலுக்கட்டாயமாக வெளியில் எடுத்து கற்பனை மனைவியுடன் ஒப்பிட்டுப் பார்த்தான். நீண்ட முடி, துறு துறு என்ற கயல் விழி ..... ம்ம்ம் எல்லாமே கச்சிதமாக, ஆனாலும் அவசரப்படக்கூடாது என்ற எண்ணத்துடன் அவளது குடும்ப நிலையையும் விசாரித்ததில் அதுவும் திருப்தி. நண்பர்கள் கேட்டார்கள் நீ காதலிக்கிறாயா? அல்லது உனக்கு நீயே புறோக்கறா?சுய சம்மதம் பேசுற மாதிரி இருக்கு. தயாளனுக்கு நண்பர்களின் கேள்வி அவனது ஆண்மையை உசுப்பேற்றியது. இதன் விளைவு மயூரதியைக் காதலிப்பது என முடிவு செய்தான். அன்றிலிருந்து தொடங்கியது நிலை கொள்ளாமை. எவ்வளவு முயன்றும் தனது விருப்பத்தினை சொல்ல முடியவில்லை என்ற கௌரவப் பிரச்சினை, கேட்டு மறுத்து விட்டால் என்ன செய்வது? என்ற பயம். இதைத்தான் கழுத்துக்கும் தொண்டைக்கும் இடையில் உருவமில்லா ஒரு உருண்டையும்...என்று பாடினாங்களோ?என்று யோசிக்க தூண்டுமளவுக்கு வளர்ந்திருந்தது காதல் பித்து. ம் ம் ம் இல்லை இதனை காதல் விருட்சம் என்றும் சிலர் சொல்வார்கள். எது எப்படியோ ஏதோ ஒன்று தயாளனின் மனதில் வளர்ந்து விட்டது என்பது மட்டும் உண்மை.இன்றைய தினம் மயூரதியிடம் நேரடியாக கேட்டுவிடுவது என்ற தீர்மானத்துடன் தயாளன் வீட்டிலிருந்து கிளம்பினான். பல்கலை வளாகத்தினுள் மயூரதியை தேடி அலைந்தன கண்கள். விரிவுரை மண்டபத்துள்ளும் அலைந்தன, ஆனாலும் பயன் இல்லை. மயூரதியைக் காணவில்லை. துவண்ட மனதுடன் வீட்டுக்கு வந்தவனுக்கு தேநீரை வழங்கியவாறே தாயார், தம்பி பிள்ளை ஒருத்தியின்ர படம் பக்கத்துவீட்டு மாமி கொடுத்தவ உன்ர சாதகத்துடன் பொருத்தமாம் பிள்ளைக்கும் உன்னைத் தெரியுமாம். உனக்குப் பிடிச்சிருந்தா செய்யலாம் என்று சொன்னவா என்று சொல்லியவாறே படத்தினைக் காட்டினார். வேண்டா வெறுப்புடன் ஒப்புக்காகப் படத்தைப் பார்த்தவனின் மூளையில் வெட்டியது மின்னல். மயூரதியின் படம். இருந்தாலும் சந்தோசத்தை அடக்கியவாறே உங்களுக்கு பிடிச்சா தொடருங்கோ என்று சர்வ சாதாரணமாக சொல்லிவிட்டுத் தன் அறைக்குள்ச் சென்று துள்ளிக்குதித்தான்.

தயாளனின் சம்மதம் கிடைத்ததும் அசுர வேகத்தில் எல்லாம் முடிந்தது. தயாளன் தன் கனவுப்படி வாழ்க்கையை வாழ ஆரம்பித்தான்.ஒரு நாள் மயூரதி தயாளனிடம் நாங்கள் ஆதர்சிய தம்பதிகள் தானே ? என்று கேட்டாள் தான் கேட்க, நினைத்ததை மனைவியே கேட்டதில் இரட்டிப்பு சந்தோசம். பேச்சு மூச்சின்றி நாங்க மட்டும் தான் என்று தன் மனைவியை கட்டிப் பிடித்தவாறே ஆசையுடன் கூறினான்.

நாட்கள் நகர நகர தயாளனில் குறைபிடிப்பதே மயூரதியின் வேலையாக இருந்தது. இவருக்கு ஒன்றும் தெரியாது. இவர் கதைக்கமாட்டார் என்று சொல்லிச் சொல்லியே தயாளனின் இயல்பான வளா வளா குணம் தயாளனுக்கே மறந்து போனது. ஒருமுறை தயாளன் மரக்கறி வேண்டிவர அதில் மரவள்ளிக் கிழங்கு அவியாமற் போக , அவரை வேண்டவிட்டால் இப்படித்தான் எங்கேயும் ஆவென்று கொண்டு அவியாத கிழங்கை வேண்டிவந்து விடுவார் பாருங்கோ மாமி என்று மாமியாரிடம் புறுபுறுக்க , தயாளனின் தாயாரும் அப்படியே அப்பாவைப் போல அவரும் இப்படித்தான். தயாளனுக்கு குழப்பமாக இருந்தது. அப்பாவுக்கு மரவள்ளிக் கிழங்கு வேண்டத் தெரியாதா?அல்லது எங்கேயும் ஆவென்று கொண்டு திரிஞ்சவரோ ? மரவள்ளிக் கிழங்கு வேண்டுவதிலும் பரம்பரை அலகின் செல்வாக்கு இருக்கிறதோ.இதனை வைத்து ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுத வேண்டும் என்ற சிந்தனையுடன் புத்தகங்களை தேட ஆயத்தமானான்.

எங்கட குடும்பத்தில எல்லா வேலையும் நான் தான் செய்ய வேணும்.இவரை விட்டா



அவ்வளவு தான் காசைக் கரியாக்கிப் போடுவார். இப்பொழுதெல்லாம் மனைவியின் வாயிலிருந்து இந்த வசனங்கள் சரளமாக வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு தேநீருடன் பரிமாறப்படுவது; மனைவியின் சம்பிரதாயங்களுடன் ஒன்றானது. இதனை

## சிறுகதை

பெருமையாக ஏற்றுக் கொள்வதா? இல்லை தன்னை ஒரு டம்மியாக யோசிப்பதா என்று குழம்பிக் குழம்பியே தயாளனின் தலையில் சிறு மைதானம் உருவாகியிருந்தது. இரவு வழக்கத்துக்கு மாறாக மனைவியிடமிருந்து அன்பு குடியிருந்தது. கூடவே என்னப்பா நாங்க ஆதர்சிய தம்பதிகள் தானே என்றவுடன் தயாளனின் வயிற்றினுள் பட்டாம்பூச்சி பறக்கத் தொடங்கியது. காதல் வந்தாலும் வயிற்றினுள் பட்டாம் பூச்சி , காதல் மனைவியின் கேள்வியின் பயத்திலும் பட்டாம் பூச்சி பிரமை! என்ற குழப்பமான நினைப்புடன் என்னம்மா நாங்கள் ஆதர்சிய தம்பதிகள் தானே அதிலென்ன சந்தேகம் என்றான் தயாளன். மயூரதி தனது கைகளால் தயாளனின் கைகளை அழுத்தியவாறே மெதுவாக, முதலில் இல்லை இப்பதான் சந்தேகம் வந்தி ருக்கு..என்று மெதுவாக இழுக்கத் தொடங்க ... இன்றைக்கு முருங்கை மரம் ஏறிவிட்ட உணர்வுடன் ஏன் என்ன சந்தேகம் என்றான் தயாளன்.

கலியாணம் கட்டிய புதில் நாங்க மட்டுந்தான் ஆதர்சிய தம்பதிகள் என்று சொன்னீங்க. இப்ப சொல்லும் போது 'மட்டுமை' காணவில்லை. அது தான் சந்தேகமாகக் கிடக்குது. இப்போது சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது பட்டாம்பூச்சி வயிற்றில், அடடா ஒரு ஆர்வக் கோளாறில் மனைவியை சந்தோசப்படுத்த சொன்ன வார்த்தைகள் இன்று எனக்கு எதிராக பூமராங் எனும் ஆயுதத்தைப் போல் மீளவும் என்னை நோக்கி திரும்பியது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் எனக்கு அப்படியில்லை. ஏனெனில் சமீபகாலமா இவ்வாறான தாக்குதல்களுக்கு பழகிவிட்டிருந்தேன். அதுவா... அப்ப உங்களை சந்தோசப்படுத்துவதற்காக அப்படிச் சொன்னனான். அதுக்காக இப்ப வேணுமென்று மட்டுமை விட்டுட்டு சொல்லவில்லை.

அவ்வளவுதான், வெடித்தது விம்மல், படபத்துக் கலங்கியது கண்கள், மழை போல் பொழிந் தது கண்ணீர். கூடவே, அப்ப இவ்வளவு காலமும் என்னை ஏமாத்திக் கொண்டுதானே இருந்திருக்கின்றீங்க... மனைவியின் அழுகை, கண்ணீர் , தயாளனைக் குழப்ப இப்பவும் எப்பவும் நாங்க மட்டும் தான் ஆதர்சிய தம்பதிகள், இதுக்குப் போய் பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம்... என்று கட்டியணைத்த வாறே தயாளன் 'மட்டும்' என்ற வார்த்தை எவ்வளவு வீரியமானது என்பதை நொந்த பின் உணர்ந்து கொண்டான்.

காலையில், இரவின் ஊடல் எதுவும் மயூரதியில் தெரியவில்லை. ஆனால் அன்பாக உங்களது மொட்டந்தலை எனக்கு விருப்பம் என்றாள். ஏன்? என்ற தயாளனின் கேள்விக்கு , உங்கட தலை மொட்டையாக இருந்தால் கம்பசில ஒரு பெட்டயளும் உங்கள பார்க்கமாட்டினம் தானே. அடிப்பாவி கலியாணம் கட்ட முதல் தலை நிறைய முடி இருக்க வேண்டுமென்று சொன்னீயாம் என்ற தயாளனின் கேள்விக்கு, அது அப்ப , இது இப்ப?. உனக்கென்ன லூசா? அப்ப நானும் என்ன அப்படி அலையிறவனா? என்னைய சந்தேகப்படுகிறாயே. பார்த்தீர்களா. உங்களுக்குக் கோபம் வருகுது. குற்றம் உள்ள நெஞ்சுதானே குறுகுறுக்கும் என்றவளை ஓங்கி அறைய வேண்டும் போல் இருந்தது. ஆனால் நாங்கள் ஆதர்சிய தம்பதிகளாயிற்றே. அப்புறம் எப்படி அடிப்பது? அடிப்பாவி இது நீ என்னை நம்பவில்லையே என்று வந்த கோபம் . நாங்க ஆதர்சிய தம்பதிகள் என்று சொல்வாய் . பிறகு ஏன் இப்படி கதைக்கிறாய்?

அது நீங்க என்னை சந்தோசப்படுத்த பொய்தானே சொன்னீங்க. நேற்று இரவு நீங்களே சொன்னதுதானே. நான் எல்லாவற்றையும் சேர்த்து கூட்டிக்கழித்துப் பார்த்துத்தான் சொன்னேன். எப்பூடி என் சாமர்த்தியம்? வந்தது கோபம். இருந்தாலும் மனதை அடக்கியவாறு ' பாவம் அவள் என்னிடம் தானே அதிகாரம் செலுத்த முடியும்' என்ற நினைப்புடனும் முடிவுடனும் சலூனுக்கு கிளம்பினான்.

சலூனில் மீதமிருந்த தலைமயிரையும் வழிக்கும் போது தயாளனின் மனதில் தனது திருமண வாழ்க்கை பற்றிய கனவுகளும் நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினைகளும் மீள ஓடியபடி இருந்தன. இறுதியில் மயூரதியின் பக்கம் மனம் சாய்ந்தது. காரணம் அவளுக்கு என்னில் இருக்கும் அபரீதமான அன்பும் தனக்கு மட்டுமேயுரியவர் என்ற உணர்வுமே அவளின் நடத்தைகளைக் குழப்புகின்றன. இதில் நான் கோபப்படுவதற்கு ஒன்றுமில்லை என்ற உணர்வுடன் தயாளனின் கைகள் திருப்தியுடன் மொட்டந் தலையைத் தடவியது.

**மானிப்பாய் சுதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினோத அன்பளிப்புகள்

நோர்வே அரசு தன்னுடைய பக்கத்து நாடான பின்லாந்துக்கு அதன் சுதந்திர தினத்தின் போது இரு நாடுகளுக்கு இடையே உள்ள ஒரு மலையை அன்பளிப்பாக வழங் குவதாக அறிவித்துள்ளது. வரலாற்றில் பல்வேறு நாடுகளும் இது போன்ற வினோத அன்பளிப்புக் களை பிற நாடுகளுக்கு வழங்கி யுள்ளன.அந்த இடங்களுக்கு ஒரு விசிட் அடிப்போமா?

**✹ சுதந்திர தேவி சிலை**

அமெரிக்காவில் சுற்றுலா பயணி களால் விரும்பிப் பார்க்கப்படும் ஒன்று சுதந்திர தேவி சிலை.பிரான்ஸ்அமெரிக்காவுக்கு இச்சிலையை அன்பளிப்பாக வழங்கியது. நியூ யோர்க் நகரின் துறைமுகத்தில் லிபர்டி தீவில் படத்தில் காணும் சுதந் திர தேவி சிலை அமைந்துள்ளது. ரோமன் பெண் கடவுளான லிபர் டாஸ் மேலாடையோடு வலது கையில் ஒளி வழங்கும் ரோர்ச் லைற்றையும் இடது கையில் புத்தகம் ஒன்றை தாங்கியபடியும் கம்பீரமாய் காட்சி யளிக்கிறார். அந்தபுத்தகத்தில் அமெரிக் காவின் சுதந்திர நாளான ஒக் ரோபர் 28.1886 செதுக்கப்பட்டுள்ளது.

இது பிரெஞ்ச் சிற்பி பிரெடிரிக் ஒகஸ்டே பர்தோல்டி என்பவரால் வடி வமைக்கப்பட்டு குஸ்டன் ஈபிள் என்பவ ரால் கட்டப்பட்டதாகும். தனித்தனி பாகங்களாக தயாரிக்கப்பட்டு லிபர்டி தீவில் ஒன்றாக இணைக்க ப்பட்டதாகும்.



**✹ செனட் சபை சுத்தியல்**

அமெரிக்க செனட் சபையில் அமைதியை ஏற்படுத்த மேஜையில் தட்டப் பயன்படும் தந்த சுத்தியல் இது. 1789ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ள இந்த சுத்தி யலை 1954 ஆம் ஆண்டு ஜனா திபதி ரிச்சர்ட் நிக்சன் காரசார வாக்கு வாதத்தின் போது பயன் படுத்தினார். அப்போது இதில் பிள வுகள் ஏற் பட்டன. அமெரிக்க அரசு இது குறி த்து இந்தியாவிடம் உதவி கேட்க 1954ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி இந்தியா அமெரிக்க சபை க்கு புதிய கை சுத்தியலை அன் பளிப்பாக வழங்க அன்று முதல் இன்று வரை அந்த சுத்தியலே பய ன்பாட்டில் உள்ளது.


**✹ கோஸ்டாரிகா தேசிய மைதானம்**

படத்தில் நீங்கள் காணும் மைதான அரங்கம் கோஸ்ரிகா நாட்டில் அமை ந்துள்ளது. இதனை ஒரு ஒப்பந்த அடிப்படையில் சீனாவே தன் முழு செலவில் இருக்கைகள் உட்பட கட் டிக் கொடுத்துள்ளது. திட்டமிடப்பட்ட செலவு 88 மில்லியன் டொலர் என்றாலும் முழுக்கட்டடமும் உரு வாக செலவானதோ 100 மில்லி யன் டொலர்கள் ஆகும். 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த மைதானம் கோஸ்டாரிகா நாட்டு காறபந்து அணியின் முதன்மை மைதான அரங்கமாகவும் பயன் பாட்டுக்கு வந்தது.



**✹ கண்ணீர்துளி நினைவுச் சின்னம்**

ஒரு காலத்தில் பனிப்போர் கொண்டு மோதிக்கொண்டிருந்த ரஷ்யாவும் அமெரிக்காவும் இடையில் காலம் நெருங்கிய நட்போடு இருந்த சூழ லில் அமெரிக்காவுக்கு ரஷ்ய அரசு தந்த அன்பளிப்பு இது. 100 அடி



உயரம் கொண்ட ஸ்தூபி எஃகில் செய்யப்பட்டு வெண்கல முலாம் பூசப்பட்டது. இதனை உருவாக்கிய வர் ஜுரப் செரிடெலி எதற்காக? உலக வர்த்தக மைய தாக்குதலில் உயிர் இழந் தவர்க ளின் நினை வாக வழங்கியது இது. நியூ ஜெர்சி யின் பயோனி என்ற பகுதியில் 2006ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி இது நாட்டுக்கு அர்ப் பணிக்கப்பட்டது.



**✹ ஜோர்ஜ் வோஷிங்டன் சிலை**

முதலில் பிரிட்டிஷ் இராணு வத் திற்காக போராடிய ஜோர்ஜ் வோஷி ங்டன். பின்னாளில் தன்னை மாற் றிக் கொண்டு அமெரிக்கப் புரட்சி யின் போது அதனைத் தலைமை தாங்கி நடத்தி வெற்றி பெற்று அமெ ரிக்க ஜனாதிபதியாக முதன் முத லாக பதவியேற்றார். இவருடைய மார்பில் பகல் சிலை ஒன்று ரிச்ம ண்ட் நகரில் உள்ளது. இதைப் போன்ற அச்சு அசலான சிலை ஒன்று வெண் கலத்தில் உருவாக்கப்பட்டு லண் டன் நஷனல் கலரிக்கு வெளியே நிறுவப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் வோஷிங்டன் ஒரு கட்ட த்தில் இனி என் காலை லண்டனில் வைக்கமாட்டேன் எனக் கூறினார். இதனால் அவர் கால்கள் நேரடி யாகத் தரை மீது படாமல் இருக்க வெர்ஜீனியா நகரிலிருந்து மண் எடுத்து வரப்பட்டு அதன் மீது அவ ரது கால்கள் வைக்கப்பட்டுள்ளன.

கண்ணீர்த்துளி நினைவுச் சின் னம் மனதை கலங்கடிக்கிறதே!

# நம்பினால் நம்புங்கள்!



☆2004இல் அவுஸ்திரேலியாவில் உள்ள ஓர் ஆய்வு நிறுவனம் பணியிட ங்களில் டீஸ்பூன் தொலைந்து போவது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறது.

☆அமெரிக்காவில் 80 சதவீத வேலைவாய்ப்புகள் விளம்பரப்படுத்தப்படுவதே இல்லை.

☆மும்பை புறநகர் ரயில் பயணத்தின் போது மட்டுமே 2015ஆம் ஆண்டில் சராசரியாக தினமும் 9பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

☆ஆங்கிலம் பேசுகிற ஒரு அமெரிக்க இளைஞர் 20வயதில் உள்ள 42 ஆயிரம் வார்த்தைகளை அறிந்து வைத்திருக்கிறார்.

☆தொலைந்து போன ரிமோட்கன்ட்ரோல்களில் 4 சதவீதம் பின்னொரு நாளில் பிரிட்ஜிலோ பிரீசரிலோ கண் டெடுக்கப்பட்டிருக் கின்றன!

☆50 இலட்சம் அமெரி க்கர்கள் வாரம் 40 மணி நேரம் வீடியோ கேம்ஸ் ஆடுகிறார்கள். இது ஒரு வார வேலை நேரத்துக்குச் சமம்!

☆உலகின் ஒட்டுமொத்தத் சூறாவளி களில் 75 சத வீதம் அமெரிக்கா விலேயே நிகழ்கின்றன.

☆அதிக பிறப்பு விகிதம் கொண்ட உலகின் முதல் 30 நாடுகளும் ஆபி ரிக்காவிலேயே உள்ளன.

☆65 சதவீத அம்மாக் களும் 70 சதவீத அப் பாக்களும் ஒரு குழந் தையே போதும் என்கிற மனநிலையில் உள்ளனர்.

☆டெக்யூலா பானத்தை 800 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வேதி முறை யில் வெப்பப்படுத் துவதன் மூலம் வைர த்தை உருவா க்க முடியும் என மெக்சி கன் விஞ்ஞானிகள் கண்ட றிந்துள்ளனர்.






என்னங்க இது... ஒரு வாரமா தினமும் ஒரு கலண்டர் வாங்கிட்டு வர்றீங்களே எதுக்கு?

நீதானே டெய்லி கலண்டர் வாங்கிட்டு வாங்கன்னு சொன்னே?




போயும் போயும் இந்த டாக்டர்கிட்டயா? நான் கண்ணை செக்கப் பண்ணிக்கணும்?

அவருக்கே மூன்று மணி நேரம் தான் பார்வை தெரியும் போலிருக்கே



எதிரி மன்னன் கண்ணில்படாமல் மகாராணியை ஒளித்துவைக்க வேண்டுமா..ஏன்,மன்னா?

என் நிலைமை என் எதிரிக்குக்கூட வந்துவிடக் கூடாது அமைச்சரே!



டாக்டர்! பாதி ஆபரேஷன்ல சந்தேகம் வந்துட்டா என்ன பண்ணுவீங்க?

சந்தேகம் வராம முடிச்சுடுவேன்!

மன்னராட்சியை ஒழிக்க வேண்டும் என்று மக்கள் எல்லாம் போராடுகிறார்கள். நீங்கள் அமைதியாத இருக்கிறீர்களே,மன்னா?

நம் அரண்மனையில் மகாராணி ஆட்சிதானே நடக்கிறது!





என் ஜாதகப்படி மூன்று வேளையும் கவலையில்லாமல் சாப்பிடற யோகம்இருக்காம்யா!

குற்றப்பத்திரிகை வந்தப்பவே அதைத்தான் தலைவரே நானும் நினைச்சேன்

திருடினவன் போகும் போது ஏதாவது உங்க கிட்ட சொன்னானா?

ம்..பொலிஸுக்கு போகாம இருந்தா திருடினதுல 20 பேர்சன்ட் திருப்பித் தர்றேன்னான்!





டாக்டர் கொடுத்த இந்த மருந்தை சாப்பிட்டா தலைச்சுற்றல் நின்னுடுமா சிஸ்ரர்...?

நின்னுடும் ...ஆனா மருந்தோட விலையைக் கேட்டா மறுபடியும் ஆரம்பிச்சிடும்!

உங்க உடம்பு குணமாகணும்னா நீங்க கம்ப்ளீட் ரெஸ்ட் எடுக்கணும்...

இதை ஏன் சொல்றீங்க டாக்டர்? என் மனைவி கிட்ட சொல்லுங்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பூர்வமாக வேலை செய்யாதவர்களும் சாதிக்கலாம். ஆனால் அந்த சாதனையில் வெறுமையே மிஞ்சும். அந்த அரைகுறை வெற்றி எங்கும் கசப்புணர்வையே பரவ விடும்!

அப்துல் கலாம்

# பிரச்சினை இல்லாத வாழ்வு சாத்தியமில்லை!

## எப்படிக் கையாள்வது என்பது தான் திறமை



உங்கள் பணி இடத்தில் இருவரிடையே ஏதோ ஒரு கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. எளிய உதாரணமாக ஒருவர் காலை இன்னொருவர் மிதித்து விடுகிறார் என்று வைப்போம். வேண்டுமென்றே மிதித்ததாக மிதிபட்டவர் சொல்கிறார். அது தற்செயல் என்பது மிதித்தவரின் வாதம். மென்குரல்களில் தொடங்கிய இந்த வாதம் மெல்ல வலுக்கிறது. கனத்த வார்த்தைகள் பரிமாறப்படுகின்றன. ஒரே இரைச்சல், கூப்பாடு, பொறுப்பில்லாதவர்களின் சண்டைகள் தேவையற்ற பழைய சாக்கடைகளைக் கிளறிக் கொண்டு வரும் என்பதால் சூழ்நிலையே நாற்றமடிக்கத் தொடங்குகிறது.

உங்களாலும் உங்களைப் போன்ற சக பணியாளர்களாலும் இதனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. என்ன செய்வீர்கள்? இரண்டு பேருக்கும் பொதுவாக நின்று அவர்களின் குரல்களை விழுங்குகின்ற மாதிரி சப்தமிட்டுக்கொண்டு ''மனுசன் இங்க வேலை பார்க்க வேண்டாமா?'' என்று உள்ளே புகுவீர்கள். அந்த மட்டில் சண்டை நின்றால் சரி. அது தொடரும் பட்சத்தில் உங்களின் வாதம் மற்றும் சமாதானக் குரல்கள் எப்படி இருக்கும்? ''இந்த அற்ப விடயத்திற்கு சண்டை இடுவது தவ்று. பொறுமை தேவை. கேட்பவர்கள் சிரிப்பார்கள்.. சகிப்புத்தன்மை தேவை'' என்றெல்லாம் தூள் கிளப்புவீர்கள்.

அதைத் தொடர்ந்து இருவரும் உங்களிடம் அவரவர் வாதத்தை எடுத்து வைப்பார்கள். நீங்களும் பொறுமையாகக் கேட்டு இது சரி, இது தப்பு என்று பாரபட்சமின்றி நடுநிலையோடு ஆராய்ந்து தீர்ப்பை வழங்குவீர்கள்.

பிரச்சினையைத் தீர்க்க தானகவே முன் வந்த உங்கள் மனநிலைக்கு பாராட்டுக்கள். அமைதியைக் காக்கும் தூதராக நீங்கள் இருப்பது நல்ல விடயமே. ஆனால்? பிரச்சினை தொடங்கும் இடமும் அதுதான். உங்கள் தீர்ப்பும் வாதங்களும் உச்ச நீதி மன்றம் உலக நீதிமன்றங்களின் தரத்தில் சரியாகவே இருக்கின்றன. சரியாகத்தான் இருக்கும். ஏனென்றால் இது அடுத்தவர்களின் பிரச்சினை தானே. சம்பந்தமே இல்லாத ஒரு பிரச்சினையில் தலையிட்டு முடிவுக்கு வருவது எளிது. இதே நடுநிலையோடும் நேர்மையோடும் நாம் நமது சொந்தப் பிரச்சினைகளில் நடந்துகொள்கிறோமா என்ன? கொஞ்சம் நியாயமாக யோசியுங்கள். பிரச்சினை இதுதான். நம்மால் ஒரு நாட்டின் பிரதமருக்கு எப்படி ஆள வேண்டும் என்று ஆலோசனை வழங்க முடியும். ஆனால் நம் பக்கத்து வீட்டுக்காரருடன் ஏற்பட்ட மாபெரும் அற்ப பிரச்சினைக்கு தீர்வு காண இயலாது. இதுதான் யதார்த்தம்.

அடுத்தவருக்கு உபதேசம், அறிவுரை வழங்கும் போதெல்லாம் பலருக்கு பூமியில் இருந்து பாதங்கள் ஒரு இஞ்சுக்கு உயர்ந்து விடுகின்றன. அந்த அறிவுரைகள் மெல்ல மெல்ல உங்கள் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துவதாகவும் அடுத்தவர்கள் எவ்வளவு முட்டாள்கள் என்பதை நிரூபிப்பதாகவுமே அமையும்.

இந்தச் சூழ்நிலையில் உங்கள் தீர்ப்பு எப்படி மதிக்கப்படும்? ஏதோ நீங்கள் கொஞ்சம் அவர்களைவிட சீனியர் என்றால் உங்களை சற்று நேரம் மதிப்பார்கள். பின் மதிக்கிற மாதிரி நடிப்பார்கள். உங்கள் முதுகுக்குப் பின்னால் "பெரிசா அட்வைஸ் பண்ண வந்துட்டான்" என்றுதான் பெரும்பாலும் விமர்சிப்பார்கள்.

இந்த உலகில் யாருக்கு என்ன தெரியாமல் இருக்கிறது? எல்லோருக்கும் எல்லாம் தெரியும், நமது ஆலோசனைகளைக் கேட்டு வாழ வேண்டிய நிலையில் யாரும் இல்லை. எனவே உங்கள் விலைமதிப்பற்ற அறிவுரைகள் உங்களிடமே இருக்கட்டும். சொல்லுங்கள் யாராவது உங்களைக் கேட்டால் ஆலோசனை மழை பொழியுங்கள். கேட்டால் மட்டுமே. சரி முதலில் ஏற்பட்ட சண்டைக்கு வருவோம். பணி இடச்சூழல் கெடும்போது உங்களால் வேலை பார்க்க இயலாதுதான். அதேநேரம் அடுத்தவர் விடயத்தில் தலையிடக் கூடாதென நாம் ஒதுங்கிப் போனாலும் அது பொறுப்பின்மையாகக் கருதப்படும். எனவே அமைதி ஏற்படாத சூழலில் உங்கள் உடனடி மேல்நிலை அலுவலருக்குத் தகவல் கொடுத்து விடுங்கள்.

**"இந்த உலகில் யாருக்கு என்ன தெரியாமல் இருக் கிறது? எல்லோருக்கும் எல்லாம் தெரியும். நமது ஆலோசனைகளைக் கேட்டு வாழ வேண் டிய நிலையில் யாரும் இல்லை."**

நீங்கள் தலையிடவே கூடாதா என்றால் தலையிடலாம். உங்கள் மேலதிகாரி உங்களுக்கு ''இந்தப் பிரச்சினையை சோல் பண்ணுங்கள்" என்று அனுமதி அளித்தால் தலையிடலாம். அதுவே நம் நீண்டகால பணிப் பாதுகாப்புக்கு நல்லது. உங்களுக்கு உரிமை, அதிகாரம் வழங்கப்படாத விடயங்களில் நீங்கள் தலையிட்டு தீர்வு காண முயல்வது ஆபத்தானது. நாளைக்கு சண்டையிட்ட இருவரும் சமாதானமாகப் போய்விட்டால் நீங்கள் சொன்ன வார்த்தைகளே உங்களுக்கு எதிராகத் திரும்பும். உங்களின் உரிமையற்ற தலையீட்டால் ஏதாவது தவறு நேர்ந்தால் உங்கள் மேலிடமே இதில் தலையிட நீ யார்? யார் உனக்கு அதிகாரம் கொடுத்தது பிறகு நாங்கள் எல்லாம் எதுக்கு இருக்கிறோம் எனக் குற்றம் சாட்டும்.

கேட்காமல் திணிக்கப்படும் அறிவுரைகளுக்கும் உளறல்களுக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது.

போன வருட விலைவாசி இந்த வருடம் இல்லை. எல்லாமே உயர்ந்திருக்கின்றன. அவ்வப்போது டெங்கு, சிக்குன்குனியா, மெட்ராஸ் ஐ... என சீசன் நோய்கள் வருகின்றன. குழந்தைகளை எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்று தெரியவில்லை. கடன் தொந்தரவு வேறு. சிலருக்கு வீடு கட்டியதில் பிரச்சினை. பலருக்கு வீடே பிரச்சினை.

இந்தப் பிரச்சினைகளில் குறைந்தபட்சம் ஒன்றாவது நம்மில் அனைவருக்கும் இருந்தே தீரும். உயிர்வாழும் அனைவரும் காற்றாலும் பிரச்சினைகளாலும் சூழப்பட்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்களைத் தவிர எல்லோரும் பிரச்சினை இல்லா வாழ்வில் இருக்கிறார்கள் என்று நம்புகிறீர்கள். உங்கள் இன்னல்கள் யார் காதிலாவது விழுந்து விடாதா என்று சுமைதாங்கி தேடுகிறீர்கள். பணி இடத்தில் உங்களுக்கு நெருக்கமாக நீங்கள் கருதுபவர்களுடன் நீங்கள் உங்கள் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்கிறீர்கள். தாராளமாக சொல்லுங்கள். அவர்களுக்கும் அது ஒரு நேரப் போக்காய் அமையும் அல்லவா? பகிரப்படும் சோகங்கள் பாதியாகக் குறையும் என்பது சரி. அதற்காக உங்களது சொந்த வாழ்க்கையை, அந்தரங்கத்தை அடுத்தவர்களிடம் தெரிவிக்கின்றீர்கள். ஒருவேளை தவறான ஆளிடம் சொல்லிவிட்டால் அவர் கண்டிப்பாக இன்னொருவரிடம் சொல்வார். "இவளுக்கு இந்த மாதிரி பிரச்சினை முழிச்சிட்டிருந்தா நான்தான் அட்வைஸ் பண்ணேன்.." என்று தன்னைப் பெரிய ஆளாக்கிக் கொள்வார்.

நீங்கள் அடுத்தவரின் பொழுதுபோக்கு மற்றும் வாதப் பொருளாவீர்கள். இது உங்கள் மனவேதனையை இன்னும் அதிகப்படுத்தும். நீங்கள் இன்னும் மதிப்பிழப்பீர்கள்.

உதாரணமாக " எனது மகள் சரியாகப் படிக்கமாட்டேன் என்கிறாள்" என சக ஊழியரிடம் நீங்கள் புலம்புனீர்கள் என்றால் அவர் அடுத்த நொடியே குழந்தை வளர்ப்புக் கலையில் நிபுணராக மாறி விடுவார். பீறிட்டுக் கொண்டிருக்கும் அவரது அறிவைக் களத்தில் இறக்குவார். அதை விடக் கொடுமை தற்செயலாக அவர் உங்கள் மகளைப் பார்த்தால் " என்னம்மா இப்ப நல்லா படிக்கிறியா..." என்று நீங்கள் அவரது உதவி கோரியதை போட்டு உடைப்பார்.

இதற்கு உங்கள் மனம் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்று அர்த்தம்! நீங்கள் முதிர்ச்சியடையவில்லை என்று பொருள். பிரச்சினை இல்லாத வாழ்வு சாத்தியம் என்று நம்புகிற பேராசைக்காரர் அல்லது முட்டாள் நீங்கள் என்றும் பொருள். உங்கள் பசிக்கு நீங்கள் தானே சாப்பிட்டாக வேண்டும்? உங்கள் சுமைகளை நீங்கள் தானே சுமந்தாக வேண்டும்?

ஒரு விடயத்தை வெளியே சொல்லும் முன் ஒரு தடவை யோசியுங்கள். நீங்கள் சொன்ன வார்த்தைகள் அப்புறம் உங்களுக்கு சொந்தமில்லை. நீங்கள் உங்களை இழப்பதும் ஒன்றுதான். உங்களது சொற்களை இழப்பதும் ஒன்றுதான். உங்கள் பலவீனங்கள் வெளிப்படுவது உங்களுக்கு நன்மை தராது. சுய பரிதாபங்களால் நாளடைவில் நீங்களே உங்கள் மீது மதிப்பிழந்து விடுவீர்கள்.

யாரையும் நம்பக்கூடாதா, நண்பர்கள் பிறகு எதற்காக? என நீங்கள் வாதிட்டால் உண்மையான, தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். ஆனால் அவர்களும் உதவி செய்வார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள்.

அவர்களிடம் புலம்பாதீர்கள், கலந்துரையாடுங்கள், புலம்புவதற்கும் தகவல் தெரிவிப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறதல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டுசெல்லும் நீதிக்கான போராட்டம்



காணாமற் போனவர்களின் உறவினர்கள் கடந்த வாரம் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.



சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை (30-08-2016) முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட இப் போராட்டங்களின் போது இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கடந்த ஏழு ஆண்டுகளில் பல போராட்டங்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னெடுத்திருந்தனர்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் போராட்டங்களில் பங்கேற்று உறவுகளை மீக்க கோரிக்கை முன்வைத்தனர்.

காணாமற் போனவர்களின் உறவினர்களின் கண்ணீர்க் கோரிக்கைகளுக்கு அரசதரப்பு இன்று வரை செவிசாய்க்கவில்லை. சர்வதேசமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டை மறுக்க முடியாது. காரணம் நிலைமை அதுவாகவே யுள்ளது.

அரசாங்கம் காணாமற் போனவர்களின் நிலையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக ஆணைக்குழுக்கள், பணியகங்களை அமைப்பதிலேயே கவனத்தை செலுத்தி வருகின்றது.

இதனால் காணாமற் போனவர்களின் உறவினர்களின் போராட்டமும் முற்றுப்பெறாது தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட போதும் அவரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். பொது நூலகம் முன்பாகவும் யாழ். மாவட்ட செயலகம் முன்பாகவும் இப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் நாயகமாக நவநீதம்பிள்ளை அம்மையார் பதவி வகித்த வேளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன் போதும் முன்னாள் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோதும் (யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில்) இவ்விரு இடங்களிலும் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு காணாமற் போனவர்களின் உறவினர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள், உறவினர்கள் தொடர் போராட்டங்களை வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இனவிடுதலைப் போராட்டத்தை இல்லா தொழிக்கும் நோக்குடன் அரச பயங்கரவாதம் சர்வதேச நாடுகளின் துணையுடன் மேற்கொண்ட கொடிய யுத்தம் தமிழ் மக்களை நலிவுற்ற சமூகமாக மாற்றியுள்ள அதேவேளை நாளாந்தம் கண்ணீர் சிந்தவும் வைத்துள்ளது.

தமிழர்களுக்கு எதிராக போரிலே இழைக்கப்பட்ட கொடுஞ்செயல்களுக்கு சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தி போர்க்குற்றங்களில் ஈடுப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

கைகளில் பிள்ளைகளின் புகைப்படங்களுடன் வீதிகளில் அமர்ந்து கண்ணீருடன் தமிழ்த் தாய்மார்களின் துயரைப் போக்கவேண்டும்.

தமிழ் மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புடன் வாக்களித்து நல்லாட்சி அரசு என்று கூறப்படும் இந்த அரசை உருவாக்கியுள்ளனர். நாட்டு மக்கள் அனைவருக்கும் உரித்தானது இந்த நல்லாட்சி அரசு என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

குண்டுச் சத்தங்கள் இல்லை. வீதியோரங்களில் சூட்டுக் காயங்களுடனும் சிதைவடைந்த நிலையில் உடல்கள் மீட்கப்படவில்லை. வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து கைதுசெய்யப்படவில்லை. ஊரடங்கு, வீதித் தடை, பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை.

வானத்தில் வட்டமிடும் போர் விமானங்களின் இரைச்சல் இல்லை, வைத்தியசாலைகள், பாடசாலைகள், கோவில்கள், சந்தைகள் மீதுதாக்குதல்கள் என்று வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்துடன் 30 ஆண்டுகளாக நிழல் போல் தொடர்ந்த போர்க்கால அவலங்கள் இல்லை. ஆனாலும் தமிழ் மக்கள் நிம்மதியாக இன்றும் இல்லை.

போர்க்காலப் பாதிப்புக்களிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் நலிவுற்ற இனத்தை மேலும் நலிவுறச் செய்யும் நடவடிக்கைகளையே இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சர்வதேச தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் தமிழ் மக்களின் தற்கால நிலையை வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை ஐ.நா. பொதுச் செயலாளரின் யாழ். வருகையின் போதும் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலப் போராட்டம் முடிவுக்குகொண்டு வரப்பட்டுவிட்டது. இந்த உண்மையை நாம் மறுக்கவில்லை. போர்ச்சூழல் இல்லாமல் செய்யப்பட்டதையும் நன்மையாகவே கருதுகின்றோம். அதே சமயம் போரைத் தமிழர்கள் விரும்பி ஏற்கவில்லை என்பதையும் சிங்களவர்கள் ஏற்க வேண்டும்.



போர்க் காலத்தில் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் காணாமற்போனவர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் வழிவகுக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை மேலும் பாதிப்புக்களுக்குட்படுத்தாமல் சமவுரிமையுடன் நிம்மதியாக வாழ விட வேண்டும்.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல் - பொன் ஒன்று கண்டேன்................

படம் - படித்தால் மட்டும் போதுமா

பாடியவர்கள்-பி.பி.ஸ்ரீநிவாஸ்,டி.எம்.சௌந்தரராஜன்

இசை - எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி

வரிகள்: கண்ணதாசன்



பொன் ஒன்று கண்டேன்
பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏனென்று நான் சொல்ல வேண்டுமா

பூ ஒன்று கண்டேன்
முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்ல வேண்டுமா

நடமாடும் மேகம் நவநாகரிகம்
அலங்காரக் கிண்ணம் அலை போல மின்னும்
நடமாடும் செல்வம் பணிவான தெய்வம்
பழங்காலச் சின்னம் உயிராக மின்னும்

துள்ளி வரும் வெள்ளி நிலா
துள்ளி வரும் வெள்ளி நிலா
துவண்டு விழும் கொடியிடையாள்
துவண்டு விழும் கொடியிடையாள்
விண்ணோடு விளையாடும்
பெண் அந்த பெண்ணல்லவோ
சென்றேன் அங்கே கண்டேன் வந்தேன்

பெண் ஒன்று கண்டேன்
பொன் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏனென்று நான் சொல்ல வேண்டுமா

நான் பார்த்த பெண்ணை
நீ பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை
நான் பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை
நான் பார்க்கவில்லை

உன் பார்வை போலே
என் பார்வை இல்லை
நான் கண்ட காட்சி
நீ காணவில்லை
நான் கண்ட காட்சி
நீ காணவில்லை


என் விழியில் நீ இருந்தாய்
என் விழியில் நீ இருந்தாய்
உன் விழியில் நான் இருந்தேன்
உன் வடிவில் நான் இருந்தேன்

நீயின்றி நான் இல்லை
நானின்றி நீ இல்லையே
சென்றேன் கண்டேன் வந்தேன்

பூ ஒன்று கண்டேன்
பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

பூ ஒன்று கண்டேன்
முகம் காணவில்லை
ஏன் என்று நான்
சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்ல வேண்டுமா

# கொசுவால் பரவும் கொடிய நோய்கள்





உலகின் ஆபத்தான ஜீவராசி என்றால் சிங்கம், புலி என்று எண்ண வேண்டாம்...அது கொசுதான். உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்துக்கொண்டிருக்கின்றன கொசுக்கள். ஆண்டு முழுதும் உலகின் ஏதாவது ஒரு பகுதி, கொசுக்களால் பேரழிவைச் சந்தித்துக்கொண்டே இருக்கிறது. கொசுக்களால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கொசுக்களை ஒழிக்க வேண்டும் என்பதை மையக் கருத்தாகக் கொண்டு, ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி 'உலகக் கொசுக்கள் தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது. கொசுக்களில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றில், மலேரியாவுக்கு காரணமான 'அனோபிலஸ்' மற்றும் டெங்குவைப் பரப்பும் 'ஏடிஸ் ஏஜிப்டி' கொசு மிகவும் ஆபத்தானவை.

ஏடிஸ் ஏஜிப்டி குடும்பத்தைச் சேர்ந்த கொசுக்கள், அளவில் பெரிதாக இருக்கும். இவை, பகல் நேரங்களில் கடிக்கும். இந்தக் கொசுவால் டெங்கு, சிக்குன் குனியா முதலான மோசமான வைரஸ் கிருமிகள் பரவுகின்றன.

### மலேரியா காய்ச்சல்

பிளாஸ்மோடியம் பாராசைட் என்கிற ஒட்டுண்ணி, இரத்த செல்களைப் பாதித்து பரவும் ஆற்றல் வாய்ந்தது. ஒரு மனிதரிடம் இருந்து, இன்னொரு மனிதருக்கு இந்த ஒட்டுண்ணி, கொசுக்கள் மூலமாகத்தான் பரவுகிறது.

அனோபிலஸ் எனும் பெண் கொசுக்கள் மலேரியா பாதித்த நபரிடம் இருந்து இரத்தத்தை உறிஞ்சும்போது, அதன் உடலில் பிளாஸ்மோடியம் பாராசைட் ஒட்டுண்ணி பரவும். பிறகு, மற்றொரு மனிதரை அந்தக் கொசு கடிக்கும்போது, அவருக்கும் இந்த நோய்த் தொற்று ஏற்படுகிறது.

கொசு கடித்த உடனே மலேரியா வந்துவிடாது. ஓரிரண்டு வாரத்துக்குள் மலேரியாவுக்கான அறிகுறிகள் வெளிப்படும்.

ஆரம்பத்தில் காய்ச்சல், தலைவலி, வாந்தி, சோர்வு போன்றவை இருக்கும். ஆனால், பாதிப்பின் தீவிரம் அதிகமானால், மெல்ல மரணத்தைக்கூட ஏற்படுத்த வல்லது. இந்தக் கிருமி இரத்த அணுக்களையும் கல்லீரலையும் பாதிப்பதால்தான் மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன. குழந்தைகளுக்கு மலேரியா காய்ச்சல் வந்தால், உடனடியாக வைத்தியரைச் சந்தித்து சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம். ஏனெனில், உலகம் முழுவதும் குழந்தைகள்தான் மலேரியா காய்ச்சலால் அதிக அளவு பாதிக்கப்படுகிறார்கள்.

உலகில் பாதிப் பரப்பளவில் மலேரியா காய்ச்சலைப் பரப்பும் கொசுக்கள் இருக்கின்றன. மலேரியா அபாயம் உள்ள நாடுகளுக்கோ இடங்களுக்கோ செல்ல நேர்ந்தால், மலேரியா தடுப்பூசி போட்டுக் கொள்வது நல்லது.

### டெங்கு காய்ச்சல்


கடந்த 10 ஆண்டுகளில் உலகையே ஆட்டிப்படைக்கும் காய்ச்சல் எதுவென்றால், அது டெங்குதான். மழைக்குப் பிறகு டெங்குவைப் பரப்பும் கொசுவின் வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

இந்த வைரஸ் ஏடிஸ் ஏஜிப்டி கொசுவுக்குள் சென்றுவிட்டால், 6 - 10 நாட்களுக்குள் அந்த வைரஸ் கொசுவின் உடலில் முழுவதுமாகப் பரவிவிடும். பின்னர், கொசுவின் வாழ்நாள் முழுமைக்கும் உடலில் வைரஸ் இருக்கும். அந்தக் கொசு உயிருடன் இருக்கும் வரையிலும் மனிதர்களிடம் காய்ச்சலைப் பரப்பும்.

குழந்தைகள், இளம் வயதினர், பெரியவர்கள், முதியவர்கள் என யாருக்கு வேண்டுமானாலும் டெங்கு காய்ச்சல் வரலாம். இந்தக் காய்ச்சல் வந்தால், 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு உடல் வெப்பநிலை சரசரவென ஏறும். கடும் தலைவலி வரும். கண்கள் எரிச்சலாக இருக்கும். தசைகள் மற்றும் மூட்டு இணைப்புகளில் கடும்வலி ஏற்படும். வாந்தி, வீக்கம், தோலில் எரிச்சல் ஏற்படும். இரத்தத்தில் உள்ள தட்டு அணுக்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பிக்கும். இந்த தட்டணுக்கள்தான் இரத்தம் உறைதலுக்கு முக்கிய காரணம்.

ஏழு நாட்களுக்குள் உடனடியாகக் கண்டுபிடித்து இதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும். இல்லை எனில், கடும் வயிற்றுவலி ஏற்படும். அதைத் தொடர்ந்து, வாந்தி, மூச்சு விடுதலில் சிரமம், இரத்தம் உறையாமை காரணமாக இரத்த வாந்தி, சுவாசப் பாதையில் இரத்தக் கசிவு ஏற்படும். இது, ஆபத்தான நிலை. எனவே, இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் வைத்தியரைச் சந்திப்பது அவசியம்.

# நோய் நீக்கும் எருக்கு இலைக் குளியல்



பிரம்மாவிடம் சாபம் பெற்ற நவக்கிரகங்களின் தொழு நோய் நீங்கிய நாள், தை மாதத்தில் வரும் ரத சப்தமி தினமாகும். அன்றைய தினத்தில் ஏழு எருக்கு இலைகள், எள், மஞ்சள் கலந்த அரிசி ஆகியவற்றைத் தலையில் வைத்து நீர் நிலைகளிலோ, வீட்டிலோ குளிக்கவேண்டும். பின்னர் சூரிய வழிபாடு செய்து அருகில் உள்ள கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டால் நவக்கிரகங்களால் ஏற்படும் துன்பங்கள் விலகும் என்பது ஐதீகம்.

அர்க்கன் என்றால் சூரியன் என்று பொருள். பத்ரம் என்றால் இலை என்று பொருள்படும். சூரியனுக்கு உகந்த பத்ரமாக இருப்பதால் எருக்கு இலைக்கு அர்க்க பத்ரம் என்று பெயர். அர்க்கபத்ரம் என்பதே பிறகு எருக்கு பத்ரம், எருக்கு இலை என்று ஆனது. நோய்களும் அதனால் ஏற்படும் துன்பங்களும் சூரிய பகவானின் அருளால் நீங்கவேண்டும் என்று ரத சப்தமியன்று அர்க்க பத்ரஸ்நானம் எனப்படும் எருக்கு இலைக்குளியல் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணித்தலைமையிலிருந்து நீக்கப்பட்டமை "வலித்தது"

இலங்கை அணியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையைத் தனிப்பட்ட விடயம் எனக் குறிப்பிட்ட திலகரட்ண டில்ஷான், அதுபோன்ற தனிப்பட்ட விடயங்கள் குறித்துக் கவலைப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்த போதிலும் அணித்தலை மையிலிருந்து நீக்கப்பட்டமை வலித் ததாகத் தெரிவித்தார்.

இலங்கையின் முன்னாள் தலைவரான திலகரட்ண டில்ஷான், ஒரு நாள் சர்வதேசப் போட்டி களிலிருந்து நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை - அவுஸ் திரேலிய அணிகளுக்கிடையிலான 3 ஆவது போட்டியுடன் ஓய்வு பெற் றார். ஓய்வுபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இலங்கை அணியின் தலைமைப் பதவியிலிருந்து குமார் சங்கக்கார வும் மஹேல ஜெயவர்தனவும் வில கிய பின்னர், அந்தப் பதவி, திலகர ட்ண டில்ஷானுக்கு வழங்கப்பட்டது. எனினும், அப்பதவிக்காகத்தான் திட்டமிட்டிருக்கவில்லை என அவர் தெரிவித்தார். "அணித்தலைமைப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு நான் திட்டமிட்டிருக்கவில்லை. ஆனால், இன்னொருவரைக் கண்டுபிடிக்கும் வரை, ஆறு மாதங்களுக்கு அப்பத வியை ஏற்குமாறு, இலங்கை கிரிக் கெட் சபையின் தலைவர் என்னிடம் கேட்டார்" என, டில்ஷான் தெரிவித் தார். தனது காலத்தில், தனக்கு அதிர் ஷ்டம் இருந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், அதன்போது தற் போதைய தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தொடர்பில் தெரிவித்த கரு த்து, மத்தியூஸ் மீதான விமர்சனமா என்ற கேள்வியை எழுப்பியது.

"துரதிர்ஷ்டவசமாக, இரண்டு பந்துவீச்சாளர்களையும் நாம் இழந் திருந்திருந்தோம். முரளி ஓய்வுபெற் றிருந்தார். நுவான் குலசேகரவுக்குக் காயம் ஏற்பட்டிருந்தது. அஜந்த மென் டிஸ்ஃக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. சிறப் பான வளங்கள், எனக்கு இருந்தி ருக்கவில்லை. அஞ்சலோ மத்தி யூஸ்ஃக்கு ஓராண்டாக கெண் டைக்கால் பின்தசை உபாதை ஏற்பட்டிருந்தது. அதனால் அவர் பந்து வீசியிருக்கவில்லை. அது என்னுடைய துரதிர்ஷ்டமாக இருக்க வேண்டும். ஏனென் றால் நான் பதவி விலகிய பின்னர், ஒரு வாரத் துக்குப் பின் னர் நாங்கள் அவுஸ்திரேலியாவுக் குச் சென்றோம். அந்த வாரத்தில், மத்தியூஸ் பந்துவீச ஆரம்பித்தார். மஹேலவின் நல்ல அதிர்ஷ்டம் காரணமாகத் தான் அது இருக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட் டார்.

டில்ஷானின் தலைமைத்துவத் தின் கீழ், 9 போட்டிகளில் விளையா டிய மத்தியூஸ், 16 இனிங்ஸ்களில் 4 இனிங்ஸ்களில் மாத்திரமே பந்து வீசியிருந்தார். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 22 போட்டிகளில் 12 போட்டிகளில் பந்துவீசிய மத்தியூஸ், இருபதுக்கு-20 சர்வதேசப் போட் டிகளில் 3 போட்டிகளில் எந்தவொரு போட்டியிலும் பந்துவீசியிருக்கவி ல்லை. ஆனால், டில்ஷானின் தலைமைத்துவத்தின் கீழ் மத்தி யூஸ் விளையாடிய இறுதி 6 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளிலும் அவர் பந்துவீசியதோடு இறுதி 5 டெஸ்ட்களில் ஒரே ஓர் இனிங்ஸைத் தவிர அனைத்து இனிங்ஸ்களிலும் அவர் பந்துவீசியிருந்தார். எனவே, மத்தியூஸ் வேண்டுமென்றே அவ் வாறு செயற்பட்டார் என, டில்ஷானின் கருத்தை எடுத்துக் கொள்ள முடியாது.

தென்னாபிரிக்க அணிக் கெதிராக 2011 ஆம் ஆண்டு இறுதியிலும் 2012ஆம் ஆண்டு ஆரம்பத்திலும் இடம்பெற்ற தொடரின் முடிவில், அணித் தலைவர் பதவி யிலிருந்து திடீரென நீக்கப்பட்ட டில் ஷான், அது குறித்தும் கருத்துத் தெரிவித் தார். "தென்னாபிரிக்கத் தொடரின் முடிவில், எல்லாவற்றையும் தூக்கி ஓரமாக வைத்தேன். அவுஸ்தி ரேலியாவுக்குச் சென்றேன், 500 ஓட்டங்களைப் பெற்றேன், தொடரின் நாயகனாகத் தெரிவானேன். யார் தலைவராக இருப்பது என்பது எனக் குத் தேவையில்லாதது. என்னை அணித்தலைவர் பதவியிலிருந்து யார் அகற்றினார் என்பது தொடர்பாக நான் கவனம் செலுத்தியிருக்க வில்லை. நான் எப்போதும் நாட் டுக்காக விளையாடுபவன். இவ்வா றான தனிப்பட்ட விடயங்கள் குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனால், எனக்கு அது வலித்தது" என்று தெரிவித்தார்.

இது தவிர, தலைவராக டில்ஷான் நியமிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது தொடரான இங்கிலாந்துக்கான இலங்கைத் தொடரில், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 193 ஓட்டங் களைக் குவித்த டில்ஷான், அப் போட்டியில் விரலில் காயமடைந்தார். அதன் காரணமாக, அடுத்த போட் டியில் அவர் பங்குபற்ற முடியாது போக, அணித்தலைவர் பதவியை ஏற்பதற்கு எவரும் தயாராக இருந்தி ருக்கவில்லை என டில்ஷான் தெரி வித்தார். அப்போது, சனத் ஜெயசூரி யவையோ அல்லது திலின கண்டம் பியையோ அணித்தலைவராக்கும் பேச்சும் காணப்பட்டதாகவும் டில் ஷான் தெரிவித்தார். அடுத்த போட்டி யில், குமார் சங்கக்காரவே அணித்த லைவராகச் செயற்பட்டிருந்தார்.



தனது ஓய்வு குறித்துக் கருத்துத் தெரிவித்த டில்ஷான், ஓய்வு பெறு வதற்குத் திட்டமிட்டிருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், இன்னும் ஓர் ஆண்டுக்காவது விளையாடும் எதிர்பார்ப்பிலேயே இத்தொடரில் களமிறங்கியதாகவும், ஆனால், 25 ஆம் திகதி நித்திரையிலி ருந்து எழும் போது, ஓய்வுபெறு வதற்கான நேரம் இதுவென உணர்ந் ததாகவும் தெரிவித்தார். "உண் மையைச் சொல்வதானால், இன்னும் ஓர் அல்லது இரண்டு ஆண்டுக ளுக்கு என்னால் விளையாட முடியும். ஆனால், எதிர்காலத்தைப் பற்றிப்பார்க்க வேண்டி யுள்ளது. இரண்டு ஆண்டுகள் நான் விளையாடினால், அடுத்த உலகக்கிண்ணத்துக்கு, 18 மாதங்களே இருக்கும். அது, அணியைப் பொறுத்த வரை சரியானதன்று" என அவர் மேலும் தெரிவித் தார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து அவர் ஓய்வு பெற்றா லும், எதிர்வரும் 6, 9 ஆம் திகதி களில் இடம்பெற வுள்ள இருபதுக்கு-20 சர்வ தேசப் போட்டிகளில், அவர் பங்கு பற்றிய பின்னரே, அனைத்து வகையான போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# அழகு ராணி



ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன. ஆனால் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறை சாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

❖நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு.

❖நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு தேவதை!" என்றது எலி.

❖மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

❖நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.

❖என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!" குரங்கு சொல்லியது.

❖ஆமாம்... ஆமாம்...!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

❖நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

❖எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி.

❖போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி.

❖நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

❖நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு.

❖நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.

❖அப்படியே செய்கிறோம்..." அனைத் தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகிய அழகுராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

❖எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பலகீனமாக உதவி கேட்டது.

❖நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பி சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்கு சென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.


❖அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

❖முயல்தான் அழகு ராணி! இதை அழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்! குருவி என் நண்பன்தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்டகோணலாகின.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 825

வி.ஜே.எஸ்.விதுஸ்




கு.ரஜீவன்




றொகான்




ரஜீவ்




சிந்து







நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 49

# நீரிழிவு சம்பந்தமான வரலாற்றுப்பதிவுகளும், அறிகுறிகளும்




நமது உடலில் ஓடும் இரத்தத்தில் அளவுக்கு அதிகமான சர்க்கரை (குளுக்கோஸ்) காணப்படும் நோய் நிலையே நீரிழிவு, சலரோகம், சர்க்கரை அல்லது சீனி வியாதி ஆகிய பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

உலகம் முழுவதிலும் 30 மில்லியன் மக்களை இந்த நோய் பீடித்திருக்கிறது. ஐக்கிய இராச்சியத்தில் மட்டும் 1.4 மில்லியன் மக்களிடம் இந்த நோய் காணப்படுகின்றது. மாற்ற முடியாத இந்த நோயினால் அவதிப்படுபவர்கள் இதைக் கட்டுப்படுத்தி சாதாரண வாழ்க்கை வாழ முடிந்த போதிலும் இதன் பக்க விளைவுகளாகத் தோன்றும் இருதய நாடி நோய்கள், அங்கநாடி நோய்கள், பக்க வாதம், விழித்திரை நோய், சிறுநீரக நோய், நரம்பு நோய்கள் ஆகியன இவர்களின் ஆயுட்காலத்தை மட்டுப்படுத்தி விடுகின்றது.

## வரலாற்றுப் பதிவுகள்

மனித வாழ்க்கையில் மருத்துவக்கலை ஆரம்பமான காலத்திலிருந்தே நீரிழிவு மனிதர்களைத் தாக்கும் உடற்கொல்லி நோய் என்பது உணரப்பட்டிருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஹிப்போகிரட்டிஸ் என்ற கிரேக்க மருத்துவர் "சதையைக் கரைத்து சிறுநீராக வெளியேற்றி விடுகின்ற கொடிய நோய் இது" எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்திய மருத்துவ நிபுணரான சுஸ்ருதா "எறும்புகளையும், பூச்சிகளையும் மொய்க்க வைக்கும் தேன் போன்ற இனிமையான சிறுநீரைப் போக்குவது நீரிழிவு நோயின் அறிகுறி" எனப் பதிவு செய்திருக்கிறார். இந்நோயாளர்கள் இரு வகையினர் என்றும், ஒரு வகையினர் வயதான, பருத்த உடம்மைக் கொண்டவர்கள் என்றும், மற்ற வகையினர் உடல் மெலிந்து குறைவான ஆயுட்காலம் கொண்டவர்கள் என்றும் சுஸ்ருதா கூறியிருப்பது இன்றைய விஞ்ஞான மருத்துவ யுகத்தில் கூறப்படும் முதலாம் வகை, இரண்டாம் வகை நீரிழிவு வியாதியை ஒத்திருப்பது - அன்றைய இந்திய மருத்துவம் அடைந்திருந்த உயர்நிலையை உறுதிப்படுத்துவதாகும்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கில மருத்துவரான தோமஸ் வில்லிஸ் (1621 - 1675) நீரிழிவு நோயாளர்களின் சிறுநீர் இனிப்பாக இருப்பதை மீள் கண்டுபிடிப்புச் செய்தார். மத்தியூ டொப்ஸன் (1735 - 1784) என்ற ஆங்கில மருத்துவர் இந்த இனிமைக்கு சிறுநீரில் குளுக்கோஸ் வெளியாவதே காரணம் என நிரூபித்தார்.

போல் லாங்கஹான்ஸ் (1847 - 1888) என்ற ஜேர்மனிய உடற்கூற்று விஞ்ஞானி நமது உடலிலுள்ள கணையம் **(Pancreas)** என்ற உறுப்பிலுள்ள கலன்களிலிருந்து ஒரு வகையான சுரப்புநீர் உண்டாவதைக் கண்டு பிடித்தார். ஆனாலும் இச்சுரப்புநீரின் செயற்பாடு பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. இவர் கண்டுபிடித்த கலன்கள் லாங்கஹான்ஸ் கலத்தீவுகள் **(Islets of Langerhans)** எனப் பெயர்பெற்றன.

1921 ஆம் ஆண்டில் கனடாவிலுள்ள ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரடெரிக் பான்டிங் **(Fredetick Fanting)** என்ற சத்திர சிகிச்சை நிபுணரும், அவரது மாணாக்கரான சாள்ஸ் பெல்ட் **(Charles Belt)** என்ற மருத்துவ மாணவரும், ஜேம்ஸ் கொல்லிப் **(James Collip)** என்ற உயிர் வேதியியலாளரும் (Biochemist) இணைந்து "இன்சுலின்" என்ற சுரப்பையும், கணையத்திலுள்ள லாங்கஹான்ஸ் கலத்தீவுகளிலிருந்து சுரந்துவரும் இச்சுரப்பே நமது இரத்தத்தில் காணப்படும் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது என்பதையும் கண்டுபிடித்தனர்.

இக்கண்டுபிடிப்பு வெளியிடப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் 1922 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் அமெரிக்க மருத்துவரான எலியட் ஜொஸ்லின் மஸ்ஸசூஸெற் நகரத்தில் இன்சுலின் சுரப்பை உபயோகித்து அந்த ஆண்டு முடிவதற்குள் 293 நீரிழிவு நோயாளர்களின் இரத்த குளுக்கோஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சிறுநீரில் குளுக்கோஸ் வெளியேறாமல் செய்து காட்டினார். நீரிழிவு நோயின் இக்காலச் சிகிச்சை முறை உதயமானது.

## இன்சுலினும் (Insulin) இரத்தக் குளுக்கோஸ் கட்டுப்பாடும்

நமது உடலிலுள்ள கோடிக்கணக்கான கலன்களின் உயிரியக்கங்களுக்கு வேண்டிய ஊட்டச் சக்தியை குளுக்கோஸ் என்ற சர்க்கரையே கொடுத்துவருகிறது.

நாம் உட்கொள்ளும் உணவிலுள்ள மாப்பொருட்கள் அனைத்தும் சமிபாடு அடையும் போது குளுக்கோஸ் உருவாகிறது. இது தவிர நமது ஈரலில் காணப்படும் சேமிப்புச்சக்கரைகளும் **(Glycogen )** குளுக்கோஸாக மாற்றப்படுகிறது. நாம் உணவு உட்கொள்ளாது பட்டினி இருக்கும் காலங்களில் உடலில் சேமிப்பில் இருக்கும் கொழுப்புப் பொருட்களும், புரதப்பொருட்களும் குளுக்கோஸாக மாற்றப்பட்டு உடலின் உயிரியக்கங்களுக்கு வேண்டிய ஊட்டச் சக்தியைக் கொடுக்கின்றன.

சாதாரண நிலையில் கணையத்தின் லாங்கஹான்ஸ் பகுதியிலிருந்து சுரக்கப்படும் இன்சுலின் சுரப்பு இரத்தத்திலுள்ள குளுக்கோஸின் அளவைக் கவனமாகப் பேணி ஒரே சீராக வைத்திருக்கும்.

நாம் சாதாரணம் எனக்கூறும் இந்த நிலையில் இரத்தப் பிளாஸ்மாவிலுள்ள குளுக்கோஸ் அளவு லீற்றருக்கு 3.5 முதல் 7.8 மில்லி மோல் அளவினதாக (70 முதல் 14 மில்லி கிராம் / 100 மில்லி லீற்றர்) இருக்கும். இரத்த பிளாஸ்மாவிலுள்ள குளுக்கோஸ் 7.8 மில்லி மோல் அளவிற்கு மேற்படும் போது இந்த குளுக்கோஸ் சிறுநீரகங்களால் வெளியேற்றப்பட்டு சிறுநீரில் குளுக்கோஸ் இழக்கப்படுகிறது. இந்த நிலையே நீரிழிவு.

இன்சுலின் பல வழிகளில் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்துகிறது. முக்கியமாக கலங்களுக்குத் தேவையான குளுக்கோஸை இரத்தத்திலிருந்து உள்ளெடுக்கும்படி தூண்டுவதும், இரத்தத்தில் மேலதிக குளுக்கோஸ் காணப்படும் போது அதை ஈரலில் சேமிப்புச் சர்க்கரையாக **(Glycogen)** மாற்றி சேமிக்கச் செய்வதும் உணவு உட்கொண்டதும் இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் அளவு கூடும் போது அதிக அளவில் இன்சுலின் சுரப்பதும், இரத்தக் குளுக்கோஸ் குறையும்போது இன்சுலின் சுரப்பதைக் குறைப்பதும் இன்சுலின் ஆற்றும் பணிகளாகும்.

## குளுக்ககன் (Glucagon)

கணையத்திலிருந்து வெளிவரும் மற்றொரு சுரப்பு "குளுக்ககன்" எனப்படும் இச்சுரப்பு உடலுக்கு குளுக்கோஸ் தேவைப்படும்போது ஈரலில் சேமிப்பில் இருக்கும் சர்க்கரையை விடுவித்து இரத்தத்திலிருக்கும் குளுக்கோஸின் அளவை அதிகரிக்கச் செய்யும், இந்தவகையில் இச்சுரப்பு இன்சுலினுக்கு எதிராக செயல்புரியக்கூடும்.

## அறிகுறிகள்

அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிகரித்த தண்ணீர்த் தாகம், மங்கலான பார்வை ஆகியன நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகளாகும். அவையாவன:

1. அடிக்கடி சிறுநீர் கழித்தல், இரவில் பலதடவை நித்திரைவிட்டு எழுந்து சிறுநீர் கழிக்க நேரிடும்.
2. அதிகரித்த தண்ணீர் தாகம்
3. அளவுக்கு மீறிய களைப்பு, சோர்வு
4. அதிக பசி
5. அதிக உணவு உட்கொண்டும் எடைக்குறைவு
6. மங்கலான பார்வை - பார்வையில் ஏற்படும் சடுதியான மாற்றம்
7. உலர்ந்த சருமம்
8. ஜனன உறுப்புக்களில் சொறிவு, நீர்க்கசிவு
9. உள்ளங்கைகள், கால் பாதங்களில் ஏற்படும் விறைப்பு, ஊசி குத்துவது போன்ற உணர்வு
10. காயங்கள் மாறுவதற்கு பலநாட்கள் செல்லுதல்.
11. எதிர்ப்புச் சக்தி குறைந்து தொற்று நோய்கள் சுலபமாகப் பீடித்தல்.

வைத்திய கலாநிதி சிவ தியாகராஜா
(B.Sc., M.B.B.S, Ph.D)
லண்டன்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org